குறளியம்

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்

வேலா வழங்கும் திங்கள் இதழ்

தி. ஆ. 2012 சுறவம் 25-ஆம் பக்கல் (7-2-1981)

வேல் 1
வெற்றி 7



எங்கே? எங்கே?

பழகு தமிழ்ச் சொல்லருமை விளக்கும் அந்தப்
பன்மொழிதேர் நாவெங்கே? நாளும் இங்கே
அழகுதமிழ்த் தொன்மையினை வரைந்து காட்டும்
ஆற்றல்மிகு கையெங்கே? வஞ்சர் கூட்டம்
முழுவதையும் புறங்காட்டி ஓடச் செய்த
மூதறிவின் மொய்ம்பெங்கே? ஆய்வு மிக்க
எழுத்தாலும் பேச்சாலும் பகைவ ருக்கே
இடியேறாய் இங்கிருந்தோன் எங்கே? எங்கே?

—புலவர் பொதிகைச்செல்வன்.

குறளியத்தின் இரங்கல்

பாவாணர் மறைந்தாரே!

உலகத் தமிழ்க்கழகங் கண்ட உயர் நெறியாளர் — பாவாணர் அவர்கள் மறைந்தாரே! ஐயகோ! சொல்லுக்குச் சொல் வரலாறு வகுத்த வண்டமிழ்ச் சொல் ஆய்வறிஞர் மறைந்தாரே!

காந்தியார் பிறந்த நாளிலே பெருந்தலைவர் காமராசர் மறைந்ததை எப்படிப் பெருமையாகக்கொண்டு அனைவராலும் போற்றப்பட்டதோ, அப்படித் திருவள்ளுவர் பிறந்த நாளிலே பாவாணர் மறைந்தது நினைவுக்குரிய சிறப்பாகும்.

குறளியம் வெற்றி 2-இல் தமிழ்ப் பகைவரைச் சான்றுகளுடன் முறியடித்த வாழும் தமிழ்த் தெய்வம் என்று பாவாணரைப் பாராட்டி மகிழ்ந்தது. ஆனால் இன்று, வாழ்ந்த தமிழ்த் தெய்வமாகினார் பாவாணர்.

—வேலா, ஆசிரியர்

பரவட்டும் குறளியம்

இந்த இதழில்.........

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

குறளியம் — திங்களிதழ்

விலை உருபா **1-00**

ஆண்டுக் கட்டணம் உருபா 12—00

வாழ்நாள் வைப்புக் கட்டணம்

உருபா 100—00

குறளியத்தின் வாழ்நாள் உறுப்பினர்கள்

75-741. புலவர். திரு க. முருகையன்,
முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்.
இளங்காடு — அ. நி.
திருக்காட்டுப் பள்ளி (வழி)
தஞ்சை மாவட்டம்

76-750. திரு. திருமடத் தலைவர்
(ஆதீனக் கருத்தர்),
திருவண்ணா மலைத் திருமடம்
(ஆதினம்),
குன்றக்குடி — 623 206,
காரைக்குடி (வழி)
முகவை மாவட்டம்

77-751. திரு. அறங் காப்பாளர், (டிரஸ்டி)
ஐந்து கோவில் கடவுள் நிலையம்
(தேவசுதானம்),
குன்றக்குடி — 623 206
காரைக்குடி (வழி)
முகவை மாவட்டம்

78-752. திரு. இரா. துரை,
'அன்பு இல்லம்,'
102, மருத்துவ மனைத் தெரு,
கவுந்தப்பாடி — 638 455
பெரியார் மாவட்டம்

79-500. திரு. தி. அ. தங்கவேலு,
பொன் வணிகர்
திருச்செங்கோடு — 637 211
சேலம் மாவட்டம்

80-706. திரு. தனித்தமிழ். கதிர்.
தமிழ்வாணன்,
'பாவாணர் இல்லம்'
181, காந்தியடிகள் சாலை,
குடந்தை — 612 001
தஞ்சை மாவட்டம்

81-770. திரு. பெருந்தகை திருமுன்
(மகா சந்நிதானம்)
தருமைத் திருமடம் (ஆதினம்),
தருமைபுரம்,
மாயூரம் — 609 001
தஞ்சை மாவட்டம்

82-771. புலவர் திரு. ச. சோமசுந்தரன்,
தலைவர், சேக்கிழார் மன்றம்,
இராசிபுரம் — 637 408
சேலம் மாவட்டம்

83-786. திரு. வீ. ந. கிருட்டிணசாமி,
செயா தொழிலகம்
(இண்டஸ்ட்ரீஸ்)
துணி வணிகம்,
முக்கிய நெடுஞ் சாலை,
பவானி — 638 301
பெரியார் மாவட்டம்.

வேலா வழங்கும் திங்கள் இதழ் !

1 'வேலா'

குறளியம்

ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்.

☎ 74878

கலை-இலக்கிய அறிவாண்மைத் திங்கள் இதழ்

அ. பெ. எண்: 2,*3, மண்டப வீதி, ஈரோடு-638 001.

ஆசிரியர், நெறியாளர் :
வேலா இராசமாணிக்கம்

சிறப்பாசிரியர் :
கு. ச. ஆனந்தன்

ஆறாத் துயர் !

குறளியம்—வெற்றி 7—பிப்ரவரி முதல் நாளன்று வரவேண்டியதைப் பாவாணர் பிறந்த நாளாகிய இன்று (7—2—1902) அவரது நினைவாக வெளியிட்டு எங்கள் ஆறாத்துயரை ஆற்றுப்படுத்திக் கொள்கிறோம்.

தமிழுணர்வோடு அகரமுதலியை ஒழுங்குபடுத்தித் தொடர்ந்து வெளியிட்டு முடிக்கும் பணியை மேற்கொள்ளும் பெருமக்களாலோ, அரசாலோ தான் தமிழன்னையின் துயரை ஆற்றுப்படுத்த இயலும்.

வேலா

திருச்சி மாவட்டத் திருக்குறள் பேரவையின் செயலாளர் திரு.தி.சா. நாகராசன் "பாவாணர் வாழ்த்துப்பா" அனுப்பிவைத்தார். அது வந்தது. ஐயகோ ! பாவாணர் இறந்த செய்தியும் வந்ததே ! இதோ ...

தூயதமிழ் ஆய்ந்தவன் யார்? தொன்மரபைக் காத்தவன் யார்?
ஆயபல நற்பணிகள் ஆற்றினன் யார்? — ஏய
உலகத் தமிழ்க்கழகம் ஒண்முறையில் கண்ட
இலகுதமிழ்ப் பாவாண னே !

சொல்லுக்கு வேந்தன் ! தூயதமிழ்க்கு ஏர்உழவ[ன்]
நல்லாட்சி இன்றமிழில் நாட்டுதற்கு—வல்லாட்சி
தீமையினைத் தீய்த்துத் தீந்தமிழைத் தேற்றியவன்
தாய்மையுளப் பாவாணன் தான் !

பாவாணர் மறைந்தாரே!

வாழ்க்கைச் சுருக்கம்; பேராசிரியர், ஞா. தேவநேயப் பாவாணர் க. மு., கி. க. அ.

தி. பி. 1933 சுறவம் 26 (7-2-1902) இல் திருநெல்வேலி மாவட்டம், சங்கர நயினார் கோவில் என்னும் ஊரில் திரு. ஞானமுத்த னாருக்கும் திருவாட்டி பரிபூரணம் அம்மை யாருக்கும் மகவாய்த் தோன்றினார். பண்டி தர், புலவர், வித்துவான் பட்டங்களைப் பெற்ற பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத் தில் கலை முதுவர் (M. A.) என்னும் ஆங்கிலப் பட்டத்தையும் சிறப்புறப் பெற்றுச் செம்மை யுற விளங்கினார்.

34-ஆண்டுகள் பல்வேறு கல்வி நிலையங் களில் பாங்குறப் பணியாற்றிப் பைந்தமிழை வளர்த்த இவர், இருபத்தைந்து தமிழ் நூல் களும் மூன்று ஆங்கில நூல்களும் எழுதி யுள்ளார். இவரின் உலக முதற்செம்மொழி என்னும் ஆங்கில நூல் செருமானிய நாட்டுப் பேராசிரியர் மாக்கசுமுல்லரின் வழூஉக் கொள் கைகளைச் சிதறடிப்பதாயும் உலகத்தாரின் கவனத்தை ஈர்ப்பதாயும் அமைந்துள்ளது.

நாற்பதாண்டுகள் உழைத்து ஐந்திலக்க உருபா செலவில் (435 பக்கங்கள் கொண்ட) சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி வெளிக் கொணரப்பட்டது. அதனைத் தம் கூர்மையான ஆராய்ச்சியால் திறனாய்ந்து, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள் என்னும் நூலை வெளியிட்டார். அது பொதுமக்களையும் அதிகாரிகளையும் திடுக்கிடச் செய்துவிட்டது.

முன்னாள் முதல்வர் — கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களால் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் இயக்கு நராகப் பாவாணர் அமர்த்தப்பட்டார்.

பத்தாண்டுகளுக்கு முன்பே எவரும் செய்யாத பெரும் பணியாக உலகத் தமிழ்க் கழகம் எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். அதில் புலவர்களையும் பகுத்தறிவு இயக்கத் தன்மதிப்பாளர்களையும் சமயத் துறையாளர் களையும் பல்வேறு கட்சிகளையும் சார்ந்த எண்ணற்ற தொண்டர்களையும், மாணவர் களையும் ஒருங்கிணைத்தார். அஃதே தனித் தமிழ் இயக்கமாகத் தவப் பெருமகனார் மறை மலையடிகளாருக்குப் பின் இயங்கியது.

இப்படித் தமிழின் உயர்வுக்காக வாழ்ந் தவர்; ஒப்பற்ற மிமிசை மாந்தர்; அத்தகு தமிழ்த் தெய்வமாக வாழ்ந்த பெருமகன் பாவாணர் தி. பி. 2012 சுறவம் முதல்நாள் (15-1-1981) நள்ளிரவு 12-30 மணியளவில் காலமானார். அவரின் இழப்பு, அன்னைத் தமிழுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

பாவாணர் இரங்கற் செய்திகள்:

பாவாணர் ஒரு நிறைகுடம். தமிழரும், தமிழக அரசும் அவரைச் சரியாகப் பயன்படுத்த வில்லை. காரணியம், தமிழினம் இன்னும் விழிப்படையவில்லை. அவருக்கிணையான ஆய்வறிஞர்களைத் தமிழன்னை பெறுமுன் மறைந்துவிட்டாரே!

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
தலைவர், தமிழ்நாடு திருக்குறள் பேரவை.

தமிழின் புகழ்பாடப் பலர் பிறந்தனர். ஆனால் தமிழின்புகழிற்குரிய காரணியங்களை வகுத்துத் தந்த பெருமகனார் பாவாணர். தமிழுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு.

— முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. வி.

தனித் தமிழுக்காக வாழ்ந்து மறைந்த பெரியவர், சேரன் செங்குட்டுவன் புகழைவிட இளங்கோவடிகள் புகழே இன்றும் பேசப் படுகிறது. அரசியல், ஆட்சியாளர்களின் புகழைவிட பாவாணரின் புகழையே நாளைய உலகு பேசும்; புகழும்.

— திருக்குறளார்

வண்டமிழின் வைப்பகத்தை மறலி கொண்டான்.

பண்டைய நம் தமிழ்மொழியின் தொன்மை
தனை யுணராமல் பலமேல் நாட்டின்
கண்டமொழி தனைக்கலந்து பேசுகின்ற
கூட்டத்தைக் கடிந்தே நாளும்
எண்டிசையும் தனித்தமிழை எடுத்துரைத்தே
நந்தமிழர் இனத்தைக் காத்த
வண்டமிழின் வைப்பகத்தை கொள்ளை
வண்கொடிய மறலிதானே

— நினைவுக் கலையேந்தல் பெ. இராமையா,
கோவில்பட்டி.

தமிழுக்கோர் இழப்பு !

'தமிழர் தலைவர், தமிழ்க்குந் தலைவர்;
தமிழ்க்கோர் தீங்கெனில் தட்டிக் கேட்கும்
தலைவர் மறைந்தமை தமிழ்க்கோர் இழப்பே
தனித்தமி ழறிவும் தனித்தமிழ்ப் பற்றும்
உள்ளோர் ஈண்டு இனியார் உளரே ?
தமிழுக் காகவே தம்வாழ் நாளைப்
பணையம் வைத்த பெரியார் அவரே !
அவரிடம் நிரப்பவோர் ஆளிலை ஈங்கே
அவர்க்கினி நாம்செயும் நன்றிக் கடனாய்
அவர்கோட் பாட்டை அடியொற்றி வாழ்வதே.

— வி. பொ. பழனிவேலனார்.
தலைவர், தமிழியக்கம், தஞ்சை.

தமிழை இனி யார் காப்பார் ?

தமிழில் உள்ள ஒவ்வொரு சொல்லின் வரலாற்றையும் ஆராய்ந்து எடுத்துக்கூறிய ஆசிரியக் கோமான், பாவாணர் அவர்கள், உலகின் தலைசிறந்த மொழிநூல் பேரறிஞர். பணவருவாய் கருதாது வாழ்நாளெல்லாம் தமிழுக்குழைத்த தன்னேரில்லா தமிழ்ப்பெரும் புலவர்; மறைக்கப்பட்ட பல வரலாறுகளைத் தமிழர்க்கு வெளிப்படுத்திய பேரறிவாளர்; தன் ஆராய்ச்சித் திறத்தாலே பல ஆயிரம் தமிழிளைஞர்களை வீரத்தின் விளைநிலங்களாக மாற்றியவர். அந்தோ மறைந்தாரே !

— திராவிடர் கழகம்,
பாவேந்தர் இலக்கிய அணி, கடத்தூர்,

என் செய்வோம் !

ஆரியந்தான் மூத்த மொழி
சிறந்த மொழி தேவ மொழி !
அதன் குழந்தை தமிழென்றே
அறைந்து வந்த
பூரியரின் வாயடங்கச் செய்தவனே !
மொழிக்கடலே
பெரியோனே ! தமிழ்மொழியை மூடிவந்த
காரிருளை அடியோடு நீக்கவந்த கதிரவனே!
காசினிலே நீவிட்ட பணிமுடிக்க
யாருண்டு! யாருண்டு! மறைந்தனையே
எமைவிட்டு
அந்தந்தோ! என் செய்வோம் !
என்செய் வோம் யாம் !

— பாவலர் கொ. செ. சின்னப்பனார்,
கொம்மக்கோவில்.

தேவர்செய் தேன்குறளாம் சிந்தைவாழ்
சீர்சான்றோர்
தேவநேயப் பாவாணர் தெய்வமானார்—
காவலர்
ஆவலால் அந்தமிழை ஆர்வமுடன்
ஆய்ந்தாய்ந்தே
பூமலம் வந்தார் புகழ்

— பாவலர் செ. கி. இராமசாமி,
சேலம்–2

தமிழர் வரலாற்றைத் தக்கபடி தந்து
நிமிர வைத்தான் நம்மை நிலத்தில்-தமிழா !
அமிழா உணர்வெழுந்தே ஆர்த்து
வென்றோன் மாண்டால்
தமிழுக்குப் பேரிழப்புத்தான் !
செந்தமிழ்ச் சொற்பிறப்பைத் தேறி
அகரம்முதலி
தந்தோனை யாமிழந்தோம் தக்கோனை!
—அந்தவினை
முற்றும் பெறாமலே மூதறிஞன் மாண்டானே!
எற்றைக்குத் தேறுவோம் இங்கு !

— இரட்டைப் பாவலர்கள்,
ஈவப்ப இளவல், ஈரோடு.

பழந்தமிழின் நேருருவே ! பாவாண்மை
வேந்தே !
இழந்த புகழ்மீட்ட எந்தாய்!—தளர்ந்த
இனத்திற் குரமேற்றி இன்றமிழைக் காத்தாய்
மணம்பாடி நிற்குமென் வாய் !

— புலவர் இரா. வடிவேலன், க. மு.,
சிறப்புத்தலைவர், இலக்கியச் சுற்றம், ஈரோடு

குமரியை இழுத்துக் கொணர்ந்தவர்.

தமிழுக்குத் துணையே எம்விழிக்கு இணையே !
தமிழ்தான் மாந்தன் முதன்மொழி என்றோய்
இமிழும் கடற்குள் அமிழ்ந்த குமரியை
இழுத்துக் கொணர்ந்து எமக்குக் காட்டிய
துஞ்சா தோயே துஞ்சி னாயே !
முகத்தைக் கவிழ்த்தேன் கையால் மூடினேன்
அழுகையா வந்தது ! விம்மல்! ஏக்கம் ;
ஒன்றும் உள்ளேன உலர்ந்த தென்னுளம்
தேவநேய ! ஆஅஅ ஒஒஒ ஐயவோ ஒ
கற்றா பிரிந்தது ! கன்று ? . . . .
என்னாம் ! அம்மாஅ ! தமிழ்த் தாயே !

— ச. சிவசங்கு,
சிறுதண்டுநல்லூர்.

தமிழ்ப்புரட்சி ஏற்படும்

ஐயா பாவாணர் அவர்களின் அகரமுதலி வெளியிடப்பட்டால் (அ) தமிழ்ப் புலவர்கள் நடுவில் தவறான கருத்துக்களில் பாதி சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிடும். (ஆ) ஆங்கிலத்தில் உள்ள அறிவு விளக்க நூல்களைப் போல் தமிழில் எழுத முடியாது என்போரின் கூற்று பொய்யாகும். (இ) தமிழில் புதிய சொற்களைப் படைக்கும் முறை எளிமையாகும்.

சுருங்கச் சொன்னால், ஐரோப்பிய நாடுகளில் ஒரு கால கட்டத்தில் 'தொழிற் புரட்சி' ஏற்பட்டது போலப் பாவாணரின் அகரமுதலி வெளியிட்ட பிறகு இந்த நாட்டில் ஒரு 'தமிழ்ப் புரட்சி' ஏற்படும்.
எங்கள் எண்ணத்தை இனியார் மெய்ப்பிப்பர்?

— சொல்லாக்கப் புலவர் நெடுமிடல்
தமிழர் நட்பு மன்றம், கடத்தூர்.

பாவாணர் இறுதியாக அடைந்த சிறப்பு

5-வது உலகத் தமிழ் மாநாட்டு பந்தயத் திடல் கருத்தரங்கில் பாவாணர் அவர்கள் ஆற்றிய உரை ஒரு தனி முத்திரை. அதை அச்சிட்டு வழங்க வேண்டும். குமரி கொண்ட வரலாறு – மாநாட்டில் முதன்மை பெற்றமை அவர் வாழ்நாளிலேயே அவர் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

— திருக்குறள் மன்றம், பல்லடம்
(பாவாணர் இரங்கற் கூட்டம்)

நெஞ்ச மலர்கள் தொடர்ச்சி...

குறளியம் கருத்துப் பெட்டகம்

'குறளியம்' இதழ் கண்டேன். மகிழ்ச்சி மிகக் கொண்டேன். பாதுகாக்க வேண்டிய கருத்துப் பெட்டகமாக இதழ் அமைந்திருப்பது பாராட்டிற் குரியது.

பொழுது போக்கு இதழ்கள் பல்கிப் பரவியிருக்கும் தமிழகத்தில், தமிழர் வாழ்வை மலரச் செய்யும் தலையாய நோக்கோடு வெளிவரும் 'குறளியம்' மென்மேலும் தழைத்தோங்க நெஞ்சார வாழ்த்துகிறேன்.

— மு. சாயபு மரைக்காயர்,
க மு அறி இ.
தமிழ் விரிவுரையாளர்,
தாகூர் கலைக் கல்லூரி, புதுவை.

×

குறள்நெறியில் உழைத்திட அணியமாயுள்ளேன்

'குறளியம்' ஆறு இதழ்களும் கண்டு உவகை கொண்டேன். தங்களின் சீரிய பணியின்பால் பெரும் நம்பிக்கை தோன்றியுள்ளது. தனி மாந்தனின் ஒவ்வொரு செயலிலும் குறள் நெறியினைப் பின்பற்றும் வகையில் குறளியத்தில் நல்லறிஞர் பலரின் கருத்துகள் வெளியிடப் படுவது குறித்து மெத்த மகிழ்ச்சி. . . . . குறள் நெறியில் ஒன்றுபட்டு உழைத்திட அணியமாயுள்ளேன்.

மு. சீனிவாசன்,
திருச்சி-2

நெஞ்சமலர்கள்

தொண்டுள்ளத்தை எதிரொலிக்கிறது

தி. பி. 2011 — இன் இறுதித் திங்கள் இதழில் தாங்கள் எழுதியுள்ள ஆசிரியவுரை இன்றைய இரண்டு அரசியல் கட்சிக்காரர்களின் இழிந்த போக்கை எங்கட்கு விளக்கிற்று. இறுதியில், இளைஞர்களே வாருங்கள், குறளியம் நெறியைப் பரப்ப, என அழைப்பது தங்களின் தொண்டுள்ளத்தை எதிரொலிக்கிறது. சிலர் தான் முன் வருவர்; பலர் வரல் அரிது; ஏன் எனில் இளைஞர் குமுகாயம் பண்பாட்டு நிலையானும் பொருளியல் நிலையானும் மிக மெலிந்து செத்துக்கொண்டுள்ளது.

சி. நா. செந்தமிழ்ச் செல்வன்,
வேங்கைவாடி, தெ. ஆ. (மா)

×

நண்பரும் நல்ல சுற்றமும் குறளியமே !

குறளியத்தை நான் மிகவும் விரும்பிப் படிக்கிறேன்; திரும்பத் திரும்பப் படிக்கிறேன். மனக் கவலையும் குழப்பமும் உள்ள இந்த நேரத்தில் குறளியத்தைப் படித்துச் சிந்திப்பது எனக்குத் எவ்வளவோ ஆறுதலாகவும் ஆன்ற துணையாகவும் இருக்கிறது. உற்ற நண்பரும் சுற்றமும் கூட எனக்கு இவ்வளவு உறுதுணையாய் இருக்க முடியாது.

— ஆ. கோவிந்தாமி
மேலாளர், உதவிபெறும் நடுநிலைப்பள்ளி.
கிருட்டிணாபுரம்,

×

சில கல்லூரிகளின் அவலநிலை.

தங்களது கடிதமும், குறளியம் திங்கள் இதழும் அன்புடன் கிடைக்கப் பெற்றோம். பொருளாதார நிதி பற்றாக்குறையின் காரணமாக, தங்கள் மாத இதழுக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்ப இயலாமையைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— முதல்வர்,
பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக்
கல்லூரி, பழனி.

×

நம்மவர் அவலம்

அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கோவில் நூலகங்களிலும் குறளியம் வாங்கிப் பயன்பெற அரசு பரிந்துரை செய்துள்ளது. குறளியம் எத்தகைய பண்பாட்டை வளர்க்கத் தொடங்கப்பட்டு வணிக நோக்கின்றி நடாத்தப் பெறுகிறது என்பதை ஒரு முறை கண்டோரும் மனம் நெகிழ்கின்றனர். அப்படியிருக்கச் சில கல்லூரி, மேல்நிலை, உயர்நிலைப் பள்ளியினரும், கல்வி நிறுவனங்களும். கோவில் அதிகாரிகளும் குறளியத்திற்கு உருபா 12 ஐச் செலுத்த இயலாத நிலையில் பண்பாட்டை — கல்வியை வளர்க்கின்றனர். ஆனால் சில நிறுவனங்களில் எதை எதையோ வாங்கிப்படித்துப் பசியாறுவதையும் காண்கிறோம். ஏன் இந்நிலை? இந்நாட்டு மக்களின் அவலநிலைதான் காரணியமோ ! — ஆசிரியர்,

○

குறளைப் போலவே குறளியம்

குறளைப் போலவே குறளியமும் திட்பமும் நுட்பமும், செறிவும், அறிவும் நிறைந்ததாய், ஒட்பந் தருவதாய் உயர்ந்து விளங்குகிறது. குறளைப் பரப்ப எழுந்துள்ள தங்களின் பிறழா உறுதியைத் தளராச் செயல்பாட்டை வள்ளண்மையை வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

— அரு. கோபாலன்.
ஆசிரியர் – மர்மம், சென்னை.

குறளியக்கம் கண்டிடுவோம்

நம் நாட்டில் நிலவும் அனைத்துச் சீர்கேடு களுக்கும் குறளியம் ஒன்றே மாமருந்து என்ற உண்மையைக் குடிமக்கள் அனைவரும் உணரச் செய்தல் வேண்டும். குறள் நெறியை, குறளி யத்தை, அரசின் நெறியாகவும், மக்களின் நெறியாகவும் மாற்ற வேண்டுமெனில் குறளி யத்தைக் குறிக்கோளாகக் கொண்ட கட்சி ஆட்சிக் கட்டில் ஏறித்தான் செயல் படுத்த இயலும்..

ஓர் ஒப்பற்ற அறத்தின் அடிப்படையில் இயங்கும் இயக்கத்தைக் குறளியத்தைக் கொள்கையாகக் கொண்ட இயக்கத்தை உடனே கண்டிடுவோம்.

துரை வெங்கடாசலம்,
புதுச்சேரி.

×

குறளியம் வாழ்க!

வளமார் தமிழ்நெறி வள்ளுவமே யாகும்
உளமார ஒப்புவர் உண்மை — வளம்சேர்க்க
வந்த குறளியம் வாழ்க! வளர்கவென்றே
எந்தை அறம் தழைக்க ஏத்து.

— ஈ. உலகவரசன்,
பொன்னம்மாப்பேட்டை, சேலம்,

×

பனிமலையாக அமைந்திருக்கிறது.

வாழ வேண்டியவர்களே வாருங்கள் என்ற தலையங்கம் பனி மலையாக அமைந்திருந்தது. புகழ்ந்தவைப் போற்றிச் செய்வோம். செயதக்க செய்யாமை யானும் கெடும். திருக்குறள் பேரவைக் குழு விவரம் அளித்துள்ளதும் அரிய செயல். நினைக்க நேர்ந்தவை தலைப்பும் தலையாய செயலாகும்.

— ஆ. செயராமன்,
அமைப்பாளர், திருக்குறள் பேரவை,
வெள்ளிமேடு பேட்டை.

×

பூக்கட்டும் பொற்காலம்

ஆக்கங்கள் விளைந்துநனி தமிழ கத்தில்
ஆசிரிய உரைநல்ல பயன்வி ளைக்கும்
நோக்கட்டும் தமிழ்நாட்டுத் தலைவ ரெல்லாம்
நோய்நீங்கி ஒன்றுபட்டு உரிமை பேணிக்
காக்கட்டும்! காழ்ப்புணர்ச்சி நீங்கி யுள்ளம்
கனியட்டும்! தொண்டுள்ளம் சிறந்து நன்மை
பூக்கட்டும்! பொற்காலம்! தெளிந்த தங்கள்
பொன்னான சிந்தனையாம் இந்த நாட்டில்.

— பாவலர் தமிழ்க்குமரன்,
ஈரோடு.

×

குறளியத்தை வணங்குகிறேன்

ஐயா, நீங்கள் முன்னாள் முதல்வரையும் இந்நாள் முதல்வரையும் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் ஒன்றுபடுத்த முயன்ற முயற்சி முடியவில்லை யெனினும் உலகத் தமிழ் மாநாடு ஓரளவிற்கு நன் முறை யில் நடந்து இனிது முடிந்தது . . . . அடுத்து வரும் உலகத்தமிழ் மாநாடு போதாகிலும் உங்களது முயற்சி திருவினை யாகுமாக என வாழ்த்தி உங்களது திருக்குறளியத்தை வணங்குகிறேன்.

— கேப்டன் சாமிநாதன்,
தலைவர், திருவள்ளுவர் கழகம்,
திருவண்ணாமலை.

×

குறட்பணி உயிர்ப்பணி

குறட்பணி, தமிழர்களின் உயிர்ப்பணியா கவே இருத்தல் வேண்டும். தங்கள் முயற்சி வெல்க!

— பேராசிரியர் கே. பழநிசாமி, க. மு.
தமிழ்த்துறைத் தலைவர்,
காமராசர் கல்லூரி, தூத்துக்குடி.

×

தமிழமிழ் வெள்ளுவா

நெடுந்தமிழ் மறையாம் திருக்குறள் புலக்கணம்
செந்தமிழ்ப் பாங்கால் விளைந்திடு 'குறளியம்'
நறுந்தமிழ் இதழிய நல்லிய உலகிடை
தண்ணிய தமிழமிழ் வெள்ளுவா நேர
மலர்வுற மணப்புற வளர்கமா நெடிதென
வாழ்த்துகம் தமிழ்க்குடி நெஞ்சான்
வழைமை வளம்பல பொலங்கிட இனிதே!

— புலவர், தேவநேயச் சித்திரன் க, மு.
கள்ளக்குறிச்சி, தெ, ஆ, மா.



வேலா அறக்கட்டளை வழங்கிய சிந்தனை விருந்து

அ. வேலாயுதனார்

தி. பி. 2012 சுறவம் 12, 13 ஆகிய இரு நாட்களில் ஈரோடு பெரியார் மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நல்லதோர் உணர்ச்சியும், சிந்தனையும் நடமிட்டதை உணர முடிந்தது.

தமிழ்நாடு வீரசைவ இயக்கத்தினர் நடத்திய விழா முதல் நாள் ஞாயிறன்று காலை வேலாவின் சிந்தனைவயபட்ட வரவேற்புரையுடன் தொடங்கிற்று. விழாத் தொடக்குநராக அமைந்த மதுரை மாவட்ட வீரசைவப் பேரவை அமைப்பாளர் திரு. எசு.எசு. வீரமணி நால் வருணம் மறுத்த வீரசைவம் வளர வேண்டியதன் முக்கியத்தைத் தொகுத்துக் கூறினார், பின்னர் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் சிந்தனை மேடை தொடங்கியது. கோபி சிந்தனைச் செம்மல் திரு. கு. ச. ஆனந்தன், வையப்ப மலை திரு. முருகொளி, பேரா. திரு. கா. அரங்கசாமி, பேரா. செ. சு. பழனிச்சாமி, இராசிபுரம் புலவர் திரு. ச. சோமசுந்தரம், ஈரோடு நகைச் சுவையரசு த. ஆறுமுகனார் ஆகியோர் சிந்தனை மேடையில் கலந்து கொண்டனர்.

திராவிட மக்களின் கடவுட் கொள்கையும், அதன் வழிபாட்டு முறையும் என்ற சிந்தனை மேடைத் தலைப்பு மிக ஆழமாகச் சிந்திக்கப்பட்டது. சைவ, வீரசைவ, வருணாசிரமக் கருத்துக்கள் எல்லாம் அலசி ஆராயப் பட்டன. சிந்தனை முடிவு: திராவிடர்களாகிய தமிழ் மக்கட்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. உள்ளொளி வளர்த்து இவ்வுயிரைப் பேரின்ப நிலைக்கு ஆக்குவதே அவர்களது கடவுட் கொள்கை. மெய்ப் பொருள் (தத்துவம்) கட்கு உருவங்கள் ஏற்பட்ட பின் அதற்குப் புராணக் கதைகள் ஏற்பட்டு விட்டன. அவை தவிர்க்கப்பட வேண்டியவை. திராவிட மக்களின் வழிபாட்டு முறை எதுவெனில் சிவநெறி எனும் அம்மையப்பர் வழிபாடு என்பதும், அந்த வழி பாட்டின் பயன் ஞானம் என்பதும் ஆகக் கருதப்படுகிறது. காசி, கோகர்ணம் போல் திருக்கோயில்களின் கருவறைகளில் உள்ள மூர்த்திகளை நாமே புனலும் பூவுமிட்டுத் தொட்டும் திருமுறைகளை ஓதியும் உணர்வு பெறுதலே நம் வழிபாட்டு முறை ஆகும்.

அடுத்துக் குறள் 620 ஆகிய "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பலர்"–2 ஆராயப் புகுந்ததன் பின் ஏற்பட்ட முடிவு: ஊழ் என்பது சூழ்நிலை. குமுகாயத்தின் அமைப்பு, வரலாற்றுச் சூழ்நிலை, இயற்கை அமைப்பு, எனப் பலவாறாக ஆழமாகச் சிந்திக்கப்பட்டது, பின்னர் அடிகளார் அவர்கள் இறுதியாக, "ஊழ் என்பது நேற்றைய நம் சிந்தனை, பழக்க வழக்கங்களின் தொகுப்பே, அத்தகு ஊழால் விளைந்த தவறைத் தாளாது உழைப்பதால் மாற்ற முடியும்" என்பதே ஆகும். இதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை."

பெரியார் மாவட்டத் திருக்குறள் பேரவையினரால் மாலையில் பட்டி மன்றம் தொடங்கப் பெற்றது. மலேசியப் பெரும் பாவலர் திருமிகு துறவி இராமதாசர் அவர்கள் பட்டி மன்றத்தைத் தொடங்கி வைத்தார். பட்டி மன்றத்தின் தலைப்பு: திருக்குறள் பெரிதும் வழிகாட்டுவது...... வாழ்வியல்

நடப்பிற்கே! ஞ் அரசியல் அமைப்பிற்கே! வாழ்வியல் நடப்பிற்கே எனும் அணியில் திருவாளர்கள் புலவர் த. ஆறுமுகனார் பேரா. கா. அரங்கசாமி, புலவர் இரா. வடிவேலன், பட்டுக்கோட்டை, தங்கவேலனார் அவர்களும் அரசியல் அமைப்பிற்கே என்ற அணியில் திருவாளர்கள் வழக்குரைஞர் கு. ச ஆனந்தன், பேரா. செ. சு. பழனிச்சாமி, புலவர் ச. சோம சுந்தரம். புலவர் பொன்முகிலன், ஆகியோரும் கலந்துகொண்டு வாதிட்டனர். நடுவரான தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அரசியலமைப்பிற்கே என்று முடிவுரை தந்து நிகழ்த்திய உரையாடல் வரலாற்றுச் சிறப்புடைய உரையாக அமைந்தது.

ஈரோடு திருக்குறள் பேரவையினரால் மறுநாள் திங்கட்கிழமை காலை நினைவுக் கலையேந்தல் திரு. பெ. இராமையா அவர்களின் பதின்கவனக நிகழ்ச்சி மிகச் சிறப்புடன் நடந்தேறி அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றது. விழாத் தலைவராகத் தவத்திரு வீரசைவப் பேரூர் அடிகளாரும். தொடக்குநராகப் பாவலர் திரு. தி. முருகுசுந்தரம் அவர்களும் சிறப்பித்தனர்.

அன்று மாலை குறளிய இதழின் பொறுப்பில் திருமிகு திருக்குறளார் அவர்களின் தலைமையில் வழக்காடு மன்றம் தொடங்கியது. வரவேற்புரை நிகழ்த்திய குறளிய ஆசிரியரின் உரை உணர்ச்சிப் பிழம்பாக அமைந்தது. திரு. ந. சண்முகம், (பொதுச் செயலாளர் – தமிழ் நாடு திருக்குறள் பேரவை) அவர்களின் விழாத் தொடக்கவுரை ஆழ்ந்த கருத்துகளை வெளிப்படுத்தியது. பின்னர் திருக்குறளாரின் நகைச் சுவையுடன் வழக்காடு மன்றம் நடைபெறத் தொடங்கியது. தலைப்பு: குறளியக் குமுகாயத்தை (சமுதாயத்தை) இதுவரை அமைக்காத தமிழ்ப் பெருமக்கள் குற்றவாளிகளே! ஆம் என்று புலவர் திரு பொதிகைச் செல்வன் அவர்களும், இல்லை என்று புலவர் த. ஆறுமுகனார் அவர்களும் கீழ்முறை மன்றத்தில் வாதிட்டனர். நோக்கர் சார்பில் நினைவுக் கலையேந்தல் பெ. இராமையா அவர்கள் குற்றவாளிகள் இல்லை எனக் கூறினார். பின்னர் மேல் முறை மன்றத்தில் வாதங்கள் மிகச் சூடாகத் தொடங்கியது. ஆம் என்று சிந்தனைச் செம்மல் கு. ச. ஆனந்தன் அவர்களும், இல்லை என்று பல்துறைப் பேரறிஞர் கு. வெ. கி. ஆசான் அவர்களும் ஏராளமான வரலாற்றுச் சான்றுகளுடன் வாதிட்டனர். முடிவில் இரவு12 மணியளவில் அழகான தீர்ப்புரை வழங்கினார்திருக்குறளார் அவர்கள். அவரது பெரும் ஆய்வுரைக்குப் பின் தம் தீர்ப்பாகத் '' தமிழ்ப் பெருமக்கள் குற்றவாளிகள் இல்லை... ஆனால் குறையுடையவர்கள் தான்'' என்று கூறி மன்றத்தை முடித்து வைத்தார், கலையாது காத்திருந்த மக்கள் சிந்தனை வயப்பட்டுக் கலைந்தனர். இருநாள் விழாவும் சிறப்பாக நடந்தேறி முடிந்தது.

திருவாளர்கள் அருளிசைமணி ஆ. நாகரத்தினம், இசைத் தென்றல் ஆ. சிவக்குமரன் இரட்டைப் பாவலர்கள் விழாவிடையில் அவ்வப்போது இசை நிகழ்த்தியும் பாக்கள் பாடியும் சிறப்பித்தனர்.

○

முப்பால்

இரா. இளங்குமரன்

'அப்பாலே போவென்றீர்' ஆவின்பால் தரவந்தால் ;
'இப்பால்தான் வேண்டாவேல் எப்பால்தான் வேண்டுவதோ?
அப்பாலை உரைப்பீரேல் அகமகிழ்ந்து தருவனென
முப்பாலைக் காட்டுபவர் ஒரு பாலை விழைவாரோ ?

அப்பாலும் அப்பாலும் அப்பாலுக் கப்பாலும்
எப்பாலும் போனாலும் இணையற்ற முப்பாலுக்
கொப்பான ஒருபாலை உலகத்தில் கண்டதில்லை ;
அப்பாலைத் தாவென்பார் அயற்பாலைக் கொள்வாரோ?

கடிக்காமல் சுவைக்கின்ற கற்கண்டுக் கரும்புப்பால் ;
இடிக்காமல் பிழியாமல் இனிக்கின்ற தேங்காய்ப்பால் ;
பிடிக்காமல் மழைபோலப் பெய்கின்ற ஆவின்பால் ,
படிக்காமல் வாராத பைந்தமிழ்ப்பால் முப்பாலே.

கட்டுரைப் போட்டி முடிவுகள்!

தலைப்பு:

1. குறளிய நெறியில் விலை ஏற்றங்கட்குத் தீர்வு
2. குறளிய நெறியில் உறவர் சிக்கல்கட்குத் தீர்வு

மேற்காணும் இரு தலைப்புகட்கும் நாடெங்குமிருந்தும் பல அறிஞர்கள் மிகச் சிறந்த முறையில் கட்டுரைகளை அனுப்பிப் பங்கு கொண்டனர். அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முதல் தலைப்பிற்குப் போட்டியில் வந்த கட்டுரைகளுள் முதலிடம் பெறும் கட்டுரையை எழுதி எங்கள் பாராட்டுதல்களையும் பரிசில் உருபா 100/ – ஐயும் பெறுபவர் :

திருவாட்டி **மீனாட்சி முருகரத்தினம்,**
அஞ்சல் வழித்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

இரண்டாம் தலைப்பிற்கு வந்த கட்டுரைகளுள் முதலிடம்பெறும் கட்டுரையை எழுதி எங்கள் பாராட்டுதல்களையும், பரிசில் உருபா 100/-ஐயும் பெறுபவர்:

திருவாளர் **க. குறளைக்கிறான்,**
பூந்தோட்டக் குறளகம், குறுவையூர், வஞ்சிப்பாளையம். (அ.நி.) மங்கலம் (வழி)
(கோவை மாவட்டம்.)

பரிசில் பெற்ற கட்டுரை

குறளிய நெறியில் விலை ஏற்றங்கட்குத் தீர்வு

(திருவாட்டி மீனாட்சி முருகரத்தினம், மதுரை-21.)

ஒருமுறை செர்மன் நாணயமாகிய மார்க்கின் மதிப்பு. பெருவீழ்ச்சியுற்றது அப்போது அந்நாட்டு மக்கள், ''முன்னெல்லாம் நாங்கள் சட்டைப்பையில் பணத்தை எடுத்துச் சென்று கூடையில் பொருள்களை வாங்கி வந்தோம். இப்போது கூடையில் பணத்தை எடுத்துச்சென்று சட்டைப்பையில் பொருள்களை வாங்கி வருகிறோம்'' என்று கூறினராம். உலக முழுவதிலுமுள்ள ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு காலத்தில் நாணய மதிப்புக் குறைவாலும் விலைவாசி உயர்வாலும் அல்லற் படுவதுண்டு. இந்தியாவும் அதற்கு விதிவிலக்கன்று. ஆனால், எங்கும் என்றும் கண்டிராத அளவு மிகுதியாகவும் விரைவாகவும் ஒரே சீராக ஏறுமுகமாக விலைகள் உயர்வது கண்டு நாடு வியப்பும் திகைப்பும் உற்றிருக்கிறது இன்று. குமுகாயக் சிந்தனைமிக்க குறனியம் ''இந்நிலைக்குக் காரணம் யார்? அரசா? மக்களா? வணிகரா? இதற்கு வள்ளுவர் காட்டும் வழி யாது'' என்ற வினாக்களை எழுப்பியுள்ளது.

1. வள்ளுவத்தை அணுகக் காரணம் :

இற்றைச் சிக்கலுக்கு அற்றைநாள் நூலை அணுகல் முறையா என்ற வினாவெழல் இயல்பே. வள்ளுவம் காலம் இடம் கடந்த பொது நூலாதலின் — மாறிவரும் புறமாய நாகரிகங்கள் பேசாமல் மாறாத அகமாகிய பண்பாட்டைப் பேசும் நூலாதலின்—அதனை அணுகல் பொருத்தமே.

அவ்வாறாயினும், பொருளாதாரத்துறைச் சிக்கலுக்கும் வள்ளுவம் வழிகாட்டுமாவெனின் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூலாதலின்

காட்டும். சமூகாயச் சிந்தனை என்ற பொது நிலை, பொருளியற் சிந்தனை என்ற சிறப்பு நிலை ஆகிய இருநிலைகளிலும் வள்ளுவம் இதற்குத் தீர்வுகாணும் ஆற்றலுடையது.

பொருளியற் சிந்தனைகள் குறளில் உண்டெனினும், இன்றுள்ள சூழல் அன்றில்லா நிலையில் அதனைப் பொருத்திப் பார்த்தல் முறையா? என்ற வினாவிற்கும் இடமுண்டு. இன்று பொருள் கொடுத்துப் பொருள்கள் பெறுகிறோம். வணிகர்கள் விலையை உறுதி செய்கின்றனர். அரசு, சட்டங்களால் ஓரளவு கட்டுப்படுத்தலாம். எனவே, வணிகரும் அரசுமே விலை உயர்வுக்கு நேரடியாகக் காரணமாகித் தீர்வும் காண வல்லவராகின்றனர். விலை கூடிய பொருள்களை வாங்குவதில்லை என்று முடிவு செய்வதன் வாயிலாக அதற்கான தேவையைக் குறைத்து அதனை 'மலியச்' செய்து, விலைகளை மறைமுகமாகக் கட்டுப்படுத்த மக்களால் முடியும். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் இந்த நிலை இல்லை. விலை என்ற சொல்லாட்சி கழக இலக்கியத்தில் உண்டு. அறவிலை, முலைவிலை என வரும். விற்பனை — வில் — விலை என்ற சொற்கள் தொடர்புடையனவாதல் காணலாம். நெல்லும் உப்பும்,மீனும் கள்ளும் 'நேரே கொள்ளும்' பண்டமாற்றே அன்று வழக்கில் இருந்த வணிக முறை. காசுகளும் புழக்கத்தில் இருந்தன. எனினும் விலை என்ற கோட்பாடு என்றும் உண்டு. பொருள்களுக்குரிய மதிப்பே அவ்வவற்றின் விலை. ஏதாவதொரு பொருளின் உற்பத்தி குறைந்து தேவை மிகுந்தால் அதற்கு மாற்றாக அதிகப் பொருளைப் பண்டமாற நேர்ந்திருக்கும். அன்றைய வணிகமுறைக்குரிய விலை உயர்வுநிலை அது. ஆனால் அத்தகைய சிக்கல் அன்று ஏற்பட்டதா என்பது தெரியமட்டுமே வாய்ப்பில்லை. எனவே, அறம்பாடிய மறவன் குறளில் விலை உயர்வுக்குத் தீர்வுகாண முற்படல் குற்றமில்லை.

2. பொருளியலார் இன்று கூறும் காரணங்கள் :

பணத்தின் மதிப்பு மாறாமல் என்றும் ஒன்றுபோல் இருப்பதில்லை. எனவே, அதன் வாங்கும் திறனும் மாறுகிறது. அதனால் விலைகள் மாறுகின்றன, அந்த மாற்றங்களும் ஒரே அளவாக, ஒரே சீராக ஏற்படுவதில்லை.

புலன் அடக்கம்

புலன்கள் புறத்தையும் அகத்தையும் ஆற்றுப்படுத்தும். அதனை அடக்குவதும் ஒடுக்குவதும் இயற்கைக்கு மாறுபட்ட செயலாம். புலன்கள் ஒடுக்கப்பட வேண்டுமானால் அவைகள் ஏன்? படைப்பில் பொருளற்ற ஒன்று தோன்றுமோ ? எனவே புலனடக்கம் என்பது புலன்களைத் தீயவழி செல்லாது காத்தலே ஆகும், அஃதன்றிப் புலன்களைக் கெடுத்தல் அன்று. நாவடக்கம், வாயடக்கம், கையடக்கம் போன்ற பொருளிலேயே புலனடக்கமும் அவ்வழக்கில் எழுந்ததாகும். இதனையே

" உரன்என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து" (24)

என்பார் திருவள்ளுவர்,

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.

o o

பொறிவாயில் ஐந்தவித்தான் (6) என்னும் சொல்லாக்கத்தைச் சிந்தியுங்கள். புலன்களைத் தோன்றும்போதே – அதன் தொடக்க நிலையிலேயே - வாயிலிலேயே அவித்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர், ஒடுக்க அல்லது அழிக்க வேண்டும் எனக் கூறினாரில்லை. எப்படிக் காய்கறிகளை உண்ணும் நிலைக்கேற்ப அவிக்கின்றோமோ அதுபோல ஐம்புலன்களையும் அறநிலைத் தொழுகும்படி அவித்தல் வேண்டும்.

—வீரவேலனார்

இந்நிலையே பண வீக்கம்(Inflation) எனப்படும். பொருள்களின் உற்பத்தி குறைந்து தேவைஅதிகமாகிவிலைகள் தொடர்ந்து மேலும் மேலும் ஏறியவாறே இருப்பதே இந்நிலையின் அடையாளம். இந்நிலை உருவாகுவதற்குக் கரணியங்கள் மூன்று. அவை, பொருள் உற்பத்தி, தேவை, எதிர்காலம் பற்றிய கணிப்பு என்ற மூன்றன் அடிப்படையில் தோன்றும். மக்களிடம் புழக்கத்திலுள்ள பணம் மிகுதல். செலவிடற்கென உள்ள பணம் மிகுதல், நுகர்வோரும் உற்பத்தியாளரும் செய்யும் செலவு மிகுதல்,உள்நாட்டுப் பொருள்களுக்கான வெளிநாட்டுத் தேவைமிகுதல் ஆகியன, தேவை சார்ந்த கரணியங்கள், மூலப் பொருள், (கருவிகள்), உழைப்பு ஆகியவற்றில் பற்றாக்

குறை. உள்நாட்டில் தேவைப்படும் பொருளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தல், கூலி உயர்வால் விலை உயர்வும் விலை உயர்வால் கூலி உயர்வும் என்று மாறி மாறி நிகழ்வது (Wage — price — spiral) ஆகியன தரவு (supply) சார்ந்த காரணங்கள். விலைகள் தொடர்ந்து ஏறுமுகமாக அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கும் தொழில் உரிமையாளர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனைக்கு வராமல் பதுக்குவதுடன், தேவைக்கு அதிகமான மூலப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்கவும் முனைவதுடன் எதிர்காலத்தில் கூலி உயர்வு தர நேர்வதை எதிர்பார்த்து விலைகளைக் கூட்டவும் செய்வர். இவை, எதிர்காலக் கணிப்புச் சார்ந்த, விலையுயர்வுக்கான காரணங்கள்.

2 (1) கட்டுப்பாடு நடவடிக்கைகள் :

பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு மூன்று வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு, சேமிப்புக்கான வட்டி வீதங்கள், நாட்டில் வழங்கப்படும் கடன்களின் அளவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பணக்கொள்கை நடவடிக்கைகள் (monetary measures): அரசின் செலவு, வரி விதிப்பு, பொதுக்கடன் ஆகியவற்றின் மூலம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பொருள் அமைச்சகம் நெறிபடுத்த முயலும் கருவூலக் கொள்கை நடவடிக்கைகள் (fiscal policy measures) ; உற்பத்திப் பெருக்கம், பங்கீடு (ration), விலைக் கட்டுப்பாடு, கூலி உயர்வுத் தடுப்பு முதலிய ஏனைய நடவடிக்கைகள் ஆகியன அரசால் மேற்கொள்ளப்படும்.

இன்னும், தொழிற்சங்க நடவடிக்கைகளால் கூலி உயர்வு ஏற்படல், அதிக விலையில் இறக்குமதி செய்தல், பற்றாக்குறை பொருளாதிக்கம், அரசின் செலவுகள் மிகுதல், மக்கள் தொகை மிகுதல் ஆகியனவும் விலையுயர்வை ஏற்படுத்துவன. கட்டுப்பாட்டு முறைகளே இவை அனைத்திற்கும் தீர்வு.

3. விலையுயர்வுக் காரணங்களின் அடிப்படைகள்

பொருளியலார், விலையுயர்வுக்கான காரணங்கள் எனச் சுட்டுவனவற்றை நான்காகப் பிரிக்கலாம். பண வீக்க நிலை நாட்டில் உருவாவதற்குரிய அடிப்படைச் சூழல் பொருளியற் காரணம் ; சட்டங்களால் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த இயலாமை, அரசின் செலவினங்கள் மிகுதல் ஆகியன அரசியற் காரணம். பொருள்களைப் பதுக்கல், எடைகளில் ஏமாற்றல் முதலிய செயல்களை வணிகர்கள் மேற்கொள்வதும் 'ஆகுலநீர' என்று அறியாமல் என்ன விலை கொடுத்தேனும் பொருள்களைப் பெற முயலுதல், வல்லாங்கு வாழ்துமென்று, அடுத்தவர் நலன் கருதாமல் அகப்பட்டதைச் சுருட்டிப் பதுக்கிவைத்துத் தாம் மட்டும் பற்றாக் குறையால் துன்பப் படாவண்ணம் சேர்த்துவைத்தல் முதலிய இயல்புகளை மக்கள் கொண்டிருப்பதும் ஒழுக்கவியற் காரணங்கள் ; ஊழ்வினையை நோகும் ஆள்வினையின்மை குறைந்த உழைப்பும் நிறைந்த ஊதியமும் விழையும் கொள்கை

மக்கள் மட்டுமே உயர்திணை

ஒல்காப் புகழ்த் தொல்காப்பியனார் ஆறறிவுடைய மக்களை மட்டுமே உயர்திணை என்றார். ஆனால் நன்னூல் செய்த பவணந்தியாரோ, மக்கள், தேவர், நரகர் என்னும் முப்பாலரையும் உயர்திணையாகக் கூறியுள்ளார்,

தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் இதற்குக் கூறும் கரணியத்தைப் பாருங்கள்:-

''இலக்கணம் என்பது எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான நிலையில் நின்று, ஒரு மொழியின் சொற்பொருள் அமைதிகளைக் கண்ணாற்கண்டு, அறிவான் ஆய்ந்து காட்டுவது, கட்புலனாகாதவைகளைச் சிறுபான்மை சொல்ல நேர்ந்தால் மொழியமைதியினளவுக்கு வேண்டுந் துணையே அது கூறுதல் வேண்டும். இந்த முறையில் பார்த்தால், ஆறறிவுடைய மக்களே உயர்திணை யென்றது எல்லாராலுங் கட்புலனாக அறியப்பட்ட உண்மையாகும். மற்றும் தேவர் நரகர் என்பார் எல்லாராலுங் கட்புலனாற் காணப்பட்டவரல்லர்; அதனால் அவரை உயர்திணை என்று கொள்வது எல்லாருக்கும் உடன்பாடன்று ஆகவே, தொல்காப்பியனார் மக்களை மட்டுமே உயர்திணை யென்று வரையறுத்துரைத்தது சாலவும் பொருத்தமுடையதெனக் கருதுகிறேன்''

—அம்பிகாபதி அமராவதி

உண்டாக்கம் பெருக்கில் அக்கறையின்மை, பொறுப்பின்மை ஆகியன மக்களிடம் காணப்படுவது உளவியற்காரணம்.

4. வள்ளுவம் வழங்கும் தீர்வின் இயல்பு

அறமும் பொருளும் பேசும் வள்ளுவம், இந்நான்கியற் காரணங்களும் நாட்டினின்று அகல வழி காட்டுகிறது. அது காட்டும் வழி, இன்றைய பொருளியலார் எதிர்பார்க்கும் நேரடி நடவடிக்கை அன்று. பொருளியற் நூல்கள் இன்றைய சூழலோ இல்லாத காலத்து எழுந்த பொதுமறையில் அதனை எதிர்பார்த்தலும் தவறு. ஆனால் தன் மனமொழி மெய்களால் உலகின் போக்கை உருவாக்குகின்ற மாந்தனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் அதிலுள்ளன. நாவலத்தூய நிமித்த காரணனான அவனைக் கட்டுப் படுத்தினால் அவனால் ஆளப்படும் பிற, தாமாய் அடங்கும் அன்றோ! சான்றாக, உற்பத்திக் குறைவிற்கு அடிப்படை ஊக்கமின்மை. வள்ளுவத்தின் மடியின்மை ஆள்வினையுடைமை, பொச்சாவாமை முதலிய அதிகாரங்கள் அதனை அகற்றும். பதுக்கலுக்கு அடிப்படை ஆசை. வெஃகாமை அதனை விலக்கும். இங்ஙனமே, புறக்காரணங்களுக்கு அடிப்படையாகும். அகப்பண்புகளில் மாற்றம் விளைவிக்க வள்ளுவம் வழிகாட்டும் என்பது மறுக்க முடியாத உண்மை. மேலும் இத்தகைய வழியே சிக்கலை வேருடன் களையவும் நல்லன விளைக்கவும் பயன் நிலைக்கவும் உதவும். அரசு சட்டத்தால் விளைக்கும் கட்டுப்பாடுகள் தற்காலிகமான தீர்வு நெறிகள். அடிவேரைக் களையாத வரை - மாந்தனின் அகம் மாறாத வரை – சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கையில் திட்டம் போட்டுத்திருடும் கூட்டம் 'திருடிக்கொண்டே' இருப்பதுடன், சட்டத்தைத் தனக்குச் சாதகமாக்கும் வழிகளையும் தன் கூர்த்த மதியால் தேடிக்கொள்ளும் அல்லவா? உண்மையில் விலை உயர்வு மட்டுமல்ல/ இன்றைய சிக்கல்கள் பலவற்றின் தீர்வுக்கும் மக்களின் அகமதிப்பீடுகளில் (Sense of values) ஒரு மாற்றம் தேவை என்பது ஆழமாகச் சிந்தித்தால் புலனாகும். அந்த மாற்றத்தை விளைவித்து, ஆழமானதும் நிலையானதும் தீய பக்க விளைவுகள் இல்லாததுமான மறுமலர்ச்சியைக் கொணர வல்லது குறள். எனவே விலை உயர்வெனும் சிக்கல் தீர வள்ளுவம் காட்டும் வழி, அதற்கான காரணங்கள் அகலுதற் பொருட்டு அதனுடன் தொடர்புடைய மாந்தன் மாட்டு நிகழவேண்டிய மன மாற்றமே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

5. சில தடங்கல்கள்.

இன்றைய சூழலில் காணப்படும் சிக்கலுக்கு இன்றைய மாந்தரிடம் இன்றைய நெறிமுறைகளில் காணவேண்டிய தீர்வினை அன்றைய நாலொன்றில் அறிய விழைகையில் சில சிக்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

பண வீக்கத்ததிற்குரிய காரணங்களாக இன்றைய பொருளியலார் கட்டும் சில, அன்று இல்லை. மக்கள் தொகை மிகுதி, அரசாங்கச் செலவின் பெருக்கம், பற்றாக்குறை பொருளாக்கம் ஆகியன அன்று சிக்கலை விளைவிக்க வில்லை. மங்கலமாகிய மனைமாட்சிக்கு நன்கலமாய்க் கருதப்பட்டது மக்கள்பேறு. அறிவறிந்த மக்கட்பேறு பெறுமவற்றுள் பெருஞ் செல்வமாய்க் கருதப்பட்டது. மாணிழை மகளிர்க் கருச்சிதைவு வழு-வெனக் கருதப் பட்டது.

பாவலர்கள் பார்வைக்கு

"பாரதியிலிருந்து தமிழ்க் கவிஞர்கள் — தமிழ்க் கவிதை வரலாறு" என்னும் தலைப்பில் தொகுப்பொன்றினைப் பாவலர் "சுமாச" வெளியிடவுள்ளார்.

பாவலர்கள் தங்களின் படைப்பு நூற்களைப் பற்றியும், இயற்பெயர், புனைப்பெயர், பிறந்த நாள், பிறந்த ஊர், அகவை, பெற்றோர் மனைவி, மக்கள், வாழும்நாடு, கல்வி, அறிந்த மொழிகள் — எல்லாவற்றையும் எழுதிக் கீழ்க் காணும் அவர் முகவரிக்கு அனுப்புங்கள்.

பாவலர் "சுமாச"
அன்னை இல்லம்
3. கிழக்குப் பெருமாள் கோவில் வீதி
கோட்டை :: ஈரோடு-638 001
பெரியார் மாவட்டம்

வேறு சிலகாரணங்கள் அன்று இருந்ததா என்பதை நாம் அறியுமாறில்லை. சால்றாக பற்றாக்குறை, பதுக்கல், அதிக விலையில் இறக்குமதிகள் ஆகியன அன்று இருந்தனவா என்பது நமக்குத் தெரிய வழியில்லை.

எனவே, இவைபற்றிய சிந்தனைகள் வள்ளுவத்தில் நேரடியாக இருக்க வாய்ப்பில்லை. பிற காரணங்களின் நீக்கத்திற்கான வழிகளையே வள்ளுவத்தில் தேடமுடியும்.

6. வள்ளுவம் காட்டும் வழிகள்

வள்ளுவர் வழங்கும் 'மருந்து' உடலுக்கு மட்டுமன்று. எந்தப்பிணி தீரவும் அந்தக் கொள்கைகள் வழிகாட்டும். குமுகாய நல் வாழ்வைப் பற்றியிருந்து உருக்குலைக்கும் ஈழைநோய் காசநோயான விலையுயர்வுக்கும் வள்ளுவர் நெறிநின்று "நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப் பச்வ" செய்யவேண்டும்.

மிகினும் (பணவீக்கம் — inflation) குறையினும் (deflation — பணவாட்டம்) நோய் செய்யும் பொருட் பழக்கம் நாட்டில் ஒரே சீராக இருத்தலென்பது நடைமுறையில் இயலாதவொன்று. எனவே, ஏறு முகமோ இறங்கு முகமோ பேரளவில் ஏற்படா வண்ணம் ஓரளவு சீராக அமையவே முயலவேண்டும்.

6-1. பொருளியற் காரணம் — தீர்வு

விலை உயர்வுக்கு அடிப்படையான பொருளியற்காரணம், பணவீக்கம். உற்பத்தி பெருகி, தேவையும் தரவும் (demand and supply) சமநிலைப் பதுக்கல் தடுக்கப்பட்டால் இதைப் பேரளவு குறைத்துவிடலாம். உற்பத்தி பெருகாமைக்குரிய காரணங்கள் பல. மூலப்பொருள்களும் இன்மை ஒரு காரணம். ஆனால்

அருமை உடைத்தென்று அசாவாமை
பெருமை முயற்சி தரும்-611 [வேண்டும்

என்பதை உணர்ந்து உலைவின்றித் தாழாது உஞற்றினால், ஊழையும் உப்பக்கம் காணலாம். அட, "தெய்வத்தான் ஆகாதெனினும், முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தருமே!" எனவே நிச்ச நிரப்புப்போல் புகழ் கொல்லும் பொச்சாப்புப் பொன்றச் செய்து குடியும் மானமும் காக்க மடியின்றி முயன்று, பொருள் செயல்வகை கண்டால் போக்கியலாக் குறையும் உண்டா? அதற்குமேல் தோல்வி கிட்டினாற் குற்றமில்லை. 'பொறியின்மை யார்க்கும் பழியன்று, அறிவறிந்து ஆள்வினையின்மையே பழி' தொழிலுற்பத்திக்குத் தான் தடைகள் பல.விளை பொருட்கு முயலலாம். 'இலம் என்று அசைகி இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' அன்றோ? எனவே உள்ளுவது உயர்வுள்ளி உள்ளத்தனைய உயர்வு பெற்று உற்பத்தி பெருக்கவேண்டும்.

தமிழ்மொழி பூசனை (வழிபாடு) நமது கொள்கை,

திருமறைத் தமிழ்ப் பூசனை நோக்கு, மொழிவழிப் பட்டதன்று; சமய வழிப்பட்டதே யாகும். தமிழர்க்குச் சமயநெறி, அவர்களுடைய குமுகாய அமைப்பிலேயே படிமுறையில் தோன்றி வளர்ந்த நெறியாகும்,

'அறங்கரை நாவின் நான்மறை முற்றிய' என்ற தொல்காப்பியப் பாயிர அடிக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், "ஈண்டு நான்மறை என்றது இருக்கும் யசுரும், சாமமும், அதர்வணமும் என்பாரும் உளர், அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்தபின்னர் வேதவியாசர் சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார் ஆதலின்" என்று எழுதுதல் எண்ணத்தக்கது. வியாசர் காலத்துக்கு முற்பட்ட புறநானூற்றுச் செய்யுட்களில் 'நான்மறை முனிவ' ரென்றும், நால்வேத நெறி என்றும் பயிலப் பெறுவது, தமிழில் பழமையான மறைகளிருந்தன என்ற கருத்துக்கு அரண் செய்வதாகும்,

நமது சமயத்திற்குரிய மறைகள்-மந்திரங்கள் தமிழிலேயே இருந்தன என்பதும், இருந்து வருகின்றன என்பதும் அறியக்கிடக்கின்றன. நால்வர்களும் ஆழ்வார்களும், மறைமொழி மாந்தர்கள். அவர்கள் அருளிச்செய்த பாடல்கள் மறைகள் — மந்திரங்கள், தமிழ் வழிபாட்டுக்கு உரியனவாகும்.

— தமிழ் மாமுனிவர் தவத்திரு,
குன்றக்குடி அடிகளார்.

2369

வெஃகாமை அன்ன விழுச் செல்வம் வேறெதுவும் இல்லை. இயற்கையன்னை பெரிதும் அளிபுடையவள்; மாந்தன் படைத்தனவும் பலவுண்டு. ஒன்றில்லையெனில் மற்றொன்றால் நிறைவுநலாம். அதை விடுத்து, இல்லையெனில் இறப்பு நேரும் என்றாற் போல, என்ன விலை கொடுத்தும் ஒரு பொருளை வாங்க முற்படும் போக்கை மாற்றிக் கொண்டால் தேவையும் தரவும் தன்னால் சமநிலைப்படும். எதிர்காலக் கணிப்புடன், மக்கள் சில பொருள்களைப் பதுக்கலும் வணிகர் சில பொருள்களைப் பதுக்கலும் ஆகிய நிலை உருவாகாமலே ஒழியும். வாங்க ஆளின்றேல் சரக்கு மலியும்; கடைக்கு வரும்; விலை குறையும். இதற்கு அடிப்படை 'மெய்யுணர்தல்' நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு!' இங்குப் பெருமை தரும் பொருளோ கூத்தாட்டு அவைக்குழாம் போல போகும்—வரும்! அகடற யார்மாட்டும் நில்லாமல் சகடக்கால் போலவரும் செல்வத்தை நிலையென்றெண்ணிப் 'பொருளல்லவற்றைப் பொருளாய்க்கொண்டு 'நடுவின்றி நன்பொருள் வெஃகின்குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்.' இதனை உணர்ந்து தீவினையச்சம் கொண்டு செயற்படின் பதுக்கலுக்கு இடமிராதன்றோ?

6-2. அரசியற் காரணம் — தீர்வு

குழுகாயச் சூழலான பொருளியற் காரணம் நீங்குதற்கு அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல் வேந்தன் தொழில். ஏனெனில், வானோக்கி வாழும் உலகம்போல் மன்னவன் கோனோக்கி வாழ்வது குடி. எனவே, 'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப்பேணி' அப்பெரியோரின் துணையுடன் 'அழிவதூஉம் ஆவதூஉம் ஆகிய வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்' அரசின் கடமை. உட்பகை ஒழித்து ஒற்றால் உண்மையறிந்து நாள்தொறும் நாடி முறைசெய்து சிக்கல்கள் தொடங்கும் நாளிலேயே களையமுற்படவேண்டும். இளைதாக முள் மரம் களையாவிடில் காழ்த்தவிடத்துக் களையுநர் கைக்கொல்லும் அன்றோ. அன்றியும் கருமம் சிதையாமல் காக்கவும் தெரியவேண்டும்; கண்ணோட்டமும் வேண்டும். வேலியே பயிரை மேய்ந்தாற் போல் அரசு 'வேண்டுதல் வேண்டாமையுடன்' செயற்பட்டால் சிக்கல்கள் வளரவே செய்யும். 'ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே வேந்தமைவில்லா நாடு.' அதனை உணர்ந்து, 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல' அரசாக விளங்கவேண்டும். இயற்றலினும் ஈட்டலினும் காத்தலும், வகுத்தலுமே கடினமானவை. பொருள் உற்பத்தி பெருகியிருப்பினும் அவற்றை அழியாமற் சேமிப்புக் கிடங்கில் காப்பதும், அனைவர்க்கும் நாடுமுழுவதும் பங்கீடு செய்வதும் இன்று தலையாய சிக்கல்களாகி விலைவாசி உயர்வுக்கு நிலைக்களன் அமைப்பது கண்கூடு. அன்றியும் தொழில் துறைகளில் திட்டமிடலும் செயற்படுத்தலும் இன்றியமையாதவை. காலம், இடம், வினை, வழி என்னும் நான்கும் அன்றைய அரசன் போர்க்காக அறிந்தால் இன்றைய அரசு பொருளீட்ட அறிகிறது. தொழிற்சாலை ஓரிடத்தில் தொடங்குமுன் அங்கு மூலப்பொருள் கிடைக்குமா, போக்குவரவு ஏந்து உண்டா, விற்பனைக் களம் (market) அருகில் உள்ளதா. உற்பத்திச் செலவு என்னவாகும், தேவையான மாந்தத்திறன் (Man-power) உள்ளதா என்றெல்லாம் எவ்வளவு தேர்ந்து வினைசெயல் வேண்டியிருக்கிறது. எண்ணித் துணிந்த கருமம் எண்ணியாங்கு எய்த, வினைசெய்வான் கோடாமை ஒழுகுதலைத் தெரிந்து வினையாடல் எவ்வளவு தேவைப்படுகிறது? நிலக்கரித் தேவையின் அளவும் அது அளிக்கப்படும் வேகமும், கணிக்கப்பட்ட அளவு கிடைக்காமல் சிறிது காலம் தூந்துக்குடி அனல்மின் திட்டம் இடைக்கொட்க நின்றதை ஆராயின், விலை உயர்வுக்கு அடிப்படையான செலவுப் பெருக்கத்தைத் தடுப்பதில் அரசின் பங்கு எவ்வளவு பெரியது என்பதும் வினையிடம் காலம் வலியவற்றைத் தெரிந்து வினைசெய்தல் தேவை என வள்ளுவர் வழிகாட்டுவதும் புலனாகும்.

உணவுப்பொருள் உற்பத்திக்கு அடிப்படையான வான் சிறப்பும் வள்ளுவம் உரைக்கிறது. நுட்பமாக நோக்கின், வள்ளுவர் உரைக்கும் கள்ளாமையும் சுற்றிவளைத்து இன்றைய சிக்கலுக்கு உதவுவதை உணரலாம். மதுவிலக்குக் கோட்பாட்டை அரசு தளர்த்தினால் கள்ளிறக்கும் காலத்தில் தேங்காய் விலை ஏறும் என்பது தெளிந்தார்க்குத் தெரியும்!

6-3. ஒழுக்கவியற் காரணம்—தீர்வு

வணிகர், மக்கள் என்னும் இருசாரார் ஒழுக்கமும் பற்றி வள்ளுவர் கூறுகிறார். 'வாணிகம் செய்வார்க்கு வாணிபம் பேணிப் பிறவும் தமபோற் செயின்' என்றும், 'அறி வினான் ஆகுவதுண்டோ பிறிதினோய் தன் னோய்போற் போற்றாக் கடை' என்றும் இரண்டிடங்களிலும் 'பிறர் உன்னை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறாயோ அப்படிப் பிறரை நீ நடத்து' என்ற விவிலியக் கோட்பாட்டை அவர் வலியுறுத்தல் காணலாம். 'கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்து வீசும்' மனப்போக்கு வணிகரிடம் இருப்பின், வல்லாங்கு வாழ்துமென்று தேவைக்குமேல் சேர்த்து வைத்துப் பொரு ளுக்கு 'அருமை' உண்டாக்கி விலையை உயர்த்தும் போக்கு, இன்றி அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை என உணர்ந்து பாத்துண் ணும் பண்பு மக்களிடம் இருப்பின் — இவ்விரு சாரார் ஒழுக்கத்தால் ஏற்படுத்தப்படும் விலை யுயர்வு நிகழாதன்றோ?

6-4. உளவியற் காரணம் - தீர்வு

உழவர்கள், வணிகர்கள் — சுருங்கக்கூறின் —சொந்தத் தொழில் செய்வோர் யாரும் உற் பத்திப்பெருக்கிற்கு ஊறு விளைக்கும் செயல்க ளில் ஈடுபடுவதில்லை. தம்திறம் முழுவதும் பயன்படுத்திப் பொருளாக்கத்திற்குப் புதுப்புது வழிதேடி ஒய்வின்றி ஒல்லும் வகையெல்லாம் பொருளீட்டல் ஒவாது செல்லும் வாயெல்லாம் அவர் செய்து நிற்கக் காண்கிறோம். ஆனால் கூலிக்கு வேலை பார்க்கும் கும்பலிடம் வேலை

நோபல் பரிசு பெற்றவரும், அறிவுக் களஞ்சி யம் என அறிஞர்களே கொண்டாடும்

பேரறிஞர்

ஆல்பர்ட் சுவைட்சரின்

திருக்குறள் பற்றிய கருத்து

திருக்குறளைப் போன்ற உயர்ந்த, தலை சிறந்த அறங்களடங்கிய மற்றொரு நூல் உலக இலக்கியத்தில் இல்லை.

இந்தியாவின் சைவ, வைணவ, புத்த, சமண வழிபாட்டியக்கங்கள், அவற்றின் நாயன் மார்கள், ஆழ்வார்கள், குருமார்கள், மற்றும் அவர்களது வழிவந்த இடைக்கால இந்தியத் துணைக் கண்டத்தின் சமய அறிவுத்துறைத் தலைவர்களான சங்கரர், இராமானுசர், சைதன்னியர், இராமானந்தர், கபீர் மற்று முள்ள அண்மைக் காலப் புது மலர்ச்சித் தலை வர்களான இராசாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, பெரியார் தேவேந்திர நாததாகூர், இரவீந்திரநாததாகூர், இராம கிருட்டிணர், விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியவர்களின் சமய அருட் கருத்துகளின் தோற்ற வளர்ச்சி வரலாறுகளை ஆய்ந்தேன். அவர்களின் நல்ல பல கருத்துக்களின் அடிப் படையைக் கண்டறிய வேண்டுமென விரும்பி னேன். எனவே வடமொழி வேதங்களையும், ஆரணிய உபநிடதங்களையும், இதிகாசப் புரா ணங்களையும், இடைக்கால வடமொழி இலக் கியங்களையும் துருவித் துருவி ஆய்ந்தேன். ஆனால் அவ்வுயரிய எண்ணங்களுக்கான அடிப் படை, அவை எவற்றிலும் நேரிய முறையில் காணக் கிடைக்கவில்லை. இதன் பயனாக அவ்வுயர் கருத்துகள் இவற்றின் இயல்பா கவே வளர்ந்தவை அல்ல என்ற முடிவுக்கு வருகிறேன். ஆனால் அதேபோழ்து அவை களுக்கான அனைத்து அடிப்படைக் கருத்து களையும் திருக்குறளில் காணுகின்றேன். அவை வேத புராண இதிகாசங்களுக்கும் வட மொழி இலக்கியங்களுக்கும் புறம்பான வேறொரு தொடர்பான உயிர் வளர்ச்சியி லிருந்து கிளைத்தவை என்பதை உணர்கிறேன். அவ்வெல்லாக் கிளைகளின் அடிப்படைகளை யும் திருக்குறளிலேயே காணமுடியும்.

அத்தோடு கீதையின் கருத்துகளுடனும் புத்த, சமண சமயக் கருத்துகளுடனும், கிருத்துவ, இசுலாமியச் சமய முதல்வர்களது தனிமொழிகளுடனும், மற்றும் உலகின் தனிச் சிறப்பு வாய்ந்த பலகாலத்து பல்வேறு அறிஞர் களின் கருத்துகளுடனும் திருக்குறட் கருத் துகளை ஒப்பு நோக்கி அதன் உயர்வை உணர்ந்து தம் நூலான " இந்தியக் கருத்தும் அதன் வளர்ச்சியும் " என்ற ஆல்பர்ட் சுவைட்சர் மேற்கண்ட கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் விளக்குகிறார்.

யில் இந்த ஒன்றிப்பைப் பார்க்க முடிவதில்லை. இதனால் உழைப்புக்குறைய, உற்பத்தி குறைய விலை உயர்கிறது. இந்தப் பொறுப்பின்மை குறைய உற்பத்தி துறையில் ஈடுபட்டோர் அனைவர்க்கும் அதன் பயனிலும் பங்கிருக்கும் நிலை ஏற்படுமானால் — தங்கள் செயல்களின் விளைவுகள் தங்களை நேரடியாகப் பாதிக்கும் என்பதை உணர்வராயின்—முழு ஈடுபாட்டுடன் உழைக்க, உற்பத்தி பெருகி விலை குறையும். இதற்கு வள்ளுவம் காட்டும் வழி— தாளாண்மை.

7. காரணக் கர்த்தாக்கள்

விலையுயர்விற்குக் காரணம் கேட்டதுடன் அமையாமல், யார் பிழை. என்ற வினாவினால் அந்தக் காரணியங்கட்கு ஊற்றுக்கண் யார் என்றும் குறளியம் கேட்டது மிகவும் ஆழமான கேள்வி. எய்தவரைத் தேடியன்றோ வழக்கிட வேண்டும்? அம்பை வைத்துமட்டும் என்ன செய்வது? அன்றியும் உடலில் தோன்றும் கட்டிகளுக்கே உள்முளைதேடிக் களைந்தால் தான் மீண்டும் வராது. எனவே குமுகாயப் பிணிக்கும் ஊற்றுக்கண்களைத் தேடி அடைத் தலே சிறப்பு. யார் யார் அதில் தொடர்புடை யோர் என்பதும் வினாவிலேயே சுட்டப் பட்டுள்ளது. யாருடைய பிழை என்பதே வினா.

இன்றைய வாழ்வுமுறை சார்ந்து வாழு முறை. எந்த நன்மைக்கும் தீமைக்கும் தனி யொருவரோ இனமோ காரணியமாவதில்லை. எந்த அளவெவின், அரசு காரணமெவில் அத்தகு அரசைத் தேர்ந்தெடுத்து, தொடர்ந்து அரசாளவும் விடுகின்றவர் மக்கள். மக்கள் தவறெனில், சட்டத்தாலும் பிறநெறிகளாலும் கட்டுப்படுத்திக் களைய இயலாமை அரசின் பிழை. எனவே, விலையுயர்வுக்கும் மூவரும் காரணியமே

7-1. அரசின் பிழை

தன்னலம், பதவிப்பற்று, இடிக்கும் துணையாரை ஏற்காமை, நேரிடிப்பவரை எவ்வழியிலும் நிறைவு செய்ய முற்படுதல் ஆகிய இயல்புகளால் குற்றங்களைக் கட்டுப் படுத்துவதில் தீவிரம் காட்ட எந்த அரசும் முயல்வதுமில்லை; முடிவதும் இல்லை.

7-2. வணிகர் பிழை

பொறுப்பின்மை, நாணயமின்மை, பொருளாசை தடுக்கினுள் புகுந்தால் கோலத் திற் புகும் திறனுடன் அறமல்லவற்றையும் நிகழ்த்திக்கொள்ளும் மனப்போக்கு ஆகிய இயல்புகளால் வணிகர் காரணியமாக விலை யுயர்கிறது.

7-3. மக்கள் பிழை

யார் ஆண்டால் என்ன என்ற மனப் போக்கு, யார் எக்கேடு கெட்டால் என்ன, எனக்கு வேண்டியது எப்படியோ கிடைத்தால் சரி என்று நடப்பது ஆகிய காரணங்களால் மக்கள் காரணமாக விலையுயர்கிறது.

8. வள்ளுவர் காட்டும் வழி

நாடா வளத்ததாய் நாட்டை ஆக்க, உற் பத்தி பெருக்கி செலவைக் குறைத்து, பதுக் கலைத் தடுத்துத் துணிவுடனும் தீவிரத்துடனும் செயற்பட்டுக் குடியோம்பலைத் தலையாய கடனாய்க் கொள்ள, அரசு, வள்ளுவரின் 'இறை மாட்சி' பெறவேண்டும்.

நடுவு நிலைமையுடன், சொற்கோட்டம் இல்லாச் செப்பமுடன், நன்றே தரினும் நடு விகந்தாம் ஆக்கம் விரும்பாமல், படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யாமல், மறந்தும் பிறன் கேடு சூழாமல் தீவினையஞ்சிப் 'பழி மலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர் கழி நல்குரவே தலை' எனக் கொண்டு, 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழைதரும் என்பதையும் அடிக் கொண்ட எல்லாம் அழப்போம்' என்பதையும் உணர்ந்து, வினைத்தூய்மை கொண்டொழுகல் வணிகர்க்கு வள்ளுவர் காட் டும் வாழ்வுநெறி. பொருளாசை கொண்டு விலையை உயர்த்தி மக்களை இன்னற்படுத்தும் வணிகரிற் சிலர் பொருள் இருந்தும் பயன் துய்க்க முடியாமற் போவதுண்டு. அவர் வீட்டு வேலைக்காரன் கூடப் பாதாம் குழைவு உண் பான்; இவரோ சருக்கரை நோயால் கோதுமைக் கஞ்சியை, குருதி அழுத்தத் தால் உப்பும் இன்றிக் குடிக்கநேரும், 'வகுத் தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத் தார்க்கும் துய்த்தல் அரிது' என்பதை உணர்ந்து

இவர்கள் செயற்பட்டால் இவர்களும் இன்புற நாடும் உயருமன்றோ?

மக்களும் ஆள்வினை நிறைந்து செயற் படின், மனக்கட்டுப்பாட்டுடன் விலை உயர்ந்த பொருள்களை வாங்காமல் நின்று அவற்றை மலியச் செய்து துன்பம் உறவரினும் துணிந்து செயற்படின் தம் பிழை களைந்தோராவர்.

இங்ஙனம், விலை உயர்வுக்குக் காரணமா கும் அரசும் மக்களும் வணிகரும் தத்தம் மனப் போக்கிலும் செயற்பாட்டிலும் வள்ளுவர் வழி நிற்பராயின் விலை அரக்கன் வெல்லப்படுவது உறுதி.

9. முடிவுரை

இவ்விடத்தில், அண்மைக்காலத்தில் பொருளியலார் விலையுயர்வென்பது அரசியற் குழுகச் சூழலின் இயல்பான விளைவென்றும், தவிர்க்க முடியாததென்றும், பொருளின் விலை கூடிற்று என்று சொல்வதைக் காட்டி லும் அப்பொருளை உருவாக்கத் தேவையான உழைப்பின் மதிப்புக் கூடியது என்ற கண் ணோட்டத்தில் பார்ப்போமானால் இது சிக்க லாகவே இராதென்றும் கூறுவதைக் குறிப்பிட வேண்டும். சம்பள உயர்வு, கேட்பவர்கள் தங்களின் உழைப்பின் விலையை உயர்த்து கிறார்கள் என்றுதானே பொருள், அதே ஆள். பொருள்கள் விலை கூடினால் மட்டும் குதிப்பது என்ன நியாயம்? இந்தக் கருத்தையே கொண் டாலும், மாந்தனின் பண்பாடும் நாகரிகமும் பேசும் குறட்கருத்துகள் பயன்படும் என்பதே இங்கு நினைகூரற்குரியது.

சிலரின் அறியாமை

எல்லா நாட்டார்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றவாறு இல்லற வாழ்க்கையும் செங்கோ லாட்சியும் எடுத்துக் கூறுவது திருக்குறள் ஒன்றே. நால் வேதமும் மனுதரும சாத்திரமும் திருக்குறட்கு ஒப்பாகும் என்று திருவள்ளுவ மாலை செய்யுட்கள் கூறுவது அவற்றைப் பாடியவரின் அறியாமை, அடிமைத்தனம் ஒப்புநோக்குந் திறமின்மை ஆகியவற்றையே ஒருங்கே காட்டும். இக்காலத்தும் -பலர் பகவத் கீதையைத் திருக்குறட்கு ஒப்பாகக் கூறுவதும் அவ்வாறேயாகும்.

— மொழி ஞாயிறு, தேவநேயப்பாவாணர்

இந்து மதம் என்று சொல்லாதீர்கள்!

அருள்தரு செகத்குரு சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர அடிகளார்.
தலைமை அஞ்சலகச் சாலை.
பெரிய மடம், கும்பகோணம்.

வீரசைவப் பெருமக்களுக்கு ஓர் அறிவிப்பு.

1981-ஆம் ஆண்டுப் பிப்ரவரி மாதம் 9-ஆம் நாள் முதல் 28-ஆம் நாள் முடிய, இந்திய மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படுகிறது.

கணக்கெடுப்புக் காலத்தில், கணக்கெடுப் பாளர்கள் உங்கள் ஒவ்வொருவருடைய வீட் டிற்கும் வந்து உங்களைப் பற்றிய பல்வேறு புள்ளி விவரங்களைக் கணக்கெடுப்புப் படிவத்தில் பதிவு செய்வார்கள்.

அப்படிவத்தில், 8-ஆம் கலத்தை நிரப்ப உங்களுடைய மதம் என்ன ? என்று கேட்பார் கள். வீரசைவ மரபைச்சார்ந்த நீங்கள், உங்களு டைய மதம், "வீரசைவம்" அல்லது "இலிங்காயத்து" என்று மட்டுமே கூறவும்.

கேள்வி — 8 | மதம் | — என்பதற்கு

வீரசைவம் அல்லது இலிங்காயத்து என்று சொல்லுங்கள்.

கும்பகோணம்,
நாள் :
26—1—1981

அருள்தரு
குருமகா சந்நிதானம்,
பெரியமடம்.



அதே போல சிவனிய (சைவ) மக்கள் சைவம் என்றும், திருமாலிய (வைணவ) மக்கள் வைணவம் என்றும் குறிப்பிடுங்கள்.

(மேற்காணும் செய்திகளை அனைத்து அன்பர் கட்கும் உடன் தெரியப்படுத்துங்கள்.)

பரிசில் பெற்ற கட்டுரை

குறளிய நெறியில் உழவர் சிக்கல்கட்குத் தீர்வு

குறுவைக் கிழான், குறுவையூர், வஞ்சிபாளையம், (அ. நி.) மங்கலம். (வழி)

(எவர் ஏர்பிடித்து உழுகின்றாரோ அவரே உழவர் என்பது வள்ளுவர் கூற்று. உழுபவரை ஆள்பவராய் அமைந்த இன்றைய நிலக் கிழார்க் குமுகாயம் உழவர்க்குமுகாயம் ஆகாது. இக்கட்டுரை உழவை உயிர் மூச்சாகக் கொண்டு நாட்டு நடப்பால் தேய்ந்து வரும் உண்மை உழவர்க்கே பொருந்தும். உழவர் களைக் கூலிகளாக்கியும், நிலமற்றவராக்கியும் முதலாளிகளைப் போன்ற நிலக்கிழார் கட்குப் பொருந்தாது — தேர்வுக் குழுவினர்.)

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" குறள் தமிழ்நாட்டு உழவர்கள் வரிகொடா இயக்க வழி—போராட்டம் நடத்தி வருவதும், மின் கட்டணம், கூட்டுறவுக்கடன் ஆகியவைகளை தள்ளுபடி செய்யுமாறும் வலியுறுத்துவதும் முறையானதே. இதைச் செய்வது நாட்டிற்கும், அரசிற்கும் நல்லதே. இதனால் அரசிற்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

கோரிக்கை:

1. மின் கட்டணம் 12 காசாகக் குறைத்தல், மாத்திரி (மீட்டர்) வாடகையை உருபா 2 ஆகக் குறைத்தல், மின் விளக்கு தண்டப் போடுவதைத் தவிர்த்தல், மின் துண்டிப்பைத் தவிர்த்தல் இன்னபிற.

2. உழவர்கள் பட்ட அரசு, கூட்டுறவு, நில வள வைப்பகங்களின் நலகக்கடன்பயிர்க் கடன் ஆகிய அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. விலை பொருட்களுக்குத் தக்க விலையை முடிவு செய்தல், இடு பொருள் விலையைக் குறைத்தல்.

4. உழவுத்துறை நீர் பாய்ச்சு ஏந்து செய்து கொடுத்தல் (பாசன வசதி).

5. தண்டத் தீர்வை, பயிர்வரி நீக்குதல்

6. நகர்புற நில உச்சநிலைச் சட்டத்தை நீக்குதல்,சிற்றூர்ப் பகுதிகளில் தொழில் ஆலைகள் அமைத்தல்.

7. சிற்றூர் வளர்ச்சித் திட்டங்கள் : வீடு, குடிநீர், சாலை, இலவயக் குடியிருப்பு ஆகிய ஏந்துகள் செய்து கொடுத்தல்,

8. உழவுத் தொழிலில் ஏற்படும். ஏதங்களுக்குக் காப்புத்தொகை வழங்குதல், குடும்பப் பாதுகாப்பு.

9. பயிர், கால்நடை ஆகியன பாதுகாக்க வாழ்நாள் காப்பு (Insurance) ஏற்படுத்துதல்.

இவையும் இவை சார்ந்த நிலைகளும் உழவர்கள் 9 நிலைக் (அம்ச) கோரிக்கைகளாகக் கூறி வருகின்றார்கள்.

மேலே கண்டுள்ள கோரிக்கைகளில் மிகவும் அதிகமாக வலியுறுத்திப் பேசப்படுவன மின் கட்டண உயர்வு, கடன் தள்ளுபடி, விலை பொருளுக்குரிய விலை கொடுத்தல் (விலை நிர்ணயம்) ஆகிய மூன்றுந்தான். மற்றக் கோரிக்கைகள் மிகுதியாகப் பொதுமக்கள் கவனத்திற்கு வராவிட்டாலும் உழவர்களைப் பொறுத்தவரை அக்கோரிக்கைகளும் முகாமையானவைதான். பொது மக்களைப் போலவே அரசின் கவனத்திலும் அதிகமாக உறுத்துவது முதல் மூன்று கோரிக்கைகள்தாம்.

இந்திய நாட்டின் நிலை :

பாரத நாட்டில் நூற்றுக்கு எழுபது விழுக்காடு உழவர்கள். பாரத நாட்டின் அரசியல் சட்டத்தின்படி பெரும்பான்மையானவர்களின் முடிவே இறுதியானது. அதன்படிதான் ஆட்சியும், அரசும், சட்டமும், இதைத்தான்—தேர்தல் நிலைகள்—தெளிவாகக் காட்டுகின்றன, சட்ட மன்றத்திலோ, நாடாளு மன்றத்திலோ உள்ள உறுப்பினர்களில் பாதிப்பெயர்களுக்கு

மேல் ஒருவர் சொன்னாலும் (அவர்கள் எதைச் சொன்னாலும் — தெளிவோ தேர்வோ கிடையாது) அது சட்டம். அந்தச்சட்டம் நாட்டு மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும். இது பாரத அரசியல் சட்டம். அந்த உறுப்பினர் களைத் தேர்வு செய்பவர்கள் நாட்டு மக்கள். நாட்டு மக்களில் எழுபது விழுக்காட்டினர் சொல்வதை இன்றைய அரசியல் சட்டத்தின் படி ஏற்கத்தானே வேண்டும். இது பொது நிலை. யார் எதைச் சொன்னாலும் அவர்கள் பெரும்பான்மையினராக இருந்தால் ஏற்க வேண்டும் என்பது அறிவு நிலைக்கு எற்புடைய தாக இல்லைதான். என்றாலும் அந்தப் பெரும்பான்மையோரின் கோரிக்கைகளில் சுட்டப்படும் கரணியங்களை ஆய்வது தவறல்லவே.

அலுவலர்கள் போராடினால் பணிகள் தடைபடும். அவ்வளவே! தொழிலுடையோர் தங்கள் தங்கள் தொழிலைச் செய்யாமல் போராடும் நிலை உள்ளது. ஏனெனில் அவர்களின் தொழில் அப்படிப்பட்டது. ஆனால் உழவர்கள் தங்கள் பணிகளுக்குச் செல்லாமல் எப்படிப் போராட இயலும். வயலுக்கு ஒரு நாள் நீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட்டால் நான்கு மாத பயன், உழைப்பு, ஆகிய அனைத்தும் போய்விடும். மாடுகளுக்கும். ஆடுகளுக்கும், தீனி போடுவதை நிறுத்த முடியுமா? இதனால் நாட்டின் நிலை என்னவாகும்? எடுத்துக் காட்டாக கடந்த மூன்று ஆண்டுகளாக அரசுக்கு வரி கொடாமல் போராடி வருகிறார்கள். அரசு நடத்து கொண்டுதான் இருக்கிறது. விழாக்களும், வேடிக்கைகளும் இன்னபிற நிகழ்ச்சிகளும் தடைபடவில்லை. ஆனால் அதே உழவர்கள் கடந்த மூன்றாண்டுகளாக மற்றத் தொழிலாளர்களும் அலுவலர்களும் கைக்கொள்ளும் போராட்ட நிலை மேற்கொண்டிருந்தால் இன்று நாட்டின் நிலை என்னவாக இருக்கும். அறிவு நிலையில் மக்கள் இதனை எண்ணிப் பார்ப்பார்களாக. அதே நேரத்தில் வள்ளுவத்தின்

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூ உம்
விட்டேமென் பார்க்கும் நிலை. -1036 [உம்
என்னும்

குறளையும் நினைந்து பார்க்க வேண்டுகிறேன். எனவே, உழவர்களின் போராட்ட நிலை சிந்திக்கற்பாலதே.

அடுத்து கோரிக்கை நிலைகளுக்கு வருவோம்.

மின் கட்டண உயர்வும் (மீட்டர்) மாத் திரி வாடகை குறைப்பும் சரியானதே. இதனை அரசே உணர்ந்து குறைத்துள்ளது. ஆனால் இதில் பெரிய, சிறிய உழவர் என்னும் வேறு

விழிப்புத் தேவை

திருக்குறள் எழுதியவர் திருவள்ளுவரா? ஸ்ரீ ராமதேசிகனா? திகைக்காதீர்கள்:- புதிய புரட்டு — தமிழுக்குத் தன்மான இழுக்கு — திருவள்ளுவருக்குக் களங்கம் எழுப்பப்பட்டுள்ளது!

'எஸ். என். ஸ்ரீ ராமதேசிகனின் சமக்கிருதத் திருக்குறள் — தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளோடு'

— என்ற தலைப்பில் ஸ்ரீ ராமதேசிகன் என்பவர் எழுதி, 'தமிழ், சமக்கிருதம் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனம்' வெளியிட்டது மேற்படி நூலை! இதன் செயலாளர் ஸ்ரீ ராமதேசிகன். அன்றைய தலைவர் தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்!

மேற்படி நிறுவனத்தில் தமிழ்ப்பகுதி இயக்குநராகப் பணியாற்றிய திருமிகு மு. அருணாசலம் க. மு., அவர்களுக்குத் தெரியாமலேயே இந்நூல் அச்சிடப்பட்டு, அதன்பிறகு அவருடைய கண்டனத்தையும் பொருட்படுத் தாமல் ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களை அழைத்து ராஜ்பவனில் வெளியிட்டதைக் கண்டு, அதன் தமிழ்ப்பகுதி இயக்குநர் திருமிகு மு. அருணாசலம் க. மு., அவர்கள் பதவி விலகி, கண்டன அறிக்கையை 'மக்கள் செய்தி' நாளேட்டில் (சென்னை 2—11—1979) வெளியிட்டுள்ளார்கள்.

தமிழுக்குப் — புதிய தீ வினைகள் இது போன்ற உருவத்தில் புறப்பட்டுள்ளதா? ஆளுநர் போன்றோர் தெரியாத்தனமாக உடந்தையாகி இருப்பது விந்தையிலும் விந்தை.

—பாவலர் 'சுமாச', ஈரோடு.

டாறுதான் சிக்கலாக உள்ளது. 15 குறுக்கத்திற்கும் (ஏக்கர்) மேல் யாரும் நிலம் வைத்திருக்கக் கூடாது என அரசு சட்டம் கொண்டு வந்து அதனைச் செயலாற்றிய பிறகு இனியும் பிரிப்பது எம்முறையில் சரியானது அதனைச் செயல் படுத்துவதில் தவற்றைச் செய்வது அரசுதானே. அதனைச் சரியாகச் செயல் படுத்தாமல் பெருநிலக்கிழார் என்று பிரிப்பது ஏனோ? அந்தப்பெரும் நிலக்கிழாரின் மீது சட்டம் பாய மறுப்பது ஏன்?

ஆனால் அதே நேரத்தில் அவர்கள் வைத்துள்ள நிலத்தின் வருமானத்தின் அடிப்படையில் பெரிய, சிறிய என்று பிரிக்காமல் இருக்கும் நிலத்தைக் கொண்டு ஒருவர் 5 குறுக்கத்திற்கும் குறைவாக இருந்தால் சிறிய உழவர் என்றும் 5.1 குறுக்கம் இருந்தால் பெரிய உழவர் என்றும் பிரிப்பது எந்த அறிவுடைமைச் செயலோ தெரியவில்லை. ஒருவர் 5 குறுக்கம். முழுவதும் நெல் பயிரிட்டாலும், வேளாண்மை செய்தாலும் சிறியவரே. ஆனால் ஒருவர் 5.1 குறுக்கம் முழுவதும் வேளாண்மை செய்யாதிருந்தாலும் பெரியவரே நகரில் ஒருவர் வைத்துள்ள சொத்தின் உச்ச நிலையையும், சிற்றூரின் உழவனின் நில உச்ச அளவின் மதிப்பையும் கணக்கிட்டு அரசு ஆய்வு செய்யுமாயின், அரசு சிற்றூர்க்குடி மகனின், நகரக்குடி மகனின் மதிப்பியல் வேறுபாடு களைத் தெள்ளிதின் உணரும்.

அடுத்து, கடன் தள்ளுபடி; உழவர்கள் கடனைத் தள்ளுபடி செய்ய ஏன் கூறுகிறார்கள். அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை. அவர்களின் உற்பத்திக்கு ஆகும் செலவிற்கும் அரசு விளை பொருட்களுக்குக் கொடுக்கும் விலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது உழவர்களுக்கு கட்டுபடியாகவில்லை. அதனால் கடனைக் கொடுக்க இயலாது. தள்ளுபடி செய் என்று கூறுகிறார்கள். எங்களால் இயலாது என்பது வேறு. எங்களால் முடியாது என்பது வேறு. இதனை அரசு தெளிவாக உணர்ந்தால் சிக்கலே இல்லை. அதே நேரத்தில் இன்று சிற்றூர்ப் பகுதிகளில் வாழும் உண்மை உழவர்களின் உழைப்பு என்ன! வாழ்க்கை நிலை என்ன; என்பதனை நன்றாக எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக நகர்ப்புரத்தில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரமே உழைக்கும் ஆலைத் தொழிலாளியின் வாழ்க்கை நிலையையும், அதிகாலை கதிரவன் எழுமுன் எழுந்து தள்ளிரவு வரை வெயில் என்றும் மழை என்றும் குளிர் என்றும் பாராமல் உழைக்கும் உழவனின் நிலையையும் நன்றாக எண்ணிப்பார்த்தால் தெளிவு ஏற்படும். உழவனின் உழைப்பு மட்டும் அல்ல, அங்கு அவனுடைய முதலீடும் அடங்கி இருக்கிறது. உழைப்பிற்கு ஏற்ற ஊதியமில்லை, முதலீடுக்கும் ஏதுமில்லை.

எடுத்துக் காட்டாக இந்திய நாடு விடுதலை அடைந்த நேரத்தில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து வந்தோம். ஆனால் இன்று ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நாட்டில் பசுமை வளம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது அன்று முப்பது கோடி மக்களுக்கு உணவில்லாமல் வெளி நாடுகளுக்குக் கையேந்திச் சென்ற நிலை மாறி இன்று அறுபத்தாறு கோடி மக்களுக்கும் உணவளித்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு நாட்டை உயர்த்திய உழவர்களுக்கு அவர்களின் கடந்த 30 ஆண்டுகளின் ஊக்க ஊதியமாக (போனஸ்) அரசு இந்த 400 கோடி உருபாவைத் தள்ளுபடி செய்தால் என்ன? தொழிலாளர்கள் மட்டும் ஊக்க ஊதியம் ஆண்டுக்கு ஆண்டு வாங்கலாம், கேட்கலாம், சட்டம் உண்டு. உழவனின் நிலையை உயர்த்த அரசு இவ்வகையில் ஊக்க ஊதியம் தரக்கூடாதா?

உழவர்களை நாட்டின் நலனுக்கு இந்த நாட்டிற்கு முதலீடாகப் போடப்பட்டுள்ள தொகை என்ன தெரியுமா? தமிழகத்தில் உள்ள கிணறுகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 22 இலக்கம்' இதனை வெட்ட அவர்களுக்கு ஆன செலவு கிட்டத்தட்ட 4000 கோடி உருபா. இத்தொகை நாட்டின் வளர்ச்சிக்கு உழவர்களின் முதலீடா? இல்லையா? அரசின் கடன் எப்படி நாட்டு மக்களின் வளர்ச்சிக்குப் பயன் பட்டதோ (அதாவது அணைகள், சாலைகள் இன்னபிற அரசு சொத்துகள்) அதே போல உழவர்களின் கிணறுகள் நாட்டின் பசுமைப் புரட்சியில் முதலீட்டுத் தொகை.

அடுத்து விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுத்தல்

ஒரு பொருளை விளைவிக்கும் உழவனுக்குக்கிடைக்கும் ஊதியத்தைவிட, அதனை

வாங்கி விற்கும் வணிகர்களுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் அதிகமான ஊதியம் கிடைக்கிறது, உண்டாக்குபவனுக்கும் பயன் குறைவு. நுகர்பவனுக்கும் பயன் குறைவு. இந்த நிலை ஏன்? இதற்கே விலை உறுதிப்பாடு தேவை. எடுத்துக் காட்டாக சருக்கரை வேண்டிய கரும்பை உண்டாக்குபவனுக்குக் கிடைக்கும் ஊதியத்தை விட கரும்பைச் சருக்கரையாக ஆக்குவோனுக்கு அதிக ஊதியம் கிடைக்கிறது. இதன்வழி மூலப்பொருள் விலை குறைந்தாலும் உண்டாக்கப் பொருள் விலை குறைவதில்லை.

எடுத்துக்காட்டு : வண்ணத்திற்கு (Paint) மஞ்சள் மூலப்பொருள் இரு ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் விற்ற விலையிலிருந்து 5 மடங்கு குறைந்துள்ளது. ஆனால் வண்ணத்தின் விலை அன்றைய விலையிலிருந்து 2 மடங்கு உயர்ந்துள்ளது.

அதே போல இடு பொருள்களின் விலை- மருந்து, உரம் ஏறியுள்ளது. அதற்குத் தகுந்தாற்போல் இதன் விலையையும் அரசு உயர்த்துதல் வேண்டும். இன்னும் சொன்னால் உண்டாக்குபவர்களே விலை முடிவும் செய்யவேண்டும். இதனால் உழைப்பவன் அதன் பயனை அடைய வழிகிடைக்கும். வணிகர்கள் பயன் பெறுவது போல் அரசும் பயன் பெறுகிறது. அரசின் பயனில் அதற்கு கிடைக்கும் ஊதியத்தில் நாங்கள் ஊக்க பங்கு (Bonus) கேட்கிறோம். தொழிலாளர்கள் முதலாளிகளை (அரசு உட்பட) பங்கு (Bonus) இந்தக் கடன் தள்ளுபடி வகையினை ஒக்கும்.

ஓர் எடுத்துக்காட்டு. இக்கால் நடுவணரசின் இருப்பில் உள்ள உணவுப் பொருள்களுக்கு அரசு கொடுத்து உழவர்களிடமிருந்து வாங்கிய விலைக்கும் இன்றைய விலைக்கும் கணக்குப்பார்த்தால் உருபா 1300 கோடி அரசு உழவர்களுக்குக் கொடுக்க வேண்டி உள்ளது.

இருப்பு 1 . 80 கோடி கல்லெடை வாங்கிய விலையைவிட இன்று கல்லெடை (டன்) ஒன்றுக்கு உருபா 750 அதிகம் இதேபோல் பல.

ஆக உழவர்களின் கோரிக்கைகள் அரசு ஏற்குமானால் விளைவது நன்மையே, அதாவது நாட்டின் கீழ்நிலை மக்களை ஊக்குவித்தால் அவர்கள் இன்னும் ஆர்வத்தோடு உழைத்து விளை பொருளைப் பெருக்குவார்கள்; அதன் பயன் நாட்டிற்கே சாரும்,

உழுவார் உலகத்தார்க்கு ஆணி — தமிழ் மறை, நாட்டில் முதலில் அகல வேண்டுவது வறுமையே. வறுமையை அகற்ற உழவர்களால்தான் முடியும்,

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. — 731
உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு — 734

தமிழ் நாட்டின் — பாரதத்தின் பசிப்பிணி மருத்துவன் உழவனே, மருத்துவன் இருந்தால் தானே நோய் நீக்க முடியும், மருத்துவனைக் காப்பது அரசு மட்டுமன்று, பொது மக்களும் கூட. போலி மருத்துவனைப் புரிந்து நீக்குதல் அரசு மேற்கொள்ள வேண்டிய முதற் கடன்.

உழ்ந்தும் உழவே தலை' — குறளியம்.

கலப்படத்தின் காட்சிகள்

"இதுவரை தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள கலப்பு தானாகவே ஏற்பட்ட கலப்பன்று. வேண்டுமென்றே ஓர் இனம் தன் இனத்தை உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற நோக்கோடு தன் மொழியை, தன் மதத்தை, தன் பண்பாட்டை நம்மில் கொணர்ந்து கலக்கச் செய்த வலுக்கட்டாயக் கலப்பு ஆகும். இல்லெனில் மொழி - பாஷையாகியிருக்காது; முதுகுன்றம் -விருத்தாசலம் ஆகியிருக்காது; பொங்கல் - சங்கராந்திப் பண்டிகையாகியிருக்காது; பள்ளிக்கூடம் — வித்தியாலயமாகியிருக்காது; திருமணம்-விவாக சுபமுகூர்த்தமாயிருக்காது; நம் மூத்தமகன் ஜேஷ்ட குமாரனாகியிருக்கமாட்டான்; உலகத்திற்கே நாகரிகத்தைப் புகட்டிய நாமும் இன்று நாலாந்தர சூத்திர சாதியாயிருக்கமாட்டோம்"

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

வாசகர் (படிக்குநர்)

(தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் வே. தில்லைநாயகம்)

1 வாசகர் வாசகர் என்கின்றீர் ;
வாசகர் என்பார் யாரைய்யா ?
வாசகர் என்றால் தெரியாதா ?
வாசிக்க நினைப்பவர் வாசகராம் !

2 படிக்கத் தெரிந்தவர் வாசகராம் ;
படிக்க நினைப்பவர் வாசகராம் ;
துடிக்கும் உள்ளம் கொண்டவராய்
தொடர்ந்து படிப்பவர் வாசகராம்.

3 செய்தி அறியும் நினைவாலே
செறியும் நூலகம் வந்திடுவார்;
மெய்ம்மை காணும் முனைப்பாலே
மேலும் மேலும் வந்திடுவார்.

4 கூட்டம் அங்கே இருந்தால்நேர்
கோட்டில் நின்று வந்திடுவார்;
நாட்டம் எல்லாம் படிப்பதிலே
நாளும் வருவார் தவறாமல்.

5 பட்டியை அங்கே பார்த்திடுவார்;
படிக்கும் நூலைத் தேர்ந்திடுவார்
சட்டென அதையும் எடுத்திடவே
சடுதியில் அடுக்கறை சென்றிடுவார்.

6 அடுக்கறை தன்னில் நூல்களையே
அமைதியாய்க் கூர்ந்து பார்த்திடுவார்;
எடுத்த நூலை மெதுவாக
ஏந்திக் கொண்டே நடந்திடுவார்.

7 படிக்கும் அறையில் பதறாமல்
பைய வந்தே அமர்ந்திடுவார்
படிப்படி யாகச் செய்திகளைப்
பாங்குடன் நன்றாய்ப் படித்திடுவார்.

8 ஏடுகள் தன்னைப் புரட்டுகையில்
எச்சில் ஏதும் தொடமாட்டார்;
கோடுகள் அதிலே போடாமல்
குறிப்புகள் மட்டும் எடுத்திடுவார்.

9 நாள்தாள் சிலவும் பார்த்திடுவார்;
நல்ல குறளியம் படித்திடுவார்;
கேள்வித் தாள்கள் வேண்டுமெனில்
கேட்டுப் பெற்றுப் பார்த்திடுவார்.

10 நூற்றொகை சிலவும் கேட்டிடுவார்;
நொடியில் அவற்றைத் தந்ததுமே
போற்றும் நூலகர் போக்கினிலே
புன்னகைச் சொரிந்து படித்திடுவார்.

11 ஐயம் எழுந்தால் வினவிடுவார்;
அதற்கு நூலகர் பதில்தருவார்
ஐயம் அகன்ற நிலையினிலே
அதற்கு நன்றி கூறிடுவார்.


12 இல்லம் சென்றும் படித்திடவே
இனிய நூலைக் குறிப்பிட்டு
நல்ல முறையில் கடனாக
நாளும் பெற்றுப் படித்திடுவார்;

13 ஆய்வுகள் செய்யப் படித்திடுவார்
ஆய்ந்து ஆய்ந்து படித்திடுவார்
ஓய்வுகள் இன்றி உழைத்திடுவார்
ஒவ்வொரு நாளும் படித்திடுவார்.

14 தவணை தாண்டிப் போகாமல்
தக்க நாளில் திரும்பிடுவார்;
அவரை நூலகர் போற்றிடுவார்
அதனால் நூல்கள் சுழன்றுவரும்

15 ஆளுக்கு ஒருநூல் கட்டளையும்
அவரால் பெருமை பெற்றிடவே
நாளுக்கு ஒருநூல் படித்திடுவார்
நல்ல படிக்குநர் ஆயிடுவார்!

குறளியம் - முழுமைப் புரட்சியின் மூலமுழக்கம்



சிந்தனைச்செம்மல்
ச. ஆனந்தன்
வழக்குரைஞர், கோபி.

4. திட்டமிட்ட திரிபும் மறைப்பும்

மறுமலர்ச்சி பெற்ற புதுமையானதொரு குமுகாயத்தை நிறுவ வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட திருக்குறள் அக் குறிக்கோள் நிறைவேறாமலேயே இலக்கிய வரிசைகளில் அணி செய்யும் ஒரு பேரிலக்கிய நூலாக இன்றுவரை நிலைபேறடைந்து விட்டது.

19ஆம் நூற்றாண்டு வரையும் கழக இலக்கியங்கள் மக்கள் மன்றத்திற்குக்கொண்டு வரப்படவில்லை. ஆனால் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கிய பின் அந்நூல்களின் பெயர், இயற்றிய ஆசிரியர்கள், எழுந்தகாலம், வரலாற்றுப் பின்னணி, உரைகள், விளக்கங்கள் போன்ற அவ்வளவுமே தமிழ் மக்களுக்குத் தரப்பட்டு விட்டன. எனினும் உலக அறிவுப் பனுவல்களில் ஒன்றான திருக்குறளை இயற்றிய ஆசிரியரோ, அவர்தம் வரலாறோ, அந்நூலெழுந்த காலமோ, குறைந்த அளவில் நூலின் சரியான பெயரோ கூட இதுகாறும் சரியாக வரையறுத்து வெளிப்படுத்தப் படவில்லையே !!

நூலின் பெயர் என்ன?

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், திருக்குறளில் மிடைந்து கிடக்கும் அறிவு நலன்களைப்பற்றிக் கூறுயபோது, மொழி சுருங்கல், பொருள் விளங்கல், மொழிய இனிது ஆதல், நலமொழி புணர்த்தல், வழியமை ஓசையில் பொலிதல், ஆழ்ந்திருத்தல், முறை நிறுவல், மலைவு தீர்த்தல், மொழி விழுமியது பயத்தல். [எடுத்துக்] காட்டாதல், போன்ற பதின்வகைப் பண்புகளை நிறுவுகிறார். இத்துணைச் சிறப்புப்பெற்ற அந்நூலின் இயற்பெயர்தான் யாது? இன்றும் ஆய்வுக்குரியதே. நூல் இயற்றப்பெற்ற யாப்பு வகைபற்றித் ''திருக்குறள்'' என்ற செயற்கைப் பெயராலேயே அது இன்றும் வழங்கப்படுகிறது.

பத்துப் பெயர்கள் அப்பனுவலுக்கு உண்டென்று பறைசாற்றுகின்றனர், புலவர் பெருமக்கள். அதற்குச் சான்றாகப் பிற்கால நூல்களைக் காட்டுகின்றர். ஆனால் திருவள்ளுவமாலையிலுள்ள 55 பாடல்களிலும், ''திருக்குறள் என்ற பெயரே காணப்படுவதில்லை. மாறாக அதன் 15 பாடல்களும் [9-10-11-12-15-17-18-19-30-31-39-44-46-49-51] ''முப்பால்'' என்ற பெயரையே முழங்குகின்றன. பதினெண்கீழ்க் கணக்குத் தொகை நூல்கள் பற்றிக் கூறும் வெண்பாவும் கூட முப்பால் என்றே கூறுகிறது. மற்றவை பிற்காலப் படைப்புகளே!

திருக்குறளின் உள்ளுரையோ அந்நூல் எழுந்த காலத்தே தமிழகத்திலிருந்த அமைப்புகளையோ, கொள்கைகளையோ, நடைமுறைகளையோ, காலக் கணிப்பையோ, இடப் பகுதியையோ, மொழிக் குறிப்பையோ நேரடியாகக் காட்டுவதில்லை. அவை திருவள்ளுவரால் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டன எனத் தமிழ் மாணவர் என்று தன் கல்லறையிலேயே எழுதி வைக்கச்சொன்ன ஆங்கிலத் தமிழ்ப் பேரறிஞர். ஜி. யு. போப் அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்.

நூலாசிரியர் யார்?

நூலாசிரியர் பற்றிக் காணப்படும் குறிப்புகள் யாவும் கன்ன பரம்பரைக் கதைகளேயன்றித் — திட்டமிட்ட மறைப்பேயன்றி — வேறல்ல. திருவள்ளுவ மாலை, ஞானாமிர்தம், கபிலர் அகவல், புலவர் புராணம், தமிழ் நாவலர் சரிதை போன்ற பிற்கால நூல்களில் திருவள்ளுவர் பற்றிய சில தவறான குறிப்புகள் காணப்படுகின்றன.

அவரை நான்முகன் தோற்றமென்றும், நாமகள் அவர் நாவிலிருந்து குறள் பாடினாள் என்றும் "திருவள்ளுவர் மாலை" குறிப்பிடுகின்றது. ஆதி என்னும் புலைச்சிக்கும். பகவன் என்னும் பார்ப்பனனுக்கும் அவர் பிறந்த அனாதைக் குழந்தை என்றும். தமிழகத்தில் பல்வேறு காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களான ஔவை, கபிலர், வள்ளி, அதியமான், உப்பை. உறுவை போன்றோர் அவர்தம் உடன் பிறந்தார்கள் என்றும்,கபிலர் அகவலும் புலவர் புராணமும் புளுகுகின்றன. இன்னும் எத்தனையோ கதைகள் அவரைப்பற்றி. அவற்றுள், அவரைத் தொடர்புபடுத்தும் ஏலேலசிங்கன் கதையும் ஒன்று.

வாழ்வை வளமாக்கும்

குறளைப் படியுங்கள்: விரும்பிப் படியுங்கள். மேற்போக்காக அல்ல; கருத்தூன்றிப் படியுங்கள். எழுதுவதற்காக அல்ல, பேசுவதற்காக அல்ல, நடப்பதற்காக என்று படியுங்கள். அப்படிப் படித்தால் அது உங்கள் வாழ்வை வளமாக்கும்,

முனைவர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. வி.

அவரை ஒரு சித்தராக்கி, "ஞான வெட்டியான்", "திருவள்ளுவர் ஞானம்" என்னும் பிற்கால நூல்களை, அவர் தலைமேல் சிலர் ஏற்றி வைத்துள்ளனர். இவை மட்டுமா? திருக்குறளின் ஆசிரியரையே கூட மாற்றி விட்டனர், இன்னும் சிலர் குந்தகுந்தாச்சாரியார் என்ற சமணத் துறவியினால்தான் திருக்குறள் பாடப்பெற்றதென்று, சைனக் கன்ன பரம்பரை வரலாறு ஒன்றும் வழங்குகிறது.

இவை அனைத்தையும் உற்று நோக்குமிடத்துப் பதினேழாம் நூற்றாண்டிலேயே வெளிநாட்டு மொழிகளில் பெயர்க்கப்படும் தகுதி வாய்ந்திருந்த அந்நூல், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டு, ஆசிரியர் பெயர், நூலின் பெயர் உள்பட அனைத்தும் மறைத்தலுக்கு ஆட்பட்டிருந்தது என்பது புலனாகிறது.

உலகப் பொதுமையை நாட்டிட உளவியல் குமுகாயவியல், மாந்தரினம் ஆகிய பின்னணியில் யாவர்க்கும் பொதுவான அமைப்பு முறைகளை வகுத்தளிப்பதற்காக,அஃகி அகன்ற அறிவைப் பெற்ற பெரும் சிந்தனையாளனால் அப்பகுத்தறிவுப் பனுவல் ஆக்கப்பட்டிருந்தும் கூட சென்ற இருபது நூற்றாண்டுகளில் அதன் ஆசிரியர் ஈடு இணையற்ற முறையில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளார் என்பது தெளிவாகும். ஆனால் அவரைப்பற்றிய இழிவு படுத்தும் கருத்துகள், அவர் பிறப்பில் பழுதை ஏற்படுத்தும் பொல்லாங்குக் கதைகள், அவர் அறிவிற்கு மாசு கற்பிக்கும் தெய்வீகப் பின்னணி, அவர் வாழ்க்கை முறையில் கூறப்படும் விதண்டாவாதங்கள், அவர்தம் நூல் அரங்கேற்றத்தைப் பற்றிய புனைவுகள் எல்லாம், அப்பேரறிவாளரை முற்றும் மூடி மறைத்திடவில்லை.

மாலை செய்த மாற்றம்!

இன்றிருக்கும் மொத்தத் திருக்குறட்பாக்களின் எண்ணிக்கை பற்றியும், அதன் பெரும் பகுப்பங்களைப் பற்றியும் அதன் 133 அதிகாரங்கள் பற்றியும், இயற்பாகுபாடுகள் பற்றியும் வகைபடுத்திக்கூறும் முதல் நூல் திருவள்ளுவர் மாலை! பல புலவர்கள் திருக்குறளைப் போற்றிப்பாடிய 55 பாக்களைக் கொண்டது. ஆனால் புகழுரை பாடியே ஒப்பீடு செய்தே — திருக்குறள் முதல் நூலைத்

திரிபு படுத்தியதும் அம்மாலையே! திருக்குறளின் உண்மைப் பொருளையும், உள்ளுரை நோக்கையும், அமைப்பையும் மூலத்திலிருந்து மாற்றியமைத்த பல பாடல்கள் திருவள்ளுவ மாலையில் இடம் பெற்றுள்ளன. வள்ளுவக் கருத்துக்களுக்கே மாறான பல கருத்துகளையும் இன்னும் சில பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

திருக்குறள் யாக்கப்பட்டு, அரங்கேற்றப் பட்ட காலத்தில் திருவள்ளுவமாலை இயற்றப் படவில்லை என்பது கண்கூடு. திருவள்ளுவ மாலை பாடிய பலருடைய பெயர்கள் சங்கத் தொகை நூல்களில் இல்லை. அப் பாடல்களிற் பல, கடைச் சங்கப் பெரும் புலவர்களின் பாடல்களைப் போன்ற சிறப்பும் பொருளமைதியும் கொண்டவையாகவும் இல்லை. அசரீரி உரையும், நாமகள் கூற்றும், இறையனார் பாராட்டும் ஆகிய மூன்று பாட்டுகளும் அதில் இடம் பெறுகின்றன. பாக்களின் நடை பெரும்பாலும் பிற்காலத்ததாக—திருவள்ளுவர் கருத்துகளுக்கு முரண்பட்டதாகவும் உள்ளன எனத் தமிழ் ஆய்வுப்பேரறிஞர்கள் பலரும் கருதுகின்றனர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், "திருவள்ளுவ மாலை ஆராய்ச்சிக் குரியது ; அப்புலவர்கள் பாடிய தொகை நூற்பாக்களை ஆராயின், அவர்கள் பல்வேறு காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பாடிய பாக்கள் பிற்காலத்தில் புறநானூறு போன்ற தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டாற் போல, திருக்குறளை பாராட்டிப் பல்வேறு காலங்களில் பல புலவர்கள் பாடிய பாக்களையும், பிற்காலத்தவர் 'திருவள்ளுவ மாலை' என்னும் தலைப்பால் தொகுத்தனர் என்று கருதுதலே மெத்தப் பொருந்தும். அப் புலவர்களுக்கு வள்ளுவர் சம காலத்தவர் என்று கொள்ளுதலினும் அவர்களுக்கெல்லாம் முற்பட்டவராக கொள்வதே சால்புடைத்தாம்'(6)

மக்கள் வாழ்க்கையில் அடைய வேண்டிய குறிக்கோட்கள் யாவை? அவர்தம் வாழ்க்கை முழுமை பெறுவதற்காகத் தேட வேண்டியவை யாவை? அவற்றிற்குரிய வழிவகைகள் யாவை என்ற வினாக்கள் எழுந்தபோது, ஒவ்வொரு கால வட்டத்திலும் அறிஞர் பெருமக்கள் அவற்றிற்குரிய விடைகளை இயன்ற அளவு காண முற்பட்டுள்ளனர். அவற்றையே மக்கள் வாழ்வின் " உறுதிப் பொருட்கள் " என்ற கலைத் தொடரால் [Technical term] அழைத்தனர்.

திருக்குறள் எழுந்த காலத்தில் அவ்வுறுதிப் பொருட்கள் மூன்றாக மட்டுமே இருந்தன; அவை அறம், பொருள், இன்பம் என்பவையாகும். "வீடு" என்ற கருத்து வெகு பிற்காலத்தில் தோன்றியதே.

வடமொழிச் சிந்தனையாளர்கள் கூட "திரிவர்க்கம்" என்று கூறப்படும் 'தரம்' 'அர்த்த' 'காமப்' பகுப்பையே முன்னர் கொண்டு இருந்தனர். "மோட்சம்" என்று சொல்லப்படும் நான்காவது பகுப்பு பிற்காலத்தில் தோன்றியதே. திரிவர்க்கம் அப்போது சதுர்வர்க்கம் ஆகிவிட்டது.

தொல்காப்பியம், கழக இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் ஆகியவற்றில் "வீடு" பற்றிப் பேசும் நான்காம் உறுதிப்பொருள் காணப்படுவதில்லை. வாழ்க்கையில் முடிந்த குறிக்கோட்களாகிய அறம், பொருள், இன்பம் மட்டுமே அவற்றில் பேசப்படுகின்றன. ஆனால் திருக்குறளில் இல்லாத நாற்பால் கருத்து [வீட்டுப்பேறு] திருவள்ளுவ மாலையில் பல பாடல்களில் [7, 8, 19, 22, 50] பகரப்படுகின்றது.

(6) "திருவள்ளுவர்" - பக். 4.
நாவலர் சோமசுந்தரபாரதியார்

திருக்குறளே பாரதத்தின் நாட்டு (தேசிய) நூல்

வள்ளுவர் காட்டும் நாடு எது? எல்லைகளில் சிக்கிச் சீரழியும் நிலப் பரப்புகளை வள்ளுவர் நாடு என்று கருதவில்லை, மக்கள் வாழும் நிலமனைத்தும் வள்ளுவரது நாடே. ஆதலால் குறுகிய எல்லைக் கோட்டுப் பற்றுகளை அகற்றும் திருவள்ளுவரது திருக்குறளே பாரத நாட்டு (தேசிய) நூலாக இருப்பதற்குத் தகுதியுடையது.

—தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்மந்தர், 8ஆம் நூற்றாண்டின் மணிவாசகப் பெருமான், திருமங்கையாழ்வார் போன்ற சமயக் குரவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றோடு வீட்டுப்பேற்றையும் சேர்த்து முதன் முதலாகப் பாடுகின்றனர்.

திருவள்ளுவ மாலையில் திருக்குறளின் மதிப்புரையாகப் பக்தி நூல்களின் பல கொள்கைகள் ஒரு சார்பு நிலையில் சொல்லப்படுவதையும் காண்கிறோம்—எனவே திருவள்ளுவ மாலை பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட — அல்லது எழுதப்பட்ட—ஒரு தொகைநூல் என்பதும், அம்மாலையை இயற்றியோர் தத்தம் அறம், பொருள் மற்றும் குமுகாயக் கொள்கைகளை திருக்குறள் கொள்கைகளாகத் திரித்துவிட்டனர் என்பதும் பெறப்படுகின்றன.

திருவள்ளுவ மாலை எழுந்த காலத்தில் நான்மறைகள் மிக உயர்ந்த நூல்கள் என்றும் பாரதம், இராமகாதை, மனுதர்மம், வேதாந்தம் ஆகிய வடமொழிப் பனுவல்கள் மிக மேலான நூல்கள் என்றும், வேத நெறியே வாழ்வுநெறி என்றும் தமிழ் மக்களால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. திருக்குறளை உயர்வுபடுத்தி, ஒப்பீட்டாய்வு செய்வதன்மூலம் அதன் புகழை ஓங்கச்செய்யக் கருதிய புலவர் பெருமக்கள் திருக்குறளை வேதசாரம் [42, 37] என்றும், மேற்சொன்ன வடமொழி நூல்களுடன் திருக்குறள் மட்டுமே ஒப்பிடத் தகுந்தது [30] என்றும் அது ஆறு வகை சமயக் கருத்துக்களைக் கொண்ட அரிய நூல் [44] என்றும் போற்றிப் பாடினர்.

பண்டாரகர் சோ. ந. கந்தசாமி அவர்கள் திருவள்ளுவ மாலை பற்றிய தனது கருத்தைக் கூறும்போது, "பக்திவெள்ளம் பாய்ந்த பல்லவர் காலத்தில் எழுந்த திருவள்ளுவ மாலையில் திருமுறை, நாலாயிரம் போன்ற பக்தி நூல்களின் கருத்துகளும் இடம்பெறக் காண்கிறோம்." (7) என்றும்,

"வள்ளுவர் காட்டிய நெறி வேத நெறிதான் என்ற விளம்பர நோக்கத்துடன்

இல்வாழ்க்கை ஏற்று வாழ்க்கைத் துணைநலம் பெற்றவர்களைக்

குறளியம் வாழ்த்துகிறது!

ஆர்க்காடுத் திருக்குறள் பேரவையின் செயலாளர் திரு. மா. சோதி அவர்களின் திருநிறை செல்வி புவனேசுவரி (எ) சுமதிக்கும், சித்தூர் மாவட்டம் பலமநேரி நகரம் திரு. எம். பி. வெங்கடாசலம் அவர்களின் திருநிறை செல்வன் எம். வி. சந்திரசேகரனுக்கும் தி. ஆ. 2021 சுறவம் 12-ஆம் நாள் (25—1—81) பலமநேரி நகரக் கடைத் தெருவிலுள்ள திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. குறளியம் அவர்களை வாழ்த்துகிறது.

வைதிகச் சார்பினரால் திருவள்ளுவ மாலையை எழுதப்பட்டிருத்தல் வேண்டும்," (8) என்றும் வெளிப்படையாக குறிப்பிடுகிறார்.

அதன் விளைவாக திருக்குறளின் முழு நூல் நுவல் பொருளும் திசை திரும்பிவிட்டது. கருப்பொருளும் வடமொழிப் பனுவல்களின் வண்ணத்தைப் பூசிக்கொண்டது.

கீழ்க்கணக்கால் கருத்துப் பிறழ்ச்சி :—

பழந்தமிழ் நூல்களை மூன்று வரிசைகளாகப் பகுத்துச் சொல்கின்றனர், அவை. பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவையாகும். பதினெண் கீழ்க்கணக்கு என்ற வரிசையில், பதினெட்டுச் சிறு நூல்களைத் தொகுத்து உள்ளனர், அதற்கு மூலமாகப் பழம் வெண்பா ஒன்றுண்டு.

" நாலடி நான்மணி நானாற்பது
ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலை சொல் காஞ்சியோடு ஏலாதி
என்பது
கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு "
என்பதே அது.

---

(7) திருக்குறள் கூறும் உறுதிப்பொருள்.
(1977) பக்கம் 13

8 " திருக்குறள் கூறும் உறுதிப் பொருள் "
(1977) பக்கம் 22

8 மேற்படி பக் — 22

திருக்குறள் முப்பாலென இதில் அழைக்கப்படுகின்றது. மற்றவை — நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது' இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது ஐந்திணை எழுபது, திணை மாலை நூற்றைம்பது, கைந்நிலை, களவழி நாற்பது, முதுமொழிக்காஞ்சி நாலடியார் ஆகிய பதினேழு சிறு நூல்களாகும்

இவற்றுள் திருக்குறள் கிறித்து தோன்றுவதற்கு முன்னரே இயற்றப் பட்டது ; களவழி நாற்பதும் முதுமொழிக் காஞ்சியும் கடைச்சங்க காலத்தில் தோன்றியவை, நான்மணிக்கடிகை இன்னா நாற்பது, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது ஆகிய ஐந்து நூல்களும் கி. பி. 4-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இனியவை நாற்பது 5-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது; திரிகடுகம். ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம் ஏலாதி, ஐந்திணை எழுபது. திணை மாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகியவை 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டவை,

இந்த அற நூல்களில் " நாலடியார் " இறுதியாக 8-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று கல்வெட்டுச் சான்றுகள் உண்மையைக் காட்டுகின்றன, எனத் தமிழ் வரலாற்று ஆய்வறிஞர் திரு சதாசிவ பண்டாரத்தார், அவர்கள் நிறுவுகிறார் மேற்சொன்ன பதினெட்டு நூல்களும் காலத்தால் நெடிதும் இடைவெளி உள்ளவை,

எனினும் திருக்குறளைத் தவிர மற்ற பதினேழு நூல்களும் வெண்பாக்களால் ஆனவை என்ற காரணத்தாலும், திருக்குறளே கூட எழுசீர் வெண்பா எனக்கருதப் பட்டதாலும் இந்நூற்களின் பாடல் மற்றும் யாப்பு வகை ஒரே தன்மைத்தாயது எனக் கொள்ளப் பட்டு பதினெண் கீழ்கணக்கில் திருக்குறளையும் முறையின்றிச் சேர்த்துவிட்டனர். மேலும் அகவொழுக்கம் பற்றிய ஆறு நூல்களைத் தவிர மற்ற ஒன்பது நூல்களும், கழகக் கால நூல்கள் இரண்டும், " அற நூல்கள் " என்ற பிரிவில் அடக்கப்பட்டு நூல் நுவலும் பொருளான அறம் மற்றும் ஒழுக்கவியலைப் பற்றியதாகக் கொண்டு திருக்குறளையும் அவற்றில் ஒன்றாகச் சேர்த்துவிட்டனர்.

ஆனால் திருக்குறளின் முழுநுவலும், பொருளும் வெறும் அறமோ அல்லது வெறும் நயன்மை மட்டுமோ அல்ல.

பொருட்பால் முழுவதும் அரசியல் பொருளாதாரத்தையும் குமுகாய வியலையும், பல் துறைகளிலும் ஆய்வு செய்கிறது. காமத்துப் பால் முற்போக்கான அகப்பொருள் பற்றிப் பேசுகிறது. எனவே, திருக்குறளை வெறும் அற நூல் எனக் கொண்டது. எவ்வகையாலேனும் பொருந்தாது.

இவ்வகையில் திருக்குறளின் உள்ளார்ந்த மெய்ப் பொருள் பொது நுவல் பொருள், புரட்சிக் குமுகாயம் படைக்கும் புதுமைக் கருத்துகள் எல்லாம் — பதினெண்கீழ்க் கணக்கின் அற நூல் என்ற வரிசையில் குறள் சேர்க்கப்பட்டதால் — மறைக்கப் பட்டு, திரிபு படுத்தப்பட்டு, வெறும் நீதி நூலாக — இலக்கியமாக — ஆக்கப் பட்டுவிட்டு விட்டது. பிற்கால சிற்றிலக்கிய வரிசையில் ஒன்றாக இணைக்கப் பட்டதால் அதன் நுண்மாண் நுழைபுலத் திறன்கள், அஃகி அகன்ற அறிவுக் கோட்பாடுகள் திருவள்ளுவரால் திட்டமிட்டபடி தன்னியல்போடு தமிழ் மக்களுக்குத் தரப்படவில்லை,

பதினெண் கீழ்க் கணக்குத் தொகுப்பைக் காட்டும் வெண்பா, யாரால் எப்போது பாடப்பட்டது என்பது தெரியாது, அப்பதினெட்டு நூல்களையும் யார் எந்தக்காலத்தில் தேர்ந்தெடுத்துத் தொகுத்தார்கள் என்பதும் புலப்படவில்லை. உரையாசிரியர்களிலே கூட குணசாகரர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரைத்தவிர மற்றையோர் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

நாலடியார் 8-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பதற்குரிய சான்றுகள் தெளிவாக இருப்பதால் திருக்குறளைப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகச் சேர்த்த மாபெரும் அநீதியும் 8-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.

திருக்குறள் பகுப்பு, பொருள் பற்றிய திருவள்ளுவமாலையின் திரிபு முதன் முயற்சியெனில், பதினெண் கீழ்க்கணக்கால் விளைந்த அநீதி, அதன் தொடர் நிலை மறைப்பாகும்.

வரலாற்று உண்மை !

கடைச் சங்கம் வீழ்ந்த மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயிருந்து, ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி வரை களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகத்தில் இருண்ட காலம் நிலவிற்று. அன்னைத் தமிழ்மொழி ஆதரவின்றித் தவித்தது. பௌத்த சமயத்தை ஏற்றிருந்த களப்பிரர்கள் பாலி மொழியையும் பிராகிருதத்தையும் வளர்த்தனர். ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் அவர்கள் சமணத்தைத் தழுவியபோதுதான் சமண அறிஞர்கள் தமிழிலும், பல நூல்களை இயற்றத் தொடங்கினர். ஆசாரத்தை விளக்கும் ஆசாரக்கோவை உட்பட பதினெண் கீழ்க் கணக்கின் பல நூல்கள் நீதி நூல்களாக ஏற்கப்பட்டன; திருக்குறளின் பல அறக் கருத்துகள் நேரடியாகவும் மறை நிலையிலும் அந்நூல்களில் எடுத்தாளப்பட்டன; ஊடுருவியுள்ளன.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்ததமிழியல் வல்லுநரான எம். ஜூல்சு வின்சன் [Jules Vinson] இந்திய பிரெஞ்சுப் பகுதிகளில் வாழ்ந்திருந்து திருக்குறளை முறையாக முதலில் ஆய்வு செய்தார். அவர் குறிப்பிடுகிறார் :— " அறத்துப்பால், பொருட்பால் பாடல்களின் அடுக்கு முறையிலும், அதிகார அடுக்கு முறையிலும் திருக்குறளோடு ஏறத்தாழ நாலடியாரும் ஒத்தே இருக்கின்றது. அது மெய்தான்; திருக்குறளின் பல் திறப்பட்டக் கருத்துகள் மட்டுமல்ல. பல் துறை அமைப்பு, அறங்கள், சொற்திறங்கள். எடுத்தோதும் தன்மை போன்றவை 8 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நாலடியாரில் பரவலாகப் பயிலப்பட்டு உள்ளன.

குறளியப் புரட்சிக் கருத்துகளும், திருக்குறளும் முறையாகவும் முழுமையாகவும் ஏற்கப்படாமல் நாதியற்றுக் கிடந்தன, அக்காலக் கட்டத்தில். ஆக மூன்று முதல் ஆறாம் நூற்றாண்டு வரை வள்ளுவரும் வள்ளுவமும் வழக்கொழிந்து விட்டனர்.

பிற்காலச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம். மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களிலும், ஐஞ்சிறு காப்பியங்களிலும் பின்னர் உதித்த அத்துணைத் தமிழ் இலக்கியங்களிலும், திருக்குறளின் பல உதிரிக் கருத்துகள் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் குறள் நூலின் கருத்துப் பொருளும் அதனால் சிதைவுற்றது என்பதையும், யாரும் மறுக்க இயலாது. முதல் நூலுக்குப் பின்னர் வந்த நூல்கள் அவற்றின் பொருள், காலச்சூழல், கருத்தியல்பு, பயன்படுத்தும் வகை, இடம், விளக்கநிலை ஆகியவற்றிற்கு ஏற்ப முதல்நூற்கருத்துகளை எடுத்தாள்வதால் முதல் நூலின் நுவல் பொருளில் திரிபும், பொருள் மாற்றமும், கருத்துக்கோவைப் பிறழ்ச்சியும்ஏற்படுகின்றன. கால வெள்ளத்தால் முதன் நூலின் மெய்ம்மை கருத்துகளும், பொதுக் கருத்தோட்டமும் நூல் நோக்கமும் மாறி விடுகின்றன. அது மட்டுமன்றி ஒரு குமுகாயத்தையே முற்றாக மாற்றியமைக்கும் திட்டமிட்ட கொள்கை வரிசைகள் தடம் புரண்டுபோய் அந்நூல் எழுந்த நோக்கமே நிறைவேறாமல் மறை நிலைக்கு ஒதுக்கப்பட்டு விடுவதும் உண்டு.

சான்றாக ஆசாரக்கோவை, சாற்றும் ஆசார அறத்திற்கும். திருக்குறள் நிலைபடுத்தும் அறத்திற்கும் தொடர்பு உண்டா? எனினும் ஆசாரக்கோவை திருக்குறளைக் கையாண்டுள்ளதே. நாலடியார் போற்றும் வாழ்க்கை மறுப்புக் கொள்கையும், பெண்மை பற்றிய இழிநிலைக் கருத்துகளும், பிற்கால நீதிவெண்பா போன்றவற்றில் காணப்படும் விதி, வரி வாங்கல், சாதிகள் போன்றவையும்

மறந்து விடாதே !

உனக்கு மட்டும் நீ உழைத்தால்
உலகம் உன்னை நினைக்குமா?
தனக்கு மட்டும் வாழ்ந்து செத்த
தனியன் வாழ்வை மதிக்குமா?

அன்னை நிலமும் அன்னை மொழியும்
அனைத்து மக்களும் வாழ நினைக்கும்
உன்னை உலகம் மறப்பதில்லை !
ஒதுங்கி விடாதே ! — நீ
உழைக்கும் உழைப்பில் உலகம் செழிக்கும் !
பதுங்கி விடாதே.

— பாவலரேறு, பெருஞ்சித்திரனார்.

திருக்குறட் கருத்துகளுக்கு முற்றுமே மாறானவை. இவைபோன்ற பல சான்று களைக் காட்டலாம்.

மேலை நாடுகளில் அரசியல், பொருளியல், சமயம், மெய்யுணர்வு, குமுகாயக் கருத்துகள் மற்றும் சட்ட நிலைகள் ஆகியவற்றிற்கு மூல மாக அமைந்தவை — பிளேட்டோ, அரிசு டாட்டில் ஆகிய அறிஞர்களின் பெரு நூல் களாகும். அத்தகையோரின் அரிய கருத்து கள், பின்னால் எழுந்த பல அறிவு நூல்களில் உதிரிக் கருத்துகளாக ஆங்காங்கே பயிலப் பட்டன. ஆனால் பிளேட்டோவின் கொள் கையோ, அரிசுடாட்டிலின் கோட்பாடுகளோ, எந்த ஒரு காலப் பகுதியிலும், முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

அரசியல் குமுகாயவியல் போன்ற பல துறைகளிலும் பல மேற்கத்தியப் பேரறிஞர்கள் உயர்ந்த கோட்பாடுகளை யெல்லாம் உலகிற்கு வழங்கினர். ஆனால் உருசோ, மார்க்சு ஆகி யோரைத் தவிர மக்களது மொத்த வாழ்க்கை நெறிமுறையில் முழுமையான அடிப்படை மாற்றத்தை வலியுறுத்திய அறிஞர் எவரும் இலர் என்றே கூறலாம். பிரெஞ்சுப் புரட்சி மலர்ந்ததால் உருசோவின் கருத்துகள் சோத னைக்கு ஆட்படுத்தப்பட்டன. நடைமுறை நிலையில் மக்களிடையே முற்றிலும் மாறிய குமுகாயச் சிந்தனைகள் பரவலாக்கம் பெற வழி வகுத்தன. என்றாலும்கூட உருசோவின் கருத்துகள் எல்லாமே அவருடைய தனிக் கருத்துகள் என்று கூறிட இயலாது. அவருக்கு முந்தைய அண்மைக் காலத்தே தோன்றிய சிந்தனைத் தொடர்ச்சியின் விளை வும் அவர்தம் தனித் தன்மையோடு கூடிய குமுகாயக் கோட்பாட்டின் ஆக்கமும் அவற் றில் உள்ளடங்கும்.

திருவள்ளுவருக்குப் பின்னர் அவரது மறு மலர்ச்சிச் சிந்தனைகள் தளிர்த்து எழுந்து, காலத்திற்கு ஏற்ப வளர்ந்து, உரிய விளை வினை — கருத்துத் தொடர்ச்சியை — என்றே னும் விளைவித்ததா? இல்லையெனில், ஏன்?

உருசிய புரட்சி உருவானதால்—புதிய சோவியத் உருசியா முதன் முதலாகத் தோன் றியதால் — மார்க்சு இன்றும் உயிரோடு வாழ் கிறார். ஆனால் ஹீஜில் [Hegel] ஜான்ஸ்டு வர்ட்மில், ரசுகின், ஆடம்சுமித், போன்றோர் சிந்தனை வளர்ச்சியின் தொலைவுக் கற்களாக- கருத்து ஒட்பத்தின் பல கட்டங்களை அமைத் தவர்களாக — மட்டுமே யிருந்து நூல் நிலை யங்களை அணி செய்வதோடு நின்று விட்டார் கள் - திருவள்ளுவரைப் போல.

ஆகத் தமிழகத்தில் எழுந்த பல்வேறு பிற் காலத் தமிழ் இலக்கியங்கள் முழுப்புரட்சியை மலர்விக்க உருவான முதற் குமுகாய நூலாம் திருக்குறளின் சிற்சில உதிரிக் கருத்துகளை மட்டும் அதனதன் காலக் கருத்துச் சூழலுக்கு ஏற்ப எடுத்தாண்டு குறள் நூலின் மெய்ப் பொருளை - தொகு பொருளை எவ்வகை யில் வழி மாற்றி அமைத்து விட்டன என்ற வரலாற்று உண்மை நடுவு நிலைமையில் நின்று ஆழ்ந்து பரிசீலித்தால் மட்டுமே தெளி வாகப் புலப்படும்.

— தொடரும்



சினம் சுடும்

"சினம் என்பது எடுத்தவரைச் சுட்டு, அடுத்தவரைக் கொன்று, சேர்ந்தவரை அழித்து, சேராதவரைத் தீய்த்து, இனத்தை யும் பகைத்து, இன்ப வாழ்வையும் கெடுக் கும் ஒரு கொடு நெருப்பு. ஆதலின் அதனைக் கொள்ளாதிருப்பது நல்லது என்பது 306-வது குறளின் திரண்ட கருத்து,

வளர விரும்பும் மரங்கள் நெருப்பேற்கக் கூடாது; வாழ விரும்பும் மக்கள் சினம் ஏற்கக் கூடாது என்பது இக்குறளின் முடிவு

—முனைவர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. வி.



பாவலர் முருகு

மலரினும் மெல்லிது காமம்

மாடியின் நிலா முற்றம்! கோடாக அரும்பி, கீற்றாகி, அரிவாளாக வளர்ந்து, ஓடமாகி இன்று மத்தைப்போல் காட்சியளித்தது முத்து நிலா! அந்த மங்கிய ஒளியில் மல்லாந்து படுத்திருந்த அவன் உள்ளத்தில், சிந்தனைத் தேனீக்கள் இன்பத் தேனடைகளை நிரப்பிக்கொண்டிருந்தன.

எடுத்த அடிதோறும் சலங்..சலங் என்று இசைபோதை எழுப்பும் சலங்கை மிஞ்சியின் ஓசை!

'ஓ! அவள் படியேறி வந்துகொண்டிருந்தாள்; 'மலரினும் மெல்லிது காமம்....' அவன் வாய் அந்தச் சொற்களை மென்று அசைபோட்டுக் கொண்டிருந்தது.

'காமமா'-அந்தச் சொல்லைச் சொல்லும் போதே ஒரு கரப்பான் பூச்சி முகத்தில் ஊர்வதுபோன்ற அருவருப்பு அவளுக்கு.

'ஏன்? காமம் என்ற சொல் காதில் விழுந்ததும் துத்திக்காய் போல முகத்தைச் சுருக்கிக் கொள்கிறாய்?' — என்றான் அவன். ''பின் என்ன? 'காமுகன்' என்ற சொல் அத்து மீறும் ஆடவனைத்தானே குறிப்பிடுகிறது?' என்றாள் அவள்.

''உண்மைதான்'' 'காமம்' என்ற தூய்மையான சொல்லைக் காலப்போக்கில் கேவலப் படுத்தி விட்டார்கள் இலக்கியவாதிகள். தொல்காப்பியரும், கழகப் புலவர்களும் ஐந்திணை வழிபட்ட உயர்வான காதலைக் 'காமம்' என்றே குறிப்பிட்டனர்'' — என்று விளக்கினான் அவன்.

'இவ்வாறு கேவலப்படுத்தப்பட்ட வேறு சொல் ஏதாவது உண்டா?' என்று கேட்டாள் அவள்.

''உண்டு. 'முலை' என்ற சொல், கழகப் புலவர்கள் எந்தவிதக் கூச்ச உணர்வுமின்றி இயல்பாக இச்சொல்லைப் பாடலில் பயன் படுத்தி வந்தனர். ஆனால் காலப்போக்கில் இதுவும் கொச்சைப் படுத்தப்பட்டது'' — என்றான் அவன்.

''நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, புகழ் பெற்ற ஒரு தமிழ்ப் பேராசிரியர் அந்தச்சொல் வருமிடத்தில் எல்லாம் 'முகை' என்று மாற்றிப் படிப்பார். அச்சொல்லைக் கண்டாலே அவருக்கு நடுக்கம்! உடனே வகுப்பில் ஒரு சலசலப்பு! எல்லா மாணவருடைய கண்களும் எங்கள் பக்கம் கள்ளப்பார்வை பார்க்கும். பேசாமல் அந்தச் சொல்லை இருந்தபடியே படித்திருந்தால் அந்தச் சலசலப்பு ஏற்பட்டிருக்காது என்று நாங்கள் நினைப்போம்!''—என்றாள் அவள்.

''பண்டைப் புலவர்கள் எல்லாரும் காமம்—காதல் என்ற இரண்டு சொற்களையும் எந்தவித வேறுபாடும் இன்றி உயர்ந்த பொருளில் கையாண்டனர். கடவுளுக்குக் கொடுக்காத சிறப்பைக் காமத்துக்குக் கொடுத்துப் போற்றினர்'' என்று கூறினான் அவன்.

''கடவுளை ஏற்றுக்கொள்ளாத நாத்திகர்களும், சில நாத்திக சமயங்களும் உண்டு. காதலை ஏற்றுக் கொள்ளாதார் யார்?'' என்று கூறி அவன் கூற்றை உறுதிப்படுத்தினாள் அந்த ஊற்று நிலா.

''காதல்என்பது ஒவ்வோர் உயிரிடத்திலும் தானாக ஊறிவரும் இயல்பூக்கம் (Instinct) எனவேதான் பாவேந்தர் பாரதிதாசன்—

காதல் அடைதல் உயிரியற்கை—அது
கட்டில் அடங்கிடும் தன்மையதோ?

என்று பாடினார்,

'காதல் உணர்வு இல்லாதவன்' என்று ஒருவன் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டால் அவனை உலகம் ஐயக்கண் கொண்டு பார்க்கிறது'' என்றான் அவன்.

'பிறகு ஏன் காதலின்பத்தைச் 'சிற்றின்பம்' என்று சிலர் கூறுகின்றனர்?'' என்று கேட்டாள் அவள்.

''அது சுவைப்பவரின் திறமையைப் பொறுத்தது. இதுவே சிலருக்குப் பேரின்பமாகவும் இருக்கலாம். நீ எதிர்பாராத முத்தத்தைச் சுவைத்திருக்கிறாயா?'' என்று கேட்டான் அவன்.

''உங்களிடம்தான் அடிக்கடி சுவைக்கிறேனே!'' என்று கொவ்வை இதழ்களைக் குவித்துச் சொன்னாள் அந்தக் கோலமயில்.

''நான் என் முத்தத்தைச் சொல்லவில்லை, 'பாவேந்தரின் எதிர்பாராத முத்தத்தைச்' சொன்னேன். அக்காப்பியத் தலைவி பூங்கோதை தன் காதலனுக்கு எழுதிய கடிதத்தில்

அத்தான்! என்ஆவி உங்கள்
அடைக்கலம்! நீர்ம றந்தால்
செத்தேன்! இஃதுண்மை. இந்தச்
செகத்தினில் உம்மை அல்லால்
சத்தான பொருளைக் காணேன்!
சாத்திரம் கூறு கின்ற
பத்தான திசை பரந்த
பரம்பொருள் உயர்வென் கின்றார்.

அப்பொருள் உயிர்க் குலத்தின்
பேரின்பம் ஆவ தென்று
செப்புவார் பெரியார் யாரும்
தினந்தோறும் கேட்கின் றோமே!
அப்பெரி யோர்க ளெல்லாம்
— வெட்கமாய் இருக்கு தத்தான் —
கைப்பிடித் தணைக்கும் முத்தம்
ஒன்றேனும் காணார் போலும்! —

என்று சுவையுணர்வோடு பட்டறிந்ததைப் பாடுகிறாள். பற்றி அணைத்துப் பாவையர் பதிக்கும் சூடான முத்தம் ஒன்றாவது இந்தப் பக்தர்களுக்குக் கிடைத்திருந்தால் 'பேரின்பம்' என்று இறையின்பத்தைச் சொல்லமாட்டார்களாம். பூங்கோதைக்குக் காதல்தான் பேரின்பம்!'' என்று விளக்கினான் அவன்.

''ஏன் கடவுளின்பத்தைக் காதலின்பமாகக் கண்டவர்கள் இல்லையா?'' என்றாள் அவள்.

''உண்டு. மாணிக்கவாசகரும், ஆண்டாளும், திருமங்கை ஆழ்வாரும் காதலையே கடவுளாகக் கண்டவர்கள்'' என்றான் அவன்.

''மலரினும் மெல்லிது காமம் — என்ற குறளடியை நீங்கள் அடிக்கடி புகழ்ந்து பாராட்டுகின்றீர்களே! அந்த உவமை எனக்குப் பொருத்தமாகப் படவில்லை. பலிபீடத்தில் தங்கள் ஆவியைப் பறிகொடுத்த அம்பிகாபதி—அமராவதி காதலையும், பாலைவனச் சூறைக்காற்றில் சின்னாபின்னப்பட்டுச் சிதறிப்போன கயசு—லைலாவின் காதலையும் மென்மையானதாக யார் நினைத்தார்கள்? அவ்வாறு நினைத்திருந்தால் அதன் குரல்வளையை இரக்கமில்லாமல் நெரித்திருப்பார்களா, பாவிகள்? ..மேலும் மலர் ஒரு பருப்பொருள் (Concrete); காதல் ஒரு நுண்பொருள் (Obstract) இரண்டையும் ஒப்புமை காட்டுவது எவ்வாறு பொருந்தும்?'' என்றாள் அவள்,

''சிந்தனையின் ஆழத்தில் நீந்தும் புலவர் சிலர் உவமைகளை இவ்வாறு நுட்பமாகக் கையாளுவதுண்டு. மேலோட்டச் சிந்தனைக்காரர்களுக்கு இது விளங்காது. ஒரு கழகக் காதலன் தன் காதலியின் அழகைத் 'தொண்டியன்ன நின்னலம்' என்று பாராட்டுகிறான். காதலியின் அழகு நுண்பொருள். காதலியின் அழகுக்குப் பருப் பொருளான ஒரு நகரத்தை உவமையாகச் சொல்லியிருப்பது மேலோட்டமாகப் பார்த்தால் பொருத்தமில்லாமல் படலாம். ஆழ்ந்து ஆராயும் போது இந்த உவமையின் நுட்பம் புலப்படும். தொண்டி நகரின் பெருமிதமான

அதுதான் உறவு!

சுழன்ற கைவிரல்
கண்ணைக் குத்தியது
அடுத்த நொடி ... ...
அதே விரல்
வழியுங் கண்ணீரை
வழித்தெறிந்தது.

— தோமா

தோற்றமும். திணைமயக்கமுற்ற அதன் செழித்த பரப்பும், அந்நகரின் செல்வ வளமும், சேரநாட்டில் அந்நகருக்கு வாய்த்த தலைமைச் சிறப்பும், அந்நகரின் இதயமான அரண்மனையில் அரசன் விரும்பிக் கொலுவிருக்கும் ஆட்சிச் சிறப்பும் அவளுடைய ஆற்றல்மிக்க அழகுக்கு ஒப்பிடப்படுகின்றன என்பதை உணரும்போது அந்த உவமையின் ஆழத்தையும் பரப்பையும் நம்மால் உணர முடிகிறது'' என்று விளக்கினான் அவன்.

''உண்மைதான். ஆங்கிலத் தாளிகையான 'இல்லஸ்ட்ரேடெட் வீக்லி ஆஃப் இண்டியா' வடநாட்டு இசைக்குயில் லதாவைப் பாராட்டி, ஒரு சிறப்பு மலர் வெளியிட்டிருந்தது. அவ்விதழின் முகப்பில் அவள் படத்தைப் போட்டுக் கீழே 'Moon light in her throat' என்று எழுதியிருந்தது. இனிய ஒலிக்குக் குளிர்ந்த நிலவொளியை உவமையாக கூறியிருந்தது எனக்கு அப்போது பொருத்தமில்லாமல் பட்டது. இப்போது அந்த உவமையை வியந்து பாராட்டுகிறேன்'' என்று சிந்தனையோடு பேசினாள் அச் சேலையாழ்.

''இதுபோன்ற நுட்பமான உவமைகளை இன்று புதுப்பாடல் (Modern poems) எழுதும் பலர் கையாளுகிறார்கள்'' என்றான் அவன்.

''அது சரி! மலரைக் காதலோடு ஒப்பிடுகிறாரே வள்ளுவர். மலரைவிட மென்மையான பொருள் உலகில் வேறு எதுவும் இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''வள்ளுவர் எதையும் ஆழமாகச் சிந்திக்காமல் கூறமாட்டார். குறள் ஒரு பலாச்சுளை. அதில் சக்கையே கிடையாது. நீ கேட்பாய் என்று நினைத்துத்தான் வள்ளுவப் பெருமான் 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்று விளக்கினார். மோந்து பார்த்தால் வாடக்கூடிய பொருள் உலகில் வேறு என்ன இருக்கிறது மலரைத்தவிர?'' என்று கேட்டான் அவன்,

''எதுவுமில்லை; 'சிலர தன் செவ்வி தலைப்படுவார்' என்று குறிப்பிடுகிறாரே வள்ளுவர்! 'செவ்வி' என்ற சொல் எதைக் குறிப்பிடுகிறது? என்று வினவினாள் அந்த இன்ப வீணை.

''நல்ல கேள்வி கேட்டாய்! 'செவ்வி' என்பது வானவில் போன்ற ஒரு வண்ண வேறு பாட்டுச் சொல், அழகு, காலம், பருவம், தகுதி, ஏற்ற சமயம், காட்சி, புதுமை, மணம், சித்திரை நாள் என்று பல பொருளைத்தரும் ஓர் ஊற்றுச்சொல் அது. இந்தச் சொல்லுக்குச் சரியான பொருள் சொல்ல எல்லா உரையாசிரியர்களுமே திணறுகிறார்கள். பரிமேலழகர் 'தன்மை' என்று பொருள் செய்கிறார். பரிப்பெருமாள் என்ன பொருள் கூறுவது என்று புரியாமல் 'செவ்வி தப்பும்' என்று கூறி மழுப்பிவிட்டுப் போய்விடுகிறார். காலிங்கர் அச் சொல்லுக்குரிய பொருளைக் கூறாமல் படிப்பவர் சரியாகப் புரிந்து கொள்வதற்குரிய அழகான விளக்கத்தை மட்டும் கூறிச் செல்கிறார்'' என்றான் அவன்.

'என்ன அந்த விளக்கம்?' என்று கேட்டாள் அந்த ஏழிசை.

''உலகத்து வண்டானது,மலர்சிதையாமல் மதுவை அருந்துவது போலக் காமத்தின் செவ்வி அறிந்து கைக்கொள்ளும் மக்களும் உலகத்துப் பலர் உளர்—என்பது காலிங்கர் கூறும் விளக்கம்''—என்றான் அந்த ஏந்தல்.

''விளக்கம் வியக்கத் தக்கதாக இருக்கிறது. இந்த உவமை விளக்கம் 'செவ்வி' என்ற சொல்லின் முழுமையை முப்பரிமாணத்தோடு நம் உள்ளத்தில் படம்பிடித்துக் காட்டிவிட்டது. 'காதலிப்பவரின் உள்ளம் சிறிதும் புண்படாத வகையில், காதலை நுகரும் நயத்தக்க நாகரிகமே செவ்வி' என்பதைக் காலிங்கர் எவ்வளவு நுட்பமாக விளக்குகிறார்! சரியான

இலக்கண நகைச்சுவை

தமிழாசிரியர் வினையெச்சம், பெயரெச்சம் என்பவைகளை விளக்கி இலக்கணப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பள்ளிப் பணியாளர் வந்து நின்று ''ஐயா, உங்களை எச்.எம்.வரச் சொல்கிறார்'' என்று கூறினார்.

தமிழாசிரியர் கேட்டார்: ''எந்த எச்சம்? பெயரெச்சமா? வினையெச்சமா?''

ஆசிரியர் திடுமென வீசிய இந்த நகைச்சுவை வெடியால் வகுப்பு சிரிப்பில் மூழ்கியது.

— இரா. தமிழப்பன்,
கடத்தூர்.

இலக்கைக் காலிங்கர் குறிதவறாமல் அடித்து விட்டார், என்றாலும் இவ்வளவு நாகரிகமான காதலன்—காதலியை நாம் எங்கு போய்த் தேடுவது? கழகக் காலக் காதலன் கூடப் பரத்தை.." என்று இழுத்து மீட்டினாள் அவள்.

" பொறு. பரத்தைமை கழகக் கால வாழ்வின் ஓர் அங்கம் ஆனால் பரத்தமையே வாழ்க்கை அன்று. கழகக் காதலர்களில்'செவ்வி' உணர்ந்து தலைப்பட்டார் சிலர் உண்டு." என்று கூறி, இசைஞன் பாடுவதற்கு முன் இசை கூட்டுவது போல, அவன் நெற்றியைச் சுருக்கி நினைவைக் கூட்டினான்,

' எங்கே ? அத்தகைய காதலன் ஒருவனை இலக்கியத்தில் காட்டுங்கள் பார்க்கலாம் !" என்று கூறிச் சிரிப்புமணி யடித்தாள் அச் சேயிழை.

" ஏன் இல்லாமல் ? அத்தகைய மென்மையான ஒரு காதலனைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாட்டுப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு வந்து நிறுத்துகிறான். பொருள் தேடுவதற்காக அத்தலைவன் தலைவியைப் பிரிய உள்ளத்தில் நினைக்கிறான். தன் நோக்கத்தைத் தலைவியிடம் அவன் வெளிப்படுத்த வில்லை. என்றாலும் அவன் பிரியப் போகிறான் என்பதை — அவன் உள்ளத்து உணர்வோட்டத்தை — அவள் உய்த்துணர்கிறாள்."

" அது எப்படி முடியும் ? அவன் உள்ளத்தில் ஒடும் உணர்வை அவளால் எப்படி அறிய முடிந்தது ?"

" அதுதான் உயர்ந்த காதலின் தன்மை. அவர்கள் உடலால் இருவரானாலும் உயிரால், உள்ளத்தால் ஒருவரே. இந்த நுட்பத்தை உணர்ந்து தான் மற்றொரு கழகப் புலவன் " இருதலைப் புள்ளின் ஒருயிர் " என்றான்.

" என்ன ? .. என்ன ?

" இரண்டு தலையும் ஒரே உயிரும் உள்ள பறவையாம் உண்மைக் காதல் ! "

" அப்பப்பா "

" தன் தலைவன் பிரியப் போகிறான் என்பதை உய்த்துணர்ந்த அவள் ஒரு துன்ப ஓவியமாய் நிற்கிறாள். கண்ணில் நீர் நிறைந்து அவள் பார்வை நடுங்குகிறது. துன்பச் சுமையின் வெளிப்பாடாக, நெருப்புப் பெருமூச் சொன்று அவள் நெஞ்சத் துருத்தியிலிருந்து கிளம்பி மூக்கில் வெளிப்படுகிறது. அப்பெரு மூச்சு அவள் மார்பில் அணைத்திருந்த குழந்தையின் முடி மீது படுகிறது. அப்பெரு மூச்சின் வெப்பம் தாங்காமல் அக்குழந்தையின் தலையிலிருந்த செங்கழுநீர்ப்பூ வாடி உருக்குலைகிறது. இதைப் பார்த்த தலைவன், தலைவியின் ஆற்றாமையுணர்வைப் புரிந்து கொண்டு தன் பயணத்தைக் கைவிடுகிறான். எப்படி இந்த ஊமை நாடகம் ? " என்று கேட்டான் அவன்.

" ஆகா ! இவனல்லவா காதலன். நீங்களும் இருக்கின்றீர்களே ! நீங்கள் சில நாட்களில் உள்ளத்தையும் புண்ணாக்குகிறீர்கள் ! உடம்பையும்......! என்றாள் அவள்.

" சரி சரி பாட்டைக்கேள் " என்றான் அவன்.

பரல்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் அறத்தா(று)
அன்றெ ன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநர் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ(டு)
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே (அகம்-5)

என்று பாடி முடித்தான்.

" ஆமாம் இந்தப் பாட்டு எப்படி இன்னும் நம்மூர்த் திரைப் பட எழுத்தாளர்கள் கண்ணில் படாமல் இருக்கிறது ? பட்டால் விட்டு வைக்கமாட்டார்களே ; .. .. ஐயையோ ! இதென்ன ! என்னை முகரத் தொடங்கி விட்டீர் ; முகர்ந்தால் மலர் வாடும் என்று இப்போதுதானே சொன்னீர் ! " என்று முனகினாள் அவள்.

" வாடாமல் முகர எனக்குத் தெரியும் !" என்று கண்களால் சிரித்துக்கொண்டு சொன்னான் அவன்

— வளரும் —



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அந்த இரவு நேரத்தில் தம்மைநோக்கி வந்தவர்களை ஆசிரியர் உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர்களும் ஆசிரியர் இருந்த இடத்தினை நெருங்கினர், ஆசிரியருடன் இருந்த மாணவர்கள் கைவிளக்குடன் வந்தவர்களை உற்று நோக்கி, முகமன் கூறி வரவேற்றனர், ஆசிரியர் கூறிய குறட்பா விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் ஆசிரியரை அணுகி வணக்கத்துடன் கேட்டுக்கொண்டது:

"ஆசிரியர் பெருமானே! விளக்குகளை வைத்துக்கொண்டு இங்கே வந்திருக்கும் இவர்கள் இந்த ஊர்க்காரர்களே யாவார்கள்? இவர்கள் வாழ்ந்து வருகின்ற இடம் இவ் வூ'ருக்குச் சிறிது தொலைவில்தான் உள்ளது. இன்றைக்கு அவர்கள் குடியிருக்கும் தெருவில் நடைபெறுகின்ற சிறப்பான விழாவினையொட்டிக் 'கூத்து' ஒன்று நடைபெறுகின்றது. தாங்கள் வந்திருந்து வாழ்த்த வேண்டுமென்று அவர்கள் விரும்பியே இங்கே வந்துள்ளனர்."

இதனைக் கேட்ட ஆசிரியர் சிறிதுநேரம் சிந்தித்த வண்ணம் இருந்தார். பிறகு தம்முடைய மாணவர்களைப் பார்த்தார். அவர்கள் முகத்தில் கேளிக்கைகளைப் பார்த்து மகிழ வேண்ம் என்ற ஆவல் இருப்பதைக்குறிப்பால் அறிந்து உணர்ந்தார். மாணவர்களை நோக்கிச், "சிறிது நேரம் அங்குச் சென்று பார்த்துவிட்டு வரலாமா?" என்று ஆசிரியர் கேட்க, மாணவர்கள் தங்கள் விருப்பத்தினை ஆசிரியரிடம் தெரிவித்தனர்.

"புறப்படலாமே" என்று ஆசிரியர் கூறவே வந்திருந்தவர்கள் செல்லுகின்ற வழியில் இருள் நீங்குமாறு கை விளக்குகளை ஏந்திச் செல்ல ஆசிரியர் சென்று கொண்டிருந்தார். ஆசிரியருக்கு முன்னும் பின்னுமாக ஊர் மக்கள் சென்று கொண்டிருந்தனர். நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அனைவரும் வந்து சேர்ந்தனர். சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் ஆசிரியர் அமர்த்தப்பட்டார், மாணவர்களும், மற்றவர்களும் அருகில் அமர்ந்தனர்.

ஆசிரியர் திருவள்ளுவனார் வந்துள்ளார் என்ற செய்தி அங்குக் கூடியிருந்த மக்க ளிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. அதுவரை ஆசிரியர் அவர்களின் பெருமை யினை எல்லாம் கேட்டறிந்து, அவரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுடன் இருந்த மக்கள் ஆசிரியரைப் பார்க்க நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரியர் அங்கு வந்திருப்பதால் மக்களுக்கு ஏதேனும் அறநெறியான நீதியினைச் சொல்வார் என்ற எண்ணத்தோடும், மகிழ்ச்சி

திருக்குறளார்

யோடும் பலர் இருந்தனர். தம்மை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்த மக்களை அமைதியாக இருக்கும்படி பணிக்கும்பொருட்டு ஆசிரியர் எழுந்திருந்து பொதுமக்களை நோக்கி, தமது இரு கைகளையும் உயர்த்தி அமைதியாக இருக்குமாறு குறிப்பால் உணர்த்தினார், அமைதி நிலவிற்று. மக்கள் அவரவர்கள் இருந்த இடத்திலேயே அமர்ந்தனர். கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஆசிரியர் பெருமான் மக்கள் தம்பால் கொண்டிருக்கும் அன்பின் பெருக்கினை அறிந்தவராகி, இரவில் கண்விழிப்பினையும் பொருட்படுத்தாமல் காட்சிகளைக் கண்ட வண்ணம் இருந்தார். கூடியிருந்த மக்களும் காட்சிகளைக் கண்டு மகிழ்வதோடு ஆசிரியர் பெருமான் வீற்றிருப்பதையும் மகிழ்ச்சியோடு கண்டு களித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஊர்ப் பெரியவர்கள் சிலர் ஆசிரியர் பெருமான் அதிக நேரம் கண்விழித்திருக்கிறாரே என்று அஞ்சி உறங்குவதற்கு அழைத்துச் செல்வதற்காக ஆசிரியர் இருக்குமிடத்திற்கு வந்தனர். ஆசிரியரும் அவர்களைக் கண்ணுற்றார்.

" அய்யா நேரமாகிவிட்டது: உறங்குவதற்குச் செல்லலாமே " என்று கூறினார்கள். ஆசிரியர் அக்கருத்திற்கு உடன்பட்டதுபோல் குறிப்புணர்த்துகின்றபோது கூட்டத்திலிருந்த ஒருவன் ஆசிரியரை நோக்கிப் பேசினான்.

" அய்யா ஒரு விண்ணப்பம். இங்கு நடந்த காட்சிகளை அய்யா அவர்களும் இதுவரைக் கண்ணுற்றீர்கள். எங்களுக்கு ஏதேனும் அறிவுரை கூற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஆசிரியர் முக மலர்ச்சியுடன் அப்படியே சொல்லுகின்றேன் என்றார்.

ஆசிரியர் சொல்லுகின்றார், " ஏழையாகிய ஒருவன் தன்னுடைய முயற்சியினால் உழைத்து உழைத்து மக்கள் பாராட்டுகிற அளவுக்கு உயர்ந்து விட்டான் என்பதனை நாம் கண்டோம் அல்லவா ?

'ஆம்' 'ஆம்' என்று அனைவரும் தலையசைத்தனர்- அவ்வாறு உழைப்பினையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அவனுடன் மற்றொருவனும் பழகிக்கொண்டிப்பதை நாம் பார்த்தோம். இந்த நாடகத்தில் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பல நல்ல செய்திகள் அமைந்திருந்தன. ஒருவன் வாழ்க்கையில் கெட்டு விடுவதற்குக் காரணம் 'மற்றவர்களே' என்று கூறுவது தவறு என்பதையும், அவ்வாறு கெட்டு விடுவதற்குக் காரணம் அவனேதான் என்ற உண்மையினையும் நீங்கள் புரிந்து கொண்டீர்களா என்று ஆசிரியர் கேட்டார். எல்லோரும் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தனர். ஆசிரியர் கூறுகிறார், பல காட்சிகளையும் பல செய்திகளையும் இன்றையக் கூத்தில் நீங்கள் கண்டீர்கள். நானும் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னுடைய உள்ளத்தில் அந்த இரண்டு நண்பர்களும் பேசிக்கொண்ட, பழகிக்கொண்ட முறைகளில் — ஒருவன் கெட்டுவிடுவதற்குக் காரணம் — முதற் காரணமாக அமைவது — அடிப்படைக் காரணங்களாக இருப்பவை — ஒருவனிடத்தில் இருக்கின்ற தீய குணங்களே ஆகும். அவன் அழிவிற்கு அவனே காரணமாவான், இந்த உண்மைதான் அழுத்தமாக இன்று நாம் பார்த்த காட்சிகளில் எனக்குத் தோன்றியது.

தம்முடன் வந்த மாணவர்களை நோக்கி, இந்தக் காட்சிகளில் இருவர் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தார்களே அவர்களிலிருந்து உங்களுக்கு என்ன தோன்றிற்று என்று ஆசிரியர் கேட்டவுடன் விரைவாக எழுந்து நின்று, ஆசிரியர் அய்யா ஒருவன் கெட்டு விடுவதற்குக் காரணம் அவர்களிடத்தில் இருக்கும் தீய குணங்களே ஆகும். — " இந்த உண்மைதான் எனக்கும் தோன்றிற்று, " என்று ஆசிரியர் கூறி அந்த மாணவனுக்கு ஊக்கமளித்தார்.

" கெட்ட குணங்களை நல்ல குணங்களாக ஆக்கிவிடக் கூடாதா ? " என்று கூட்டத்தில் ஒருவர் அந்த மாணவரைக் கேட்டார்,

உடனே மாணவர் பதில் சொன்னார், "கெட்ட குணங்களை விட்டுவிட வேண்டும். அதுதான் நல்லது. கெட்ட குணங்களை நல்ல குணங்களாக மாற்றுவதென்பது உலகப் பழக்கம் அன்று. தீயவைகளை மறந்து விட்டுவிட வேண்டும்." என்று அந்த மாணவர் விளக்கம் தந்தார்.

ஆசிரியர் மாணவர்களை நோக்கி கண்ட காட்சிகளிலிருந்து வினாக்கள் கேட்கலானார். ஆங்குக் கூடியிருந்த மக்கள் ஆசிரியர் வாக்கினால் வருகின்ற பொன்னுரைகளைக் கூர்ந்து கேட்ட வண்ணம் இருந்தனர். மாணவர்களை நோக்கி ஆசிரியர்,

"நீங்கள் பார்த்த காட்சிகளில் அடிக்கடி வந்து கொண்டிருந்த இருவர்களில் ஒருவன் எப்போதுமே பழக்கமாகச் சொல்லிக்கொண்டிருந்த சொல்," எது என்று கேட்டார்.

மாணவர் ஒருவர் "எதைக் கேட்டாலும் மறந்துவிட்டேன், மறந்துவிட்டேன் என்ற சொல்தான் அடிக்கடி என்னுடைய காதில் விழுந்தது" என்றார்,

"அப்படியானால் மறதி என்பது ஒருவனிடத்தில் குடி கொண்டிருப்பதால் அது எவ்வளவு தீமையானது என்பதைப் புரிந்துகொண்டீர்களா." என்றார் ஆசிரியர்.

உடனே மற்றொரு மாணவர் எழுந்து, "ஆசிரியர் பெருமானே மறதிகூட அவன் கெட்டு விடுவதற்கு முதன்மையான காரணமென்று நான் சொல்லமாட்டேன், அவன் பேசும் பொழுதெல்லாம் அவனுடன் இருந்த நல்ல நண்பன் ஏதேனும் நற்செயல் செய்ய வேண்டும் என்றால் கெட்டுப்போன இவன் "இப்பொழுதென்ன அவசரம்; மெதுவாகச் செய்து கொள்ளலாமே என்று — எதையும் உடனுக்குடன் செய்யாமல் தள்ளிப் போடுகின்ற கொடிய பழக்கமே அவன் கெட்டுப் போனதற்கு முதற் காரணம்," — கெடுவதற்கு முதற் காரணத்தினைத் தான் உணர்ந்தவாறு எடுத்துக் கூறிய அந்த மாணவரைப் பார்த்து ஆசிரியர் புன்முறுவல் செய்த வண்ணம் கூறினார். "எந்த செயலையும் விரைந்து செய்யாமல் நீட்டித்துச் செய்கின்ற தீய குணம் ஒருவனைக் கெடுத்துவிடும்." என்றார் ஆசிரியர்,

மாணவர்களுக்குப் புதிய சொல் ஒன்றினைச் சொல்லி விளக்கினார், "மாணவர்களே 'நெடுநீர் என்று சொல்லுகின்ற சொல்லுக்கு நீட்டித்துச் செய்யும் தன்மை என்பது பொருளாகும், புதிய சொல் ஒன்றினைத் தெரிந்து கொண்டோம் என்ற உணர்ச்சியில் 'நெடுநீர்,' என்ற சொல்லினை நன்கு குறித்துக் கொண்டனர்.

"அய்யா நாம் பார்த்த இந்தக் காட்சிகளில் கெட்டுப் போனவன் என்று காட்டப் பட்டவனிடம் தீமையான மற்ற குணங்களும் புலப்படுத்தப் பட்டன அல்லவா என்றார் ஒரு மாணவர்.

'ஆம். ஆம்' என்றார் ஆசிரியர். உடனே ஒரு மாணவர் எழுந்து நின்று அய்யா, இன்னும் இரண்டு தீய குணங்கள் அவனிடத்தில் நான் கண்டேன்."

"அப்படியா! அந்த இரண்டும் என்ன? என்றார் ஆசிரியர்,

"கெட்டுப் போன அவனிடம் சோம்பல் அதிகமாகத் தூங்கும் பண்பு இருந்தது." ஆசிரியர் கூறுகிறார், 'மடி' என்ற சொல் சோம்பல் தன்மையை குறிப்பதாகும். உலகியல் அறிஞர்கள் கண்டுணர்ந்து குறிப்பிடுகின்ற — விளக்கவேண்டிய — தீய குணக்களையெல்லாம் இப்பொழுது நாம் பார்த்த காட்சிகளில் நன்றாக அமைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

ஆசிரியரின் திருவாக்கினால் பாராட்டப் பெற்றதைக் கேட்டு அங்கிருந்த மக்கள் பேரின்பம் அடைந்தனர். தங்கள் ஊரில் வாழ்கின்ற மக்கள் சிறந்த புத்திசாலிகள் என்று ஆசிரியர் வாக்கினால் சொல்லப்படுவது 'பெருமையல்லவா?

மாணவர்களை நோக்கிப் பேசுகின்றார். ஒருவனைக் கெடுக்கின்ற நான்கு தீய குணங்களையும் நீங்கள் நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அவைகளை நீக்குதல் வேண்டும். கடலிலே கொண்டுபோய் நீரில் வீழ்த்துகின்ற படகு ஒன்றினில் யாராவது விருப்பமாக ஏறிச்

தமிழ்ச் சங்கிலி

திங்கள்வாழ் மண்டி லத்தில்
தென்னாப் பிரிக்க நாட்டில்
துங்குவாழ் மலேயா சாவா
தொலைவுமோ ரீசில் மற்றும்
எங்குவாழ் கின்ற போதும்
இத்தமிழ்க் குலத்தைச் சேர்க்கும்
சங்கிலி தமிழே என்று
சாற்றுவாய் அன்புத் தோழி!

—பாவலர் முருகு.

செல்ல விரும்புவார்களா ?" — இவ்வாறு ஆசிரியர் சொல்லிக்கொண்டு வந்து 'காமக்கலன்' என்ற சொல்லினை மாணவர்களுக்கு உணர்த்தினார். காமக்கலன் என்பது 'மரக்கலம்' என்பதனை உணர்த்தும் என்று மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தார்.

" அன்பு மாணவர்களே, கெட்டுப் போகிறவர்கள் விரும்பி ஏறிச் செல்லுகின்ற மரக்கலம் போன்ற தீய பண்புகளைக் குறித்துக் காட்டுகின்ற, குறட்பா ஒன்று செய்துள்ளேன்" என்றார்,

எப்பொழுதும் ஆசிரியர் கூறுகின்ற குறட்பாக்களைக் குறித்துக்கொள்ள அணியமாக இருக்கும் மாணவர்கள் ஆசிரியர் கூறக் குறட்பாவினைக் குறித்துக் கொண்டனர்.

" நெடுநீர் மறவி மடித்துயில் நான்கும்
கெடுநிரார் காமக் கலன். " — இவ்வாறு

ஆசிரியர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அங்கும் இங்குமாகக் கத்துகின்ற உரத்த குரல்கள் கேட்டன. சலங்கை ஒலிப்பது போன்ற, ஓசை ஆசிரியரின் காதுகளில் விழுந்தது. சல சலவென்று கேட்கும் மணியோசை வந்து கொண்டிருந்தது. என்ன, என்ன என்று ஆசிரியர் மணியோசை வந்த திசை நோக்கிப் பார்த்துக் கேட்டார்.

— தொடரும்.

தி. மு. க. அரசு காலத்து நடவடிக்கைகளுள் மாற்ற வேண்டிய ஒன்று !

உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த பிற மாநில அமைச்சர்கள், தங்கள் மொழிகளைத் தமிழின் உடன் பிறப்பு (சகோதர) மொழிகள் என்றே உறவு கொண்டாடிப் பேசினர். தமிழிலிருந்து பிறந்தவைதாம் மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலான மொழிகள். அதற்குப் பல காரணங்களைத் தந்தாலும், தமிழ்மொழிக்கு மட்டுமே உரித்தான ற, ன, ழ, ஏ—ஆகிய சிறப்பு எழுத்துகளிருக்கும் மொழிகள், தமிழ்மொழியிலிருந்து வந்தவைதாம் என்று உறுதியாகச் சொல்வார்கள். இந்த வகையில்தான் மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் அந்தச்சிறப்பு எழுத்துகளிருப்பதால் அவற்றைச் 'சேய்' மொழியாகக் கொள்வர்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் என்று நமது மாநில அரசு ஒப்புக்கொண்டு (அங்கீகரித்து) பழக்கத்தில் கொண்டு வந்திருக்கும் பேராசிரியர் சுந்தரம் – (பிள்ளையின்) மனோன்மணியத்திலிருந்து 'நீராரும் கடலுடுத்த......' என்னும் பாடலின் பிற்பகுதியிலுள்ள 'கன்னடமும் களிதெலுங்கும், கவின் மலையாளமும், உன்உதிரத்தே உதித்தெழுந்து ஒன்றுபல வாயிடினும் ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. " என்னும் பகுதிகளை நீக்கிவிட்டார்கள். இது கலைஞர் கருணாநிதி ஆட்சியின் போது செய்தது. தமிழ்ப் பேரறிஞர்கள் பேராசிரியரின் இலக்கிய நூலிலிருந்து அன்றைய அரசினர் மனம்போல் நீக்கியதைத் தமிழுக்காகவே வாழும் 'தமிழ் வீரர்கள்', அறிஞர்கள் கண்டிக்கவில்லை, தனித்தமிழ் எழுத்தாளர்கள் தவறு என்று எழுதவில்லை, செந்தமிழ் உரையாளர்கள் பேசவில்லை.

விழாவில் கேரள முதல்வர், 'உடன் பிறப்புமொழி (சகோதரமொழி) மலையாளம்' என்று சொன்னபோதும் குண்டுராவ் கன்னடத்தைத் 'தமிழின் உடன் பிறப்பு' (சகோதரி) என்று குறிப்பிட்ட போதும் தமிழக முதல்வர். திரு. ம. கோ. இரா. (M. G. R.) 'தமிழ்-தாய் உறவு' எனத் திருத்தியிருக்கிறார். இதை, தமிழக முதல்வர் உண்மையாகவே எதிர்க்கிறார் என்பதை மெய்ப்பிக்க, தமிழின் தலைக்குனிவை நீக்க, ஒருவழி இருக்கிறது. அதுதான் நமது அரசின் தமிழ்த்தாய் வணக்கப் பாடலில் நீக்கப்பட்டுள்ள வரிகளைத் துணிவுடன் சேர்த்து முழுப் பாடலையும் பாடும்படி செய்து, தமிழர்களின் தன்மானத்தை (சுயமரியாதையை)க் காக்க முன்வர வேண்டும். கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் செய்தவை பல மாற்றப்பட்டதைப் போல் இதுவும் மாற்றி அமைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

— பரந்தாமன்

நன்றி : துக்ளக் (1—2—81)

(முன் இதழ்த் தொடர்ச்சி)



திருக்குறள் வாழ்க்கைச் செயல்முறைக் குறிப்புகள்

(தமிழ்மா முனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

வாழ்க்கைத்துணை நலம்

முன்னுரை

திருக்குறள், தலை மகனின் வாழ்க்கைக்குத் துணையாக அமையும் பெண்களை "வாழ்க்கைத் துணை" என்று குறிப்பிடுகிறது. துணையாக அமைவது எல்லா வகையாலும் தம் அளவுக்கு வளர்ந்ததாக, தம்மினும் கூட வலிமை சார்ந்ததாக அமைந்தால் தான் துணையாக அமைய முடியும். இதனால் பெண்ணிற்குக் கல்வி முதலிய உரிமைகளும், சமநிலைப் பாங்கும் வேண்டும் என்று கூறியதாயிற்று. ஆதலால் திருக்குறளில் வரும் தலைவனின் துணையாய் அமையும் பெண் வாழ்க்கைத் துணையாகின்றாள்! 'இல்லை'. அந்தத் துணையால் அடையக் கூடிய 'நல' மாகத் திகழ்கின்றாள்.

மனைத் தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை — 51

மனையறத்திற்குத் தக்க மாட்சிமைக்குரிய பண்புகளை உடையவளாக விளங்கி, தலைமகனின் வருவாய்க்குத் தக்கவாறு குடும்பத்தை அமைத்துத் துணையாய் அமைபவள் வாழ்க்கைத்துணை.

(1) மனையறத்துக் குரிய பண்புகளுள் முதன்மையானது இன்புறு காதல் வாழ்க்கை நிகழ்த்துதல்

(2) மனையறத்துக்குரிய தன்னுடைய தலைவனை முறையாக வளர்த்தல்.

(3) இருவர் கூடி முழுமையான வாழ்க்கை வாழ்தல் எளிமையான ஒன்றன்று. அத்தகு முழுமையான வாழ்க்கை வாழ்தலே முழுமையான வாழ்க்கை — வெறுப்பு, துன்பம், பழி வராத வாழ்க்கை.

(4) வளத்தக்காள்: தலை மகன் பொருள் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுப் பொருளீட்டுவான். அப்பொருள் வந்து சேரவேண்டிய கருவூலம் வாழ்க்கைத் துணையே. இல் வாழ்க்கையில் பொருட் செல்வப் பொறுப்புடையவள் வாழ்க்கைத் துணைவியேயாம். அவள் பொருட் செல்வத்தை முறையாகப் பங்கீடு செய்து தலை மகனின் — குடும்பத்தின் பொறுப்புகளை நிறைவேற்றி, எதிர்காலச் சேமிப்பும் வைக்கவேண்டும்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். —52

வாழ்க்கைத் துணையாய் அமைந்தவளுக்கு மனையறத்திற்குரிய சிறப்புடைய பண்புகள் இல்லையாயின் ஒருவன் வாழ்க்கைச் செல்வம் முதலிய வேறு வகைகளில் சிறப்புடையதாய் அமைந்திருப்பினும் அச்சிறப்புகளால் பயன் இல்லை,

(1) செல்வம் இருந்தாலும் முறையான செயற்பாடு இன்மையால் செல்வம் அழிந்துவிடும்.

(2) தலைமகன் புகழ்படு செயல்கள் பல உடையனாயினும் இவளின் வழிபடு செயல்களால் அவன் புகழும் கெடும்.

(3) தலைமகள், வாழ்க்கைத்துணையாய் அமைந்தும், அவள் முறையாகத் துணையாயமைந்து செயற்படாததால் உணவுக்கும் உணர்வுக்கும் வேற்றிடங்களை நாடி ஒழுக்கம் குன்ற நேரிடும், ஆதலால் வாழ்க்கைத் துணை நலம் தேடிஅமைக்கும் முயற்சி சிறப்பாக அமைதல் வேண்டும்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ள
இல்லவள் மாணாக் கடை. — 53 [தென்**

இல்லத்துத் தலைவி மாண்புடையவளாக விளங்கினால் அந்த இல்லத்தில் இல்லாதது எது? இல்லத்துக்குரியவள் மாண்புடைய வளாக இல்லாது போயின் உள்ளது எது?

"இல்லை" என்பது இல்லாமையால் மட்டும் பிறப்பதன்று, இல்லாமை இல்லாமல் செய்து ஒழுகுதல் என்ற ஒழுக்கமின்மையால் பிறக்கிறது. தேவைகளை முன் கூட்டியே அறிந்து உரிய முயற்சிகளை மேற்கொண்டு, தேடிக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, தேவை வரும்போது பயன்படுத்துதல் என்பது நல்லாட்சிமுறை, சிறந்த இல்லத் தாட்சி இப்படி இருக்குமாயின் அந்த வீட்டில் இல்லாதது எது?

சிறந்த இல்லத்தாட்சி இல்லையாயின் உள்ளதையும் கூட அன்றைக்குப் பயன்பாடு இல்லையென்று கருதி, கவனிக்காது அழிய விட்டுப் பின் அந்தத் தேவை வரும்பொழுது இல்லையென்று கூறுதல். அல்லது தேவை வந்த பிறகு தேடுதல் சிறந்த இல்லாட்சி முறையன்று.

(1) இல்லத்தாட்சிப் பொறுப்புள்ளவள் அனைத்தையும் வரும் முன்பே உரிய காலத்திலேயே திட்டமிட்டுத் தேடிப் பாதுகாத்துத் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

(2) உணவுப் பொருள்களை உரிய பருவக் காலங்களில் சேகரித்தால் விலை குறைவு, அவ்வப் பொழுது தேடும் உழைப்பும் மிஞ்சும்.

(3) ஒரு வீடு பலர் வாழ்வது; ஆதலால், யாருக்காவது எப்போதாவது உடல்நல மில்லாது போகலாம். அதற்குரிய முதல் உதவி மருந்துப் பொருள்கள் இல்லத்தில் இருக்கவேண்டும்.

(4) தம் மக்கட் செல்வங்களின் கல்வி, திருமணம் முதலிய நிகழ்வுகளுக்குரிய பொருள்களை உரிய காலத்திலேயே திட்டமிட்டுச் சேகரித்து வைத்து அவை வரும் பொழுது கடன் படாமலும், பெருமூச்சைச் செலவழிக்காமலும் செய்தல் வேண்டும்.

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். — 54**

ஒருவன் அடையக் கூடிய பேறுகளில் இல்லாளின் மேம்பட்ட பொருள் யாது? அவள் உறுதியான கற்பினைப் பெறின்.

பெண் பெருமையுடையவள். வாழ்க்கைத் துணையாகிய இல்லாளே பெறக் கூடிய பெரும் பேறு அவளிடம் கற்பென்ற உறுதி இருக்குமாயின்!

ஒருவனின் உடல் தேவைகளையும் உயிர்த் தேவைகளையும் உணர்வுத் தேவைகளையும் அறிந்து, கடப்பாட்டுணர்வுடன் காலத்தால் வழங்கி வாழ்விப்பவள் இல்லாள். ஆதலால் சிறப்புடைய பேறு.

காதலர்களிடையே நிலவ வேண்டிய மாறாத அன்பைக் கற்பு என்று சிறப்பித்துக் கூறுதல் மரபு,

கற்பு, திண்மையுடையதாதல் எங்ஙனம்?

(1) காதல் வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கருதுதல்,

(2) காதல் வாழ்க்கையில் நிகழவேண்டிய அன்பை நாள்தோறும் முறையாக வளர்த்துச் சோர்விலாது காப்பாற்றிக் கொள்ளல்,

(3) அன்பு நிகழ்தலுக்கும் உறுதிப்பாடு அடைதலுக்கும் உரிய செயல்களை, இல்லத்துப் பணியாட்கள் வாயிலாக அன்றித் தாமே செய்தல்,

(4) இடையூறுகளும் சோர்வுகளும் உற்றுழி நிலையில் மாறாது நிற்றல்;

கற்பென்னும் திண்மை:

வாழ்க்கை நம்பிக்கையால் ஆவது; உறுதியான அன்பால் வளர்வது; வாழ்வது, யாதானும் ஒரு வகையில் உரிய தலைமகள் குறைப்பட்டுழி, இல்லாள் அக்குறைகளின் காரணமாகக் கணவனை இகழ்தல். காதல் செய்யாதிருத்தல், விலகிப் போதல். உடை அணிகள் இன்ப ஆசைகளால் பிற ஆடவர்களை நாடல் முதலியன பெண்ணின்பால் நிகழ்ந்தால் அன்பு குறையும்; ஒழுக்கம் குன்றும்; கற்புக் கெடும். இவ்வழி அவளும் பெருமை இழப்பாள்; கணவனுக்கும் தீங்கு செய்வாள்'

கற்பு உடையதாக அமைவதுடன் அது உறுதியுடையதாக வேண்டும். ஏன்? யாதானுமொரு காரியத்தைச் செய்ய ஆற்றல் மிக்க கருவியாகப் பயன் படுதல் வேண்டும். கற்பென்னும் திண்மை பெற்ற பெண்ணுக்குத் தெயவங்களும் ஏவல் செய்யும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழு
பெய்யெனப் பெய்யும் மழை — 55 [வாள்

தெய்வங்களைத் தொழமாட்டாள்; கணவனைத் தொழுதுஎழுவாள், அத்தகையவள், பெய்யெனப் பெய்யும் மழை.

இல்லாள், தெய்வங்களைத் தொழும் ஆவலைத் தணித்துக் கொள்ளுதல் வேண்டும். கடவுளைத் தொழுதல் தவறில்லை. அக்கடவுளையும் கூடக் கணவனோடியைந்து தொழுதலே சிறப்பு. கடவுள் வழிபாட்டில் குறைகள் கூறுதல் இல்லை. பேரறிவு, பேராற்றல் பெறுதல் கடவுள் வழிபாட்டின் நோக்கம்.

உறக்கத்தில் இல்லாளுக்கு உணர்வு இல்லை, உறக்கம் தெளிந்தவுடன், உணர்வுகள் திரும்பியவுடன் தன் தலைவனை, கணவனை நெஞ்சத்தால் தொழுது வாழ்த்தி எழுதல் வேண்டும். இதனால் மறவாது நினைந்து வாழும் திறன் வளரும், இங்ஙனம் வாழும் பெண் தன் கணவருக்கும் பெய்யென வேண்டும்போது பெய்து உறுதுணையாய் அமையும் மழை போல் துணையா யமைவாள்.

பெய்யென வேண்டும் பொழுது பெய்யும் மழையே பருவ மழை, பருவ மழையினாலேயே பயிர்கள் வளரும்.

(தொடரும்)

நினைக்கநேர்ந்தவை.

திருக்குறள் சார்ந்த பேரவை, கழகங்களின் நிகழ்ச்சிகளை வெளியிட இப்பகுதிக்கு அனுப்புங்கள்,

தென்னிந்திய வரலாற்றுப் பேரவைப் பொதுக் குழு.

தென்னிந்திய வரலாற்றுப் பேரவையின் பொதுக் குழு 28—12—80 அன்று ஈரோடு பிரப்தெருவிலுள்ள தனிப் பயிற்சிக் கல்லூரியில் கூடியது; பல தீர்மானங்களை நிறைவேற்றின. முடிவில், கோபி, ஈரோடு, திருச்செங்கோடு, வேலூர் (சேலம்), புதுவை-ஆகிய பகுதிகளுக்கு ஆய்வுக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன.

O

திருவள்ளுவர் சங்கம், வெங்காலூர்.

28—12—80 அன்று திருவள்ளுவர் கழகக் கூட்டம் பிரகாசு நகர் இராம பத்தமண்டலியில் நடைபெற்றது. திரு. பி. தங்கவேலு வரவேற்புரை நிகழ்த்த, தமிழக அறநிலை இறைநெறிக் காப்பாளர் திரு. வி, கே. சீனிவாசாச்சாரி அடிகள் வள்ளுவர் வலியுறுத்திய அறம் என்னும் தலைப்பில் அரியதோர் உரையாற்றினார். 'உலகத்தில் எத்தனை நூல்கள் உள்ளதோ, அத்தனை நூல்களின் அடக்கந்தான் திருக்குறள், என்னும் கருத்தினையும் வலியுறுத்திப் பேசினார்.

25—1—81 அன்று திருவள்ளுவர் கழகக் கூட்டம் பிரகாசு நகர் இராம பத்தமண்டலில் தொடங்கியது. திரு. க. வேலு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். புலவர் திரு. சண்முக குப்புசாமி அவர்கள் 'வள்ளுவரும் பாரதியும்' எனும் தலைப்பில் திறனாய்வுரை ஆற்றினார்கள். புலவர் திரு. பசுமலை, ஐந்தாம் உலகத் தமிழ் நாட்டுச் சிறப்பு மலரிலிருந்து சில அரிய செய்திகளைக் கூறினார்கள்.

*

ஆத்தூர் நகரப் பொங்கல் விழாக் கழகம்

ஆத்தூர் நகரப் பொங்கல் விழாக் கழகம், உழவுக்கும் தொழிலுக்கும் வணக்கமும் வழிபாடும் செய்யுங் கழகம் ஆகும். தி. பி. 2012 சுறவம் 1, 2 (சனவரி 14, 15) ஆகிய இரண்டு நாட்களிலும் பாட்டரங்கம், வழக்காடு மன்றம், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் — ஆகியவற்றை ஆர்வத்தோடு கொண்டாடினார்கள்.

திருக்குறள் மன்றம் — சாத்தனூர்.

14—1—1981 அன்று சாத்தனூர் தமிழ்ப் பெருமக்கள் கூடித் 'திருக்குறள் மன்றம்' நிறுவினார்கள். தலைவர் திரு. ஆறுமுகம், க. மு., ப. மு., செயலர்; புலவர். திரு. இரா. பெருமாள், பொருளர்; திரு.சு. திருநாவுக்கரசு. குறள் வளர்ச்சிக்கும், குன்றாத் தமிழ் வளர்ச்சிக்கும் திருக்குறள் மன்றம் பணி யாற்றும்.

○

திருக்குறள் மரம் நாட்டு விழா-விழுப்புரம் பாவேந்தர் பாசறை.

2012, சுறவம் (தை) முதல் நாள் (14—1—81) அறிவன்கிழமை காலை 7-மணி யளவில் விழுப்புரம் பாவேந்தர் பாசறை சார் பில் விழுப்புரம் சட்ட மன்றப்பேரவை உறுப் பினர் திரு. கு. பா. பழநியப்பன் அவர்கள் தலைமையில் மாநில நிலவள வங்கித் தலைவர் திரு. மு. சண்முகனார் அவர்கள் திருக்குறளும் பாவேந்தர் பாடல்களும் எழுதப்பட்ட அழகான வண்ண வண்ண அட்டைகள் தொங் கும் 'திருக்குறள் மரம்' நாட்டி விழா தொடங்கியது. சிறப்புற விழா நிறைவேறியது.

○

திருச்சி நகரத் திருக்குறள் பேரவை.

15—1—81 அன்று மாலை 4-00 மணிக்குத் திருச்சி நகர திருக்குறள் பேரவையின் சார்பில் 'திருக்குறள் விழா' திருச்சி குமரி தனியார் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவிற்குப் பேராசிரியர் திரு. எம். சுப்பரமன் அவர்கள் தலைமை ஏற்க, மாவட்டச் செயலாளர் திரு. சா. நாகராசன் வரவேற்க, தமிழறிஞர்கள் பல்வேறு தலைப்பு களில் பேசினார்கள்.

●

திருக்குறள் பேரவை — அவலூர்பேட்டை.

தி. பி. 2012 சுறவம் திங்கள் 2, 3, 4, 10, 11, 15 ஆகிய ஆறு நாட்களிலும் திருவள்ளுவர் நாள் பாட்டரங்கம், உழவர் திருநாள் கருத்த ரங்கம், மகளிர் திருநாள், மாணவர் திருநாள், பட்டி மன்றம், நிறைவு நாள் — என வகுத்துக் கொண்டு வள்ளுவருக்குச் சிறப்பு விழா கொண்டாடினார்கள்.

○

திருக்குறள் பேரவை எடுத்த இலக்கியப் பெருவிழா!

செஞ்சித் திருக்குறள் பேரவையினர் தி. பி. 2012 சுறவம் 3-ஆம் நாள் (16—1—81) திருக் குறள் விழாவும், 4-ஆம் நாள் (17—1—81) சிலப்பதிகார விழாவும், 5-ஆம் நாள் (18-1-81) சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், தேம்பாவணி, சீறாப்புராணம் ஆகிய இலக் கியப் பெருவிழாவைச் செஞ்சி, ஊராட்சி ஒன் றிய நடுநிலைப் பள்ளியில் நடத்தினார்கள். திரு. பாவலரேறு பெருஞ்சித்திரனார், திரு.பா். ஔவை, துரை நடராசன், சிலம்புச்செல்வர் ம. பொ. சி. முதலியோர் கலந்துகொண்டு விழாவினை மிகச் சிறப்புறச் செய்தார்கள்.

●

திருவள்ளுவர் நாள் விழாக் குழு - ஈரோடு.

16—1—81 அன்று மாலை 6-மணிக்குச் செகநாதபுரம் காலனி எதிரில் எசு. கே. சி. சாலையில் (S. K. C. ரோடு) விழாக் குழுவினர் திருவள்ளுவர் விழா கொண்டாடினார்கள். தெற்குக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. என். சேதுநாதன், க. அறி., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்க, புலவர் இராசு சிலையைத் திறந்து வைக்க, திரு. ம. அருள்மணி அவர்கள் சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

○

தென்காசி திருவள்ளுவர் கழகம் கொண்டாடிய தமிழ்த் திருவிழா.

17—1—81 அன்று மாலை 5—30 மணிக்குப் பேரா. திரு. சோணாசலம் (பிள்ளை) க. மு., அவர்களின் தலைமையில் விழா தொடங்கியது. 'பாரதிதாசன்', கண்ணதாசன், 'கவிமணி தேசிகவிநாயகம் (பிள்ளை)' 'குற்றாலக் கவிராசர்' 'இரசிகமணி டி. கே. சி.' ஆகியத் தலைப்புகளில் கருத்தரங்கம் நிறைவேறியது. 18—1—81-ஆம் நாள் மாலை 5-15 மணியள வில் உயர்திரு சி சு. மணி, க. இ., அவர்களை நடுவராகக் கொண்ட பட்டிமன்றம் தொடங் கியது. தலைப்பு: பாரதி உள்ளத்தில் விஞ்சி நின்றது சமுதாய உணர்வா? சமய உணர்வா?

கற்கண்டு, கற்கண்டு மோதிக் கொள்வதைப் போல் இரு அணியினரும் மோதிக்கொண்டார்கள். விழா இனிதே நிறைவேறியது.

○

குருகுலம் கொண்டாடிய பொங்கல் விழா.

தமிழ் மறையில் குறிப்பிடப்படும் 'அறம், பொருள், இன்பம்' என்பதும், பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல் காணும் பொங்கல் என்பதும் ஒன்று.

இதற்குக் குருகுலத்தில் 13—1—81 முதல் 16—1—81 வரை திருக்குறள் விழாவும், 17—1—81 அன்று திருக்குறள் கருத்தரங்கும், 18—1—81 அன்று பட்டி மன்றமும், 19—1—81 வழக்காடு மன்றமும் திருக்குறள் பீடாதிபதிகள் முன்னிலையிலும் ஆண், பெண் பள்ளித் தலைமையாசிரியர் தலைமையிலும் மாலை 3 மணிக்கும், மாட்டுப்பொங்கல் மட்டும் மாலை 9 மணிக்கும் தொடங்கிச் சிறப்புறக் கொண்டாடினார்கள்.

○

திருவள்ளுவர் கழக ஆண்டு விழா திருத்தவத்துறை.

தி. பி. 2012 சுறவம் 5-ஆம் நாள் (18—1—81) மாலை 6 மணிக்குத் திருத்தவத்துறை (இலால்குடி) ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளியில் திருத்தவத்துறைத் திருவள்ளுவர் கழகத்தாரால் திருவள்ளுவர் கழக ஆண்டு விழா தொடங்கியது. அவ்விழாவிற்குத் தமிழிசைத் தென்றல், குடந்தை. ப. சுந்தரேசனார் அவர்கள் தலைமை தாங்கிடவும் சித்தாந்தநன்மணி திரு. கு. சுந்தரமூர்த்தி, க. மு., அவர்கள் குமர குருபரர் காட்டும் சைவ சித்தாந்தத்திறன் என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றிச் செவிக்குப் பொங்கல் விருந்து சிறப்புற வழங்கினார்கள்.

●

திருச்சபை நடத்திய திருவள்ளுவர் விழா.

தி. பி. 2012 சுறவம் 9-ஆம் நாள் (22-1-81) அகத்தியர் அறநெறி திருச்சபையின் சார்பில், தஞ்சை நாள் சந்தை சாலையிலுள்ள பெசந்து தங்குமனையில் விழா தொடங்கியது. திரு. எசு. சதாசிவம், முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் தலை ஏற்க, கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் திரு. பி. விருத்தாசலம் அவர்கள் நல்லாசிரியர் விருது பெற்ற திரு. வேல் சம்பந்தமூர்த்தி அவர்களைப் பாராட்டி உரையாற்றினார்கள் திரு. மது. ச. விமலானந்தம், குடந்தை அரசர் கல்லூரி பேராசிரியர் அவர்கள் சிறப்புரையாற்றி விழாவினைச் சிறப்பித்தார்கள்.

○

விராலிமலை முத்தமிழ் மன்றத் தொடக்க விழா.

தி. பி. 2012 சுறவம் 9-ஆம் நாள் (22—1—81) மாலை 6 மணிக்கு அருணகிரிநாதர் விழா மண்டபத்தில், புலவர் ச. சந்தானமூர்த்தி க. இல., அவர்களின் தலைமையில் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் முத்தமிழ் மன்றத்தைத் தொடங்கி வைத்து முத்தமிழ் என்னும் பொருள் பற்றி சிறப்புப் பேருரை ஆற்றினார்கள்.

✻

திருக்குறள் பேரவை — வாழியூர் கிளை.

தி. பி. 2012 சுறவம் 10-ஆம் நாள் (23—1—81) திருக்குறள் பேரவை, வாழியூர் கிளை திருக்குறள் விழா புலவர் திரு. சி. சிவசண்முகம் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடியது. திருக்குறள் புரட்சி நூலா? அற நூலா? என்னும் தலைப்பில் புலவர் திரு. மு. கன்னியப்பன், இல. இ. அவர்களை நடுவராகக் கொண்டு நடைபெற்றது.

✻

திருக்குறள் பேரவை, நாமக்கல்.

தி. பி. 2012 சுறவம் 11, 12 (24, 25—1—81) காரி ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் முறையே சிலப்பதிகார விழாவும் திருக்குறள் விழாவும் நாமக்கல் கவிஞர் அரங்கில் சிறப்புற நடைபெற்றன.

பாட்டரங்கம், பட்டி மன்றம், பதின்கவனக நிகழ்ச்சி, கருத்தரங்கம், இசைச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன. திருமிகு திருக்குறளார் அவர்கள் பங்கேற்றனர்.

○

சேலம், திருக்குறள் பேரவை.

தி. பி. 2012 சுறவம் 11-ஆம் நாள் (24—1—81) காரிக்கிழமை மாலை 4 மணிக்குக் கத்தூரி நிலையத்தில் திருக்குறள் பேரவையினர் திருவள்ளுவர் விழா கொண்டாடினார்கள். விழாவிற்குச் சேலம் மாவட்டத் திருக்குறள் பேரவைத் தலைவர் வி. ச. கந்தசாமி தலைமையேற்க, சங்கொலி ஆசிரியர் சோலை-இருசன் அவர்கள் வரவேற்க, வடிவேலு, மு. முத்துக்காளத்தி, புலவர் மி.மு. சின்னாண்டார் ஆகியோர் பாராட்டுரைக்க, மலேசிய நாட்டின் முதுதமிழ்ப் பெரும் புலவர், சுவாமி இராமதாசர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றி வள்ளுவர் விழாவைச் சிறப்படையச் செய்தார்கள்.

○

திருவள்ளுவர் மன்றம் — கோயிற்பட்டி ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா,

தி. பி. 2012 சுறவம் (தை) 11, 12 (24, 25—1—81) காரி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் கோயிற்பட்டித் 'திருவள்ளுவர் திடலில்' திருவள்ளுவர் மன்ற ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்புறக் கொண்டாடினார்கள்.

24—1—81 அன்று தாமரைத் திரு. நெ. து. சுந்தர வடிவேலர் அவர்கள் திருக்குறட் சிந்தனை அரங்கிற்குத் தலைமை தாங்கியும். 25—1—81 அன்று கழக இலக்கியச் செம்மல் இரா. இளங்குமரன் அவர்கள் பட்டி மன்றத்திற்குத் தலைமைதாங்கியும் செந்தமிழ்ப் பொங்கலைச் செவிநிறைய வழங்கினார்கள்.

※

திருவள்ளுவர் இலக்கிய மன்றம் வாணுவம்பேட்டை.

தி. பி. 2012 சுறவம் 12-ஆம் நாள் (25—1—81) ஞாயிறு மாலை 4-15-க்குப் பாவலர் நாரா நாச்சியப்பன் அவர்கள் தலைமையேற்க பலபாவலர்கள் பாடினார்கள். பின், திரு. பா. சந்திரசேகரன் நடுவராக அமர, 'பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பெரிதும் நெஞ்சை ஈர்ப்பது அவலச்சுவையே, வீரச்சுவையே!' என்னும் தலைப்பில் சிறப்புறப் பட்டி மன்றம் நிறைவேறியது.

காசி பாளையம் வள்ளுவர்மன்றம்.

தி. ஆ. 2012 சுறவம் 15-ஆம் நாள் (28—1—81) அறிவன் மாலை 7 மணிக்குக் காசிபாளையம் வள்ளுவர் மன்றத்தினரின் சார்பில் முதலாண்டு நிறைவு விழா எ. இராசமாணிக்கம், க. இ., ஈரோடு மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

குறளியம் ஆசிரியர் திரு. வேலா இராசமாணிக்கம் அவர்கள் 'மறைக்கப்பட்ட மறை' என்னும் தலைப்பிலும், திரு. தி. க. இராசமாணிக்கம் அவர்கள் வாழ்க்கை நெறி என்னும் தலைப்பிலும் சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

●

பள்ளியில் பதின்கவனக நிகழ்ச்சி — தலைமை :- குறளியம் ஆசிரியர்.

ஈரோடு இரயில்வே குடியிருப்பு—நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் 29—1—81 அன்று பிற்பகல் 4 மணிக்கு மாணவர் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம், குறளியம் ஆசிரியர் திரு. வேலாஇராசமாணிக்கம்அவர்கள் தலைமையில் தொடங்கியது. தலைமையாசிரியர் திரு. வெ. வெங்கட்டராமன் க, இ., ப. இ., அவர்கள் வரவேற்புரையாற்றத் தலைவர் நினவுக் கலையைப் பற்றி உரையாற்றினார். பின்னர், நினவுக்கலை ஏந்தல் திரு. பெ. இராமையா அவர்கள் பதின்கவனக நிகழ்ச்சிகளைப் பார்ப்போர், கேட்போர் — அனைவரும் வியக்கும்படி நிகழ்த்தினார். தலைமைத் தமிழாசிரியர் புலவர். சம்பங்கிராமன், இல. இ., அவர்கள் நன்றி நவில நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

※

இரங்கல் ஊர்வலம் - ஏரல், கொற்கைத் தமிழ்க் கழகம்.

18—1—81 மாலை 6 மணிக்குத் திரு. இ சொ. முத்து அவர்கள் தலைமையில் கொற்கைத் தமிழ்க் கழக உறுப்பினர்கள் மறைந்த பாவாணருக்காக அமைதி ஊர்வலம் வந்தார்கள். முடிவில் இரங்கற்கூட்டம் நடந்தது. திரு. சிவசங்கு, திரு. ஐயாத்துரை, திரு. சங்கர பொன்னம்பலம் போன்றவர்கள் இரங்கற்கூட்டத்தில் பேசினார்கள்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு

பாரதத் தலைமை அமைச்சர் அழைப்பு முதல் பாவாணர் மறைவு வரை உலகத்தமிழ் மாநாடு தொடர்பான நிகழ்வுகளில் நேர்ந்த சிக்கல்களை நாம் அறிவோம். எத்தகைய பணியாக இருந்தாலும், செய்பவரைத், தன்னாக்கம் பெறச் செய்கிறார் எனத் தூற்றாத அரசியல் இன்றில்லை. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று ஏற்கும் அரசியலும் இன்றில்லை.

எவ்வாறோ, மாநாடு முடிந்து, வெளி நாட்டாரெல்லாம் சென்று, வரவுசெலவுகளைப் படைக்கின்ற நிலைகூட வந்துவிட்டது. மாநாட்டு நிலைகுறைகளை எல்லாம் தாங்கிப் பல ஏடுகளில் செய்தி வந்துவிட்டன. போற்றியும் தூற்றியும் போட்டி போட்டுக்கொண்டு செய்திகள் வந்தன, வருகின்றன.

ஆனால் ஒன்று. இத்தகு பெரும் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திச் சிறப்பிப்பதில் சில தவறுகள் நேரத்தான் செய்யும். அவைகளைக் குறளியம் பொருட்படுத்தவில்லை. ஏன்? குறளியம் எழுப்பிய வினாவிற்குக்கூட தமிழக முதல்வரிடமிருந்து பதிலில்லைதான். என் செய்ய ?

குறளியத்தின் பார்வையில் பட்ட மாநாட்டு நிகழ்ச்சிகளைக் குறளியப் படிக்குநர்களிடம் கலந்துகொள்ளும் முறையான் சிலவற்றைப் படைக்கிறோம்.

● மாநாட்டு மலர் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. பாதுகாக்கப்பட வேண்டிய மலர். அப்பெரும் பணியில் சிறப்புடன் பணியாற்றிய சிலம்பொலி திரு. செல்லப்பனார் போன்றவர்களை எத்தனைமுறை பாராட்டினாலும் தகும்.

● மறைமலையடிகளார் சிலை வைக்கப் பெறாதது குறை; குறைதான்.

● தமிழக அமைச்சரவையின் பெருமையைக் காப்பாற்றும் வண்ணம் மிகச் சிறந்த இலக்கிய நயம்மிகு சொற்பொழிவாற்றினார் மாண்புமிகு அமைச்சர் கா. காளிமுத்து, க.மு., அவர்கள்.

● தமிழ் உடன்பிறப்பு உறவன்று; தாய்-மகள் உறவு என்று கூறித் தனிப் பெருமையைத் தமிழக முதல்வர் மாண்புமிகு ம. கோ. இரா. அவர்கள் பெற்றனர்.

● ஆட்சியினரும், அதிகாரிகளும் மேடைகளிலும், நாற்காலிகளிலும் இடம் பிடித்துக் கொண்ட அளவு தமிழறிஞர்கள் இடம் பிடிக்கவில்லை; இடம் தரப்படவில்லை.

● உலகத் தமிழ் மாநாட்டுச் சின்னத்தில் திருக்குறளுக்குச் சிறப்பிடத்தை மறவாமல் தந்தமை பாராட்டுக்குரியது.

● பஃபெட் (Buffet) முறையில் வழங்கப்பட்ட உணவு முறைகளில் பணச்செலவும் அதிகம்; மனநிறைவும் இல்லை.

● உலகத் தமிழ் மாநாட்டில் அமைச்சர்களை முன்னிலைப்படுத்தியதைவிட முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. வி., தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறளார் போன்றவர்களை முன்னிலைப்படுத்தியிருக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்த பெருமக்கள் சிலரின் கருத்துகள் இவை. அவர்களைப் பார்க்க வேண்டும்; பேசவேண்டும் என்ற ஆவலை நிறைவுசெய்து கொள்ள முடியவில்லையாம்.

● வெளி நாட்டிலிருந்து வந்த அறிஞர்கட்குக் குறளிய இதழ் சார்பாக "KURALISM" என்ற ஆங்கில நூல் இலவயமாக அளிக்கப்பட்டது. இந்நூலைப் பெற்றவர்கள் .... குறளின் புதிய ISM எனக்கூறி வியந்தனர். நாளைய உலக நடப்பிற்குப் புதியதோர் அரசியலமைப்பை உருவாக்கித் தரப்போவது KURALISM தான் எனப் பல்வேறு சான்றுகளுடன் குறளிய அணியினர் கலந்துரையாடியது மேலை நாட்டினர் பலரைக் கவர்ந்தது.

● இறுதியாக ஒன்று .. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது முதல் நாள் உரையில் கூறிய செய்தியொன்றைப் பற்றித் தமிழகத்தில் பேசாதார் யாருமில்லை. அதுதான், '' காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் 5-வது உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தக் கேட்டுக் கொண்டதாகக்

கூறியதே'' (இப்பகுதியைத் தமிழரசு இதழில் நீக்கிக்கொண்டனர்.)

இதைத் தமிழக முதல்வர் தம் உரையில் பேசியவுடனேயே, மேடையிலே வீற்றிருந்த பல அமைச்சர் பெருமக்கட்கும் தமிழறிஞர் கட்கும் முகத்தில் ஈயாடவில்லை. என்னமோ போலாகி விட்டதைக் கண்டோம். ஏன் அந் நிலை என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவர்கள் பெரியார், பேர றிஞர் அண்ணா வழி வந்தவர்களன்றோ !

ஆனாலும் நாம் பாராட்டுகிறோம், குறள் வழி.... தமிழ்வழி சிந்திக்கிறோம். ''பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்பதன்றோ நம் நெறி.

காஞ்சிப் பெரியவாள் அவர்கள் மாறினால் —தன் மொழி, தாய் மொழி, தமிழ் மொழியே எனப் பற்றுக்கொண்டு மாறினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். இவரும் இவரது சீடர் களும் தாய்மொழியாய்த் தமிழ்மொழியையே பெற்றிருந்தும் வேற்றுமொழி நாட்டத்தில் உள்ளனரே ! இவர்களைத் தம் வழிப்படுத்த வேண்டும் என்றதோர் பெருநெறிவழிப்பட்டே தமிழக முதல்வர் இவ்வாறு பேசியுள்ளார் என நினைக்கிறோம்,

இன்றுள்ள நிலையில் இப்பணியை வெற்றி யுடன் முடிக்கும் அரிய முயற்சியில் இறங்குவா ரெனில் இதைவிட அவரது வாழ்நாளில் அரிய பணியொன்று இருக்கமுடியாது.

இன்று தமிழ்நாட்டில் வாழும் இசுலாமியர் கள் அரேபியர்களா ? இல்லையே, தமிழர்கள் தானே ! அதேபோல் கிறித்தவர்களும் தமிழர் கள்தானே ! ஆனால் வருணாசிரம மதத்தைத் தழுவியவர்கள் மட்டும் தம்மை ஆரியம், பார்ப்பணியம் எனத் தனிமைப்படுத்திக் கொண்டு தமிழர்களாக தமிழுக்காக வாழாத நிலை இன்றும் இருக்கிறது. (ஒருசிலர் இதற்கு விதிவிலக்காய் வாழ்ந்து புகழ் பெற்றனர். திருஞானசம்பந்தர் முதல் பரிதிமாற் கலைஞர் வரை).

இசுலாத்தை, கிறுத்துவத்தை நம் நாட்டில் நிறுவ வந்த மேலை நாட்டு மக்கள் இன்று இங்கில்லை. அதுபோல் வருணாசிரமத்தை நம் நாட்டில் நிறுவிய மேலை நாட்டு மக்களும் இன்று இங்கில்லை. அக்கருத்தில் குடியேறி இன்றுள்ளவர்கள், நம் தமிழக, இந்திய மக்கள் தான். இதைக் கருத்தில் கொண்டுதான் தமிழர் பேரவைத் தலைவர் திரு. நா. மகா லிங்கம் அவர்களும் இந்நாட்டுப் பார்ப்பனர் களும் தமிழர்களே என்றார்.


1955 இல் சர் சி. பி. இராமசாமி அவர் கள், சேலத்தில் தொடங்க வந்திருந்த '' பிரா மண சேவா சங்கத்தைக் கண்டித்துக் கலைக் கச்செய்தார். " சாதி சங்கங்கள் வைப்பதில் பொருளில்லை ; அது நாட்டிற்கும் நமக்கும் நல்லதல்ல; எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் இந்நாட்டு மக்களில் ஒன்றாகி, ஒரே குருதியாகிவிட்டோம் நாம். பின் பிரிவு மனப் பான்மை எதற்கு ? யாரோ சாதி சங்கங்களை வைக்கிறார்களே என்று நாமும் வைத்து நம்மைத் தனிமைப்படுத்திக்கொண்ட மடமைக் காளாகாதீர்கள் என்று கூறிக் கண்டித்தார்.

இராசாசி போன்றவர்கள் காஞ்சி சங்க ராச்சாரியார் 1937 இல் விடுத்த அறிக்கை களையும் மறுத்து நால்வருணம் பேணாது தம் மகளையே கலப்பு மணம் செய்வித்தார். மற்றும் கல்கி திரு. சதாசிவம் (ஐயர்) அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த திருவாட்டி எம். எசு. சுப்புலட்சுமி அவர்களைக் கலப்பு மணம் செய்ததை ஆதரித்தார். மேலும் ஆதி திராவிடர்கள் ஆலயத்துள் வரு வதற்குத் துணை நின்றார்.

தமிழக முதல்வர் அவர்களே !
''ஆலயத்துள் அருந்தமிழ்;
அவர்களது
எண்ணங்களில் தமிழ், தமிழ்''

என்ற உணர்வை ஏற்படுத்திவிடுங்கள், ''பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்ற கொள் கையைக் காஞ்சிப் பெரியவர்களை ஏற்கச் செய்யுங்கள். இஃதே குறளறம், தமிழறம் எனச் சொல்லுங்கள்; துணை நில்லுங்கள்,

—வீரவேலனார்



'வேலா' விழாவின் மகிழ்ச்சி வாழ்த்து!

புலவர் இரா. வடிவேலன் க.மு.,
(பல சிறந்த புதினங்களின் படைப்பாளர்)

வேலா நடத்தும் வெற்றி விழாக்கள்
ஆலாய் விரிந்தே அருந்தமிழ் உணர்வை
ஈரோட்டு மக்களின் இனிய நெஞ்சினில்
வேரோட்டி நாளும் விளங்குதல் காண்கிறேன்!

பசுமைப் பணிமன்றச் செயல்களும், தொடர்ந்த
விசும்புயர் வீர சைவ நெறிகளின்
இயக்கமும் இங்கே ஏற்றம் பெறுதலை
இயக்க உணர்வுடன் அறிகிறேன்; எழிலார்
திருக்குறள் பேரவை தீந்தமிழ்த் தவத்திரு—
அருள்மிகு அடிகளின் தலைமையில் அமைந்து
அறுகுபோல் படரும் நிலைமையில் இங்கும்
பெறுகுமார் வத்தால் பெரியார் மா வட்ட
அமைப்பாள ராகி அருங்குறட் பேரவை
இமையா நாட்டம் இலங்க ஊர்தொறும்
படைத்தும், புதுக்கியும் பணிபல இயற்றி
வருவத னோடு பெரும்பொருட் செலவில்
'குறளியம்' என்னும் குறிக்கோள் நிறைந்த
திறம்படு இதழைச் சீர்மிகக் கொணர்ந்தும்,
உலகக் குமுகம் ஒன்றிய உணர்வுகள்
தழைக்கச் செய்வது தன்னே ரில்லா
வள்ளுவ மென்றே வானுரை யாற்றியும்,
உள்ளம் புதுக்கும் உயர்நெறி நூல்கள்
பற்பல பதிப்புகள் படைத்தும், தந்தையார்
'வேலா' புகழினைக் கோலாய்ப் பிடித்தும்
ஆற்றுந் தொண்டு போற்றற் கரியதே!

இவ்வாண்டும், அவ்வழி —

சிவவுணர் வேற்றும் அரங்கும்; சீர்சால்
தவவள் ளுவரின் தகைமைசால் விழாவாய்ப்
பட்டி மன்றமும் பதின்கவ னகமும்
தட்டி வழக்குரை யாடு மன்றமும்
நிகழச் செய்தார்; நீள்புகழ் கொண்டார்
'வேலா' அரச மாணிக்க னார்! நலம்
சூழ்க நற்பணி உயர்ந்தே!
வாழ்க பொன்னி மணலினும் நெடிதே!

KURALIYAM MONTHLY JOURNAL Regd. No. TN/ED/17
Registered with the Registrar of News Papers in India Under No. 38/2/AL/80/NT.

திருக்குறள் பேரவை

கோவை மாவட்ட மாநாடு.

தி. ஆ. 2012 சுறவம் 26-ஆம் நாள் (8-2-81) ஞாயிறு காலை 9 மணிக்குக் கோவை நகரச் சன்மார்க்கச் சங்க மண்டபத்தில் தொடங்கவுள்ளது.

அம்மாநாட்டிற்குத் திருக்குறள் பேரவையின் மாநிலத் தலைவர் தமிழ் மாமுனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிகழ்ச்சி நிரல்.

ஞாயிறு முற்பகல் 9-00 மணிக்கு விழாத் தொடக்கம்.

தலைமை :
தவத்திரு. வீரசைவப் பேரூர் அடிகளார் (துணைத் தலைவர், தமிழ்நாடு திருக்குறள் பேரவை)

வரவேற்பு : தஞ்சை திரு. நடராசன்

அறிக்கை படித்தல் : திரு. அ. சுதாகர்

தொடக்கவுரை : திரு. கே. ஆனந்தராசா பி. இ., எம். ஐ. இ.

திருவள்ளுவர் படத்திறப்பு : தருமப்பிரவர்த்தனா திரு. சி. பி. எம். ஐயா

வாழ்த்துரை :
தவத்திரு சற்குரு இராமசாமி
திரு. இரா. மோகன் டி. காம்., எம். பி.,
திரு. கோவைத்தம்பி ச. ம. உ.
திரு. இரா. சனார்த்தனம் மே. அ. உ.
திரு. நிதிபதி சி. இராமகிருட்டிணன்
திரு. செ. முத்துசாமி மே. அ. உ.
திரு. பண்டுவர் பா. அர. சுப்பையன்
திரு. கே. சிவசாமி ஐயா

சிறப்புரை : தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பாட்டரங்கம் தொடக்கம்: முற்பகல் 11-30

தலைமை : பாவலர் காந்தி தாசன்
வரவேற்பு : பாவலர் தருமலிங்கம்
திருமிகு பாவலர்கள் :
தமிழமுதன், சக்திக்கனல், காராளன், இரவீந்திரன், வீரப்பன், சுரேந்திரன், தமிழினியன்.
திருவாட்டி ரோகிணி
திருமதி பிலோமினா தருமராசு.
வாழ்த்துப்பா ; சிதம்பரநாதன், க இ., நல்லாசிரியர் இளங்கோவன்
நன்றி ; புலவர் மயில் இளந்திரையன், க. மு.,

கருத்தரங்கம் : பிற்பகல் 2-30 மணி.

தலைமை : முனைவர், முத்தமிழ்க்காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம்
வரவேற்பு : திரு. அ. கிருட்டிணமூர்த்தி
திருவாளர்கள் :
வானொலி கோ. செல்வம், புலவர் மருதவாணன், புலவர் புவியரசு, குறளியம் ஆசிரியர் — வேலா இராசமாணிக்கம், பேரா. ம. ரா. போ. குருசாமி, புலவர் நயினார் முகம்மது, பர். கே. வி. கிரி, சண்முகம், க. மு.,
நன்றி நவிலல் : திரு. கு. கி. கந்தசாமி

பட்டி மன்றம் : நடுவர்-தமிழ் மாமுனிவர், தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
வரவேற்பு : திரு. கு. வெ. தங்கவேல்
தொடக்கவுரை : திரு. ந. சண்முகம், மாநிலப் பொதுச் செயலாளர்,
பொருள் ; திருக்குறளில் மேலோங்கி நிற்பது இலக்கிய உணர்வா? அற உணர்வா?

இலக்கிய உணர்வே அணியில் திரு. பேரா. அமுதன், திரு, தட்சிணா மூர்த்தி, திரு. இராசேந்திரன், செல்வி மனோன்மணி.
அறஉணர்வே அணியில் திரு. பா. ந. கோபாலன், திரு. கா. ச. அப்பாவு, திரு, வேலாயுதம், திருமதி. இராதா பாலசுப்பிரமணியம்.
நன்றி : புலவர் ம. இளங்கீரன், மாவட்டச் செயலர்.

மாவட்ட வாரியாகத் திருக்குறள் பேரவை மாநாடுகள் தொடர்ந்து நடைபெற்றுப் பின் திருக்குறள் பேரவை மாநில மாநாடு நடைபெறும்.

ஆசிரியரும் – அச்சிடுபவரும்—வெளியிடுபவரும்: வேலா ஈ. வே. இராசமாணிக்கம், வேலா அச்சகம், 3, மண்டப வீதி, ஈரோடு-638 001.